www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

ஜூன்.23-29,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S ... TAMIL WEEKLY முரசு 158



## புலிகள் உள்ளே பூசல்

## தமிழகம் திரும்புமா

## அன்ரன் பாலசிங்கம் எங்கே?

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## கமலின் கலகல பேட்டி

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## தவறான சித்திரங்கள்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

யாழ்-குடாநாட்டில்
சகஜ வாழ்க்கை திரும்பிவிட்டதாக
அரச பிரசார சாதனங்கள்
தினசரி செய்தி சொல்லுகின்றன.

அத்தியாவசியப் பொருட்களுக்காக
அங்கே மக்கள்
நீண்ட கியூ வரிசைகளில்
காத்திருப்பதையும்
தொலைக்காட்சி காண்பிக்கிறது.

இரண்டும் ஒன்றோடு ஒன்று முரண்பட்ட
விஷயங்களாகவுள்ளன.
சகஜ வாழ்க்கை என்பது
நிவாரணப் பொருட்களை
எதிர்பார்த்திருக்கும் வாழ்க்கையல்ல.

வழங்கப்படும் நிவாரணமும்
போதியளவாக இருக்கிறதா
என்பதும் கேள்விக்குரியதே!

மக்கள் தமது
சொந்த வீடுகளுக்குத் திரும்பினாலும்,
அந்த வீடுகளில்
போரின் கரங்களால் பட்ட
பலத்த காயங்களும், சேதங்களும்
புனரமைக்கப்பட நாளாகலாம்.

வீதிகளிலும், மர நிழல்களிலும்
நிர்க்கதியாக வாழ்வதைவிட
சொந்த வீடுகளுக்கு
திரும்பியிருப்பது
நிச்சயமாக ஓரளவு நிம்மதிதான்!

ஆனால், திரும்பிய மக்கள்
பாலும் தேனும் பாகும் பருப்பும்
நாலும் கலந்துண்டு
சுகபோகமாக வாழ்கிறார்கள்
என்று சொல்வது பொருத்தமல்ல.

புலிகள்-
தாம் தடுத்தும்-மக்கள்
திரும்பிச்சென்ற கோபத்தில்
"இடம்பெயர மறுத்தவர்கள்,
சுகம் தேடி வாழ்பவர்கள்" என்று
சொல்லத் தொடங்கியுள்ளனர்.

தமது கட்டுப்பாட்டில் உள்ள
மக்களுக்கும்
அரசின் நிவாரணப் பொருட்களையே
புலிகளும் வழங்கி வருகின்றனர்.

அரசின் நிவாரணப் பொருட்கள்
வழங்கப்படாவிட்டால்,
தமது சொந்த விநியோகம் மூலம்
இடம் பெயர்ந்த மக்களுக்கு
நிவாரணம் வழங்க
புலிகளாலும் முடியாது!

வன்னி பெருநிலப்பரப்பில்
உள்ள யாழ் மக்களுக்கு
தக்க இடவசதி செய்துகொடுக்கவே
புலிகளால் முடியாதிருக்கிறது.
அதனால் பாடசாலைகள்
இயங்க முடியவில்லை.

"அரசாங்கத்தின் உதவி தேவையில்லை;
சொந்தப் பலத்தில் சமாளிப்போம்"
என்று புலிகளாலும் கூறமுடியாது.
அதனால்தான் தமது கட்டுப்பாட்டு
பகுதிகளிலும் அரச நிர்வாகம்
செயற்பட புலிகள் அனுமதிக்கிறார்கள்.

அரசின் நிவாரணப் பொருட்களை
புலிகளும் தமது தேவைக்கு
எடுத்துக் கொள்வதும் தெரிந்ததுதான்!

எனவே- யாழ் குடாநாட்டில்
உள்ள மக்கள்
அரசாங்கத்தின் நிவாரணத்தை
நாடுவதும், பெறுவதும்
புதிய விஷயமல்ல;
யாழ்ப்பாணத்தில் புலிகள்
இருந்தபோதே நடந்ததும் அதுதான்!

யாழ் குடாநாட்டில்
தற்போதுள்ள ஒரு வித்தியாசம்-
முன்னர் புலிகள்
ஆயுதங்களோடு நின்ற வீதிகளில்
இப்போது படையினர்
ஆயுதங்களோடு நிற்கின்றனர்.

"யுத்தத்தில் தளப் பிரதேசங்கள்
மாறுவது சகஜம்தான்"
என்றும் புலிகள் சொல்கிறார்கள்.
அது உண்மைதான்.

தளப்பிரதேசம் மாறும்போதெல்லாம்
மக்களும் இடம் மாற வேண்டும்
என்று நினைப்பதுதான் தவறு.

சொந்த இடத்திற்கு
திரும்பியவர்களெல்லாம் துரோகிகளுமல்ல;
அரசாங்கத்தை ஆதரிப்பவர்களுமல்ல;
வன்னிவரை இடம் பெயர்ந்த
அனைவரும் புலிகளின் நேசர்களுமல்ல.
வன்னியில் இருந்து
யாழ் செல்ல புலிகள்
சுதந்திரம் கொடுத்துப் பார்த்தால்
உண்மை புரியும்!

யாழ் குடாநாட்டு
மக்கள் தொடர்பாகவும்
அங்குள்ள நிலவரம் தொடர்பாகவும்
இரு தரப்புமே
தமது விருப்பு-வெறுப்புப்படியே
சித்திரம் வரைந்து காட்டுகின்றன.
இரண்டுமே ஏற்கக்கூடியதல்ல.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்

## ஆன்மீகம்



### ஆசீர்வாதம்

ஆலயத்துக்குச் சென்று வழிபடவேண்டும். வீட்டிலும் ஜெபிக்க வேண்டும். திருமறையை வாசிக்க வேண்டும், அப்போது தான் கடவுள் நம்மை ஆசீர்வதிப்பார்; நமது தேவைகளை நிறைவாக்குவார் என்ற எதிர்பார்ப்புகளோடு கடவுளை வணங்குகின்ற மக்களை நாம் காணுகின்றோம்.

ஆசீர்வாதம் என்பது நிறைவிலும் வெறுமையிலும் கடவுளுக்குள் சந்தோசமாக வாழ்வாதாகும்.

நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். (ஆதி 12:2) இவ்வாறு ஆண்டவர் ஆபிரகாமுக்கு வாக்குக் கொடுத்தபோது தன்னை ஆண்டவர் ஆசீர்வதிக்கப் போகிறார், தன்னை பெருமைப்படுத்தப் போகிறார், என்றெண்ணி தான் கடவுளுக்கு கீழ்ப்படியாமல் கடவுளின் மேல் வைத்த நம்பிக்கையிலேயே கடவுளுக்கான காரியங்களை செய்கின்றார். இதனால் தான் ஆபிரகாமை விசுவாசிகளின் தந்தை என்கிறோம்.

ஆசீர்வாதத்தை நம்பி ஆண்டவரின் மேல் நம்பிக்கை வைக்கின்றபோது, நாம் எதிர்பார்த்தவைகள் நிறைவேறாமல் போகின்ற போது, கடவுள் மேலுள்ள பற்றுறுதியும் தளர்ந்து போய் விடும். எனவே நம்முடைய வழிபாடுகளும் காரியங்களும் ஆசீர்வாதத்தை நம்பியிராமல், ஆசீர்வாதத்தைத் தருகின்ற ஆண்டவரின் மேல் இருக்கும்போதுதான் நாம் உண்மையான விசுவாசிகள் ஆவோம்.

சகோ.எஸ்.யேசுநாதன், மெதடிஸ்த ஆலயம், செங்கலடி.

### மணப்பெண் பற்றி மா நபி கூறியது

ஒரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் திருமணப் பெண்களில் சிறந்தவர் யாரெனக் கேட்கப்பட்டது. அதற்கவர்கள்:

"கணவர் முக மலரக் கணவனிட்ட கட்டளைக்கு அடிபணிந்து தன் உடலாலும் பொருளாலும் அவருக்கு ஒத்தாசை புரிந்து திருப்தியைப் பெற்ற திருமணப் பெண்ணே" என்று கூறினார்கள். இவ்வாறான இல்லாள் மரணித்து விடுவாளாயின் அவள் செல்லுமிடம் சொர்க்கமே" என்றுரைத்தார்கள்.

"ஒருவர் மற்றொருவருக்கு சிரம் தாழ்த்த (வணங்க) நான் பணித்திருப்பின் மனைவி தன் கணவனுக்கு சிரம் தாழ்த்த வேண்டுமெனக் கூறியிருப்பேன்" என்றார்கள்.

மணப் பெண் பற்றி மா நபி கூறியதை இக்கால திருமணப் பெண்கள் இதயத்தில் கொள்ள வேண்டும்

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.155

### பரிசுக்குரிய கவிதை

******************************



### எச்சரிக்கை

சக்களத்தி சண்டையிலே
சிக்கி விட்ட சின்னத்துரை
ரெண்டு பெண்ணைக் கட்டியதால்
மத்தளம் போல் ஆகி விட்டார்;
இந்தச் செய்தி- ஆண்களுக்கு
முரசு தரும் எச்சரிக்கை!

சு.புருஷோத்மன்-சாகாம வீதி,
அக்கரைப்பற்று-8.

**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:**

### விலக்கு

"பிடிப்பது யார்?"
"பிடிபட்டது யார்?"
அட விலக்கு-உடனே
விலக்கு......!
இவர்கள்
மனிதர்கள்!

பாலகமலன் - வவுனியூர்.

### வண்டு

மலருக்கு மலர் தாவும்
வண்டினமோ-பல
மங்கையரை மஞ்சத்தில்
கண்டவனோ-எந்த
பேதைக்கு நெஞ்சத்தில்
சுட்டவனோ?

ரஷீனா ரஷீன்-பூலாச்சேனை.

### ஜாக்கிரதை

வீதியில் செல்லும்
பெண்களுக்கு
வில்லங்கம் செய்யும்
ஆண்களே!
ஜாக்கிரதை!
இதோ
புடவை கட்டிய
பொலிசார் சேவையில்!

ரோஜா ஆனந்தராஜா-
ராகலை.

### ஓரில்லாள்

காவியத்துக் கண்ணனும் இரு காரிகையாற் கஷ்டமுற்றான்!
இக் கலியுகத்துக் கண்ணனுக்கும் கஷ்டமான நிலைமைதான்!
ஏக பத்தினி விரதனென்றால் ஏனிந்த இடர்ப்பாடு?
இனியேனும் சிந்தியுங்கள்! ஓரில்லாளை நேசியுங்கள்.

திருமதி.க.கமலாம்பிகை- கரப்பன்காடு, வவுனியா.

### பூவா? புயலா?

செய்தான் வம்பு
கிடைத்தது குங்பூ!
பெண்; பூ மட்டுமல்ல;
புயலும் ஆவாள்!
பெண்கள் உணர்த்தலாம்
வம்பர்கள் உணரலாம்!

பி.சி.அன்ரன்- மட்/கூளாவடி.

### கைகளும் பேசும்

பூவாய்த்தான் நாமிருந்தோம்-தம்பி
புயலாக மாற்றிவிட்டாய்-நன்றி
கண்களால் கதைபேசும் பெண்கள்,
கைகளால் பேசுகின்றோம்- பாருங்கள்!

திருமதி.வி.ராதா- கொத்தலாவல ரெரஸ்,
கொழும்பு-4.

### காற்றும் புயலாகும்

இருக்கும் வரைதான்
காற்றாக இருந்தோம்!
புறப்பட்டு விட்டால்...
புயலென்று புரியவைப்போம்!

அமுதா மகாலிங்கசிவம்-
மட்/கல்லடி.

### கதிரவன் நகரவில்லை

பூவையரை அழைத்து வர
புகையிரத நிலையம் சென்றேன்!
நாழிகை ஆனதென்று
நையப் புடைத்தனரே
கடிகாரத்தை நகர்த்தினர்;
கதிரவனை நகர்த்தலையே!

குரும்பையூர்- வாகினி.

## கவிதைப் போட்டி இல-158



**கவனியுங்கள்** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி **29.06.1996.**

-முகவரி-
கவிதைப் போட்டி இல.158.
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல-1772,
கொழும்பு.

### வடபுலம்

என்ன அவசரம்.....?
இருவரும் கூப்பிட்டால்
யாருடன் வருவது?

சுபா வரன்- கண்டி.

### தவிப்பு

வலப்புறம் மின்வெட்டு
இடப்புறம் நீர் வெட்டு
இடையில் தவிக்கும்
இலங்கையர் போல்...

சீ.தங்கவடிவேல்- மட்டக்களப்பு.

### என்ன சொல்லிவிட்டேன்...?

நான் என்ன சொல்லிவிட்டேன்-
என்னைப் புரட்டி எடுக்கின்றீர்?
சம்மதம் கேட்டேன்-அதற்காக
சட்டையைப் பிடிக்கின்றீர்?..

ம.மோகன்-மட்/கல்லடி.

## வாசக(ர்) சாலை

கார்லோஸ் தொடர்பான சுவைமிகு சம்பவம் உண்மையிலே துணிவு மிகுந்ததே! சார்-கார்லோஸ் என் முன்னால் வந்தால் நிச்சயம் அளிப்பேன் அன்பு பரிசு ஒன்று.

"He is only one Hero"

ஜெஸ்மின், மினுவன்கொட.

கருணாநிதியின் சிறுபிள்ளை தோற்றம் முதல் சிம்மாசன தோற்றம் வரையுள்ள பருவத்தின் புகைப்படங்களைத் தேடி பிரசுரித்ததன் மூலம் உன் தனித்துவத்தை காட்டி விட்டாய்!

எம். ஸாலிஹ் அஸீம், புத்தளம்.

முரசு 156 இல் "இந்தியன் படம் வெற்றியா, தோல்வியா?" என்ற கேள்விக்கு சிந்தியா அவர்களின் பதில் நெஞ்சம் தொட்ட உண்மைக் கருத்துக்களாகும். ஒரு கை கொடுங்கள்.

செல்வி. ப்ரியநேசி, களுத்துறை. (தெற்கு)

எம் இனிய முரசே!

'முரசம்' பகுதியில் உரியதை உரிய நேரத்தில் ஆசிரியர் நன்றாக விளக்கியுள்ளார். சபாஷ். அவருக்கு எனது பல கோடி நன்றிகள்.

சசிகலா துரைநாயகம், சாம்பல்தீவு.

முரசம் தரும் ஆசிரியர் கருத்துக்கள், அன்றாட தகவல்களை கூறும் விதம் வரவேற்கத் தக்கது. லியோடெ தந்த கிரிக்கெட் உலகின் மூன்று வீரர்களின் வண்ணப் படம் பிரமாதம். ரசிகன் தரும் இலக்கிய நயம் பற்றி சொல்லி வேலையில்லை.

சரவணேஸ் டெமிசி, பத்மா டெமிசி, கலவான.

சென்றவாரம் இராஜதந்திரியின் அலசலில் சூடு காணப்பட்டது. அவரும் பாதிக்கப்பட்ட சூடோ? கையைக் கொடுங்கள் இராஜதந்திரி.

வி.ரவீந்திரன், புத்தளம்.

என் இனிய முரசே!

காதிலை பூ கந்தசாமி ஒவ்வொரு வாரமும் பெரிய, பெரிய குண்டுகளைப் போடுகிறார்.

ஆறுமுகம் சுவர்ணலதா,
மின்சார வீதி, திருகோணமலை.

என் இனிய முரசே!

வாரம் தோறும் வெளிவரும் அம்சங்கள் அத்தனையும் சூப்பரோ சூப்பர். குறிப்பாக தேன்கிண்ணம், சினிவிசிட், சிறுகதை, இலக்கிய நயம் ஆகியவை தூளோ தூள். என் வாழ்த்து.

செல்வி. எஸ். யுவரானி,
பிட்டகந்த.

அன்புள்ள இனிய முரசே!

உன் அம்சங்கள் தேன் போல் இனிப்பதற்கு காரணம் என்னவோ? நீ தரும் சிறுகதைகள் அருமையிலும் அருமை. ஒவ்வொரு சிறுகதையும், ஒவ்வொருவிதமான கருத்துக்களை கொண்டது. ஜூன் 2ம் திகதி வந்த உதாத்பனின் "அடைக்கலம்" சிறுகதை அருமையிலும் அருமை. உண்மையான அன்பான நட்பு என்றால் என்னவென்று அருமையாக எழுதியிருந்தார். வளரும் எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் உனக்கு எனது மனமார்ந்த நன்றிகள். உன் சேவையும் இன்று போல் என்றும் இருக்க வாழ்த்துக்கள் முரசே!.

செல்வி. நுஸ்ரத் ஜஹான் ஹனிபா,
மாத்தளை.

என் அன்பின் இனிய தினமுரசே.

நீ சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் இனிதானவையே. அதிலும் "பாப்பா முரசு"மணிகள் பதிக்கப்பட்ட முடியாக திகழ்கின்றது. எனினும் உனது ஆக்கங்கள் அனைத்தும் மேலும் மேலும் சிறப்பாக அமைய என் நல்வாழ்த்துக்கள்.

கு. ரிஷிபா,கந்தளாய்.

யாழ்-குடாநாட்டை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது. பிரச்சனைக்கு தீர்வாகாது. அன்றாடப் பிரச்சனை காலில் தைத்த இரும்பாணி. அரசியல் பிரச்சனை தான் புற்றுநோய்! முரசின் கருத்து மெத்தச் சரி.

எம். பாலசுந்தரம், கொழும்பு-12.

தமிழீழ விடுதலைப் புலிகள் வீரத்தோடு மட்டும் நின்று விடாமல், விவேகத்தையும் அரசியல் வானில் வெளிப்படுத்த வேண்டும். இராஜதந்திரியாரின் கருத்து நமக்கு உடன்பாடானதே! காலம் அறிந்து பயிர் செய் என்பது பழமொழி: அரசியலிலும் காலம், சூழ்நிலை அறிந்து பக்குவமாக செயற்படுதல் நன்று.

கா. மோகனச் சந்திரன்,
கொழும்பு-5.

அன்பின் தினமுரசே!

இடைவெளிக்குப் பின் இதய பூர்வ வணக்கம்.

எழுதிட நேரமில்லை...... எனினும் வாசிக்க தவறியதில்லை. வேலையின் காரணமாக பல பாடசாலைகளுக்குச் செல்லும் நான் ஆரம்ப பிரிவு மாணவர்களிடம் "நீங்கள் படிக்கும் பத்திரிகைகள் எவை?" என கேட்டால் "தினமுரசு டீச்சர்" என மாணவர்கள் கூறுகையில் மகிழ்ந்து போகிறேன்.

ரசிகன் அன்று தொடக்கம் அசத்துகிறார். யாரெனக் கண்டு கொள்ளத்தான் வழியில்லை. லேடீஸ் ஸ்பெஷல் பகுதியில் ஆட்டக்காரர்களின் ஆக்கிரமிப்பு அவ்வளவாகச் சரியில்லை.

தேன்கிண்ணம் பகுதிக்குப் பின்னால் பாப்பா முரசு பிரசுரிக்கப்படுவதால் சிறுவர் பகுதியினை வெட்டும் போது கவிதைகள் வெட்டப்படுகின்றன. ஒரு பகுதியை வேறு பக்கம் பிரசுரித்தால் இதனை தவிர்க்கலாம் என எண்ணுகிறேன்.

என்றும் வாழ வாழ்த்துக்கள்.

என்றும் உன் ரசிகை, ஜே. புளோரன்ஸ்.

அரசியல் தொடர் தரும் தகவல்கள் சிந்திக்கவைக்கின்றன. அறிந்த தகவல்களைக்கூட கால ஓட்டத்தில் மறந்துவிடும் பழக்கம் பொதுவானது. அதன் காரணமாக விட்ட தவறுகள் மீண்டும் தொடர்வதும், நாம் மீண்டும் மறப்பதுமாக காலம் ஓடுகிறது. இந்நிலையில் அரசியல் தொடர் நம்மை கடந்தகால தவறுகளில் இருந்து படிப்பினை பெறத்தூண்டுகிறது. தவறுகளை மறவாதிருக்கும் பதிவாகவும் இருக்கிறது. முயற்சிக்கு பாராட்டுக்கள்.

இரா. சிவசுப்பிரமணியன், நோர்வே
(முன்னாள் போராளி)



படிப்பகம்

www.padippakam.com

# வீட்டுக்காவலில் புலிகள் இயக்க ஆலோசகர்?

## வன்னித் தளத்தில் கருத்து முரண்பாடுகள்!

புலிகள் இயக்கத்தினர் தமது தளப் பிரதேசத்தை வன்னிக்கு மாற்றிக்கொண்ட பின்னர் இயக்கத்துக்குள் சிறு அளவில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் யாழ் குடாநாட்டில் பாரிய தாக்குதல் நடத்தவேண்டும் என்று கருத்துக் கொண்டுள்ளார். அவரது பிரதான தளபதிகளான பால்ராஜ், சொர்ணம் ஆகியோர் முதலில் சிறு சிறு தாக்குதல்களையே நடத்தவேண்டும் என்று விரும்புகின்றனர்.

இதேவேளை புலிகள் இயக்க அரசியல் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கம் தற்போதைய நிலவரம் தொடர்பாக தனக்கு நெருக்கமானவர்களிடம் மனம் விட்டுப் பேசியிருக்கிறார்.

அவர் கூறிய கருத்துக்கள் இயக்க நிலைப்பாட்டுக்கு பொருந்தாது என்பதால், அன்ரன் பாலசிங்கம் பிரபாகரனால் கண்டிப்புக்கு உள்ளாக்கப்பட்டார். அதனையடுத்து இயக்கம் சார்பான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும், கருத்துவெளியிடல்களுக்கும் அவருக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

தற்போது அன்ரன் பாலசிங்கம் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக வன்னியில் இருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கிறது. இத் தகவலை உடனடியாக உறுதிப்படுத்த இயலவில்லை.

எனினும், வன்னியில் புலிகள் இயக்க அரசியல் நடவடிக்கைகள் எதிலும் அன்ரன் பாலசிங்கத்தை காணமுடியவில்லை.

பத்திரிகையாளர்களோடு பேசும்போது அன்ரன் பாலசிங்கம் 'ஒஃப் த றெக்கோர்ட்' என்றரீதியில் தெரிவிக்கும் கருத்துக்களும் பிரபாகரனின் கவனத்திற்கு சென்றிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

இந்தியப் பத்திரிகையாளர் ஒருவரிடம் 'மாத்தையாவுக்கு தண்டனை கொடுத்து விட்டோம்' என்று அன்ரன் பாலசிங்கம் கூறியிருந்தார். அதனை அந்தப் பத்திரிகையாளர் செய்தியாகவும் வெளியிட்டிருந்தார். இவ்வாறான நடவடிக்கைகள் பிரபாகரனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

புலிகளின் அரசியல் பிரிவு துணைப் பொறுப்பாளர் கரிகாலன் வெளியிட்ட சில கருத்துக்கள் இயக்க நிலைப்பாட்டுக்கு மாறாக இருந்தமையால், அவர் முன்புபோல பேட்டிகள் கொடுப்பதற்கு பிரபாகரன் தடைவிதித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்-குடாநாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக புலிகள் இயக்க தளபதிகள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும், பிரபாகரனின் உத்தரவுப்படியே அவர்கள் செயற்படுவார்கள். அதனால் அத்தகைய முரண்பாடுகள் இயக்க நடவடிக்கையை பாதிக்கப்போவதில்லை என்று புலிகள் இயக்கத்திற்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# "யாழ் குடாநாடு கெரில்லாப் போர்க் களமாகும்!"

## அதிரடி அணிகள் தயாராகிவிட்டதாக புலிகள் அறிவிப்பு!

**வன்னிப் பகுதியில் படையினரின் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் தமது நிலை என்ன? என்று அங்குள்ள மக்கள் மத்தியில் கேள்விகள் எழுந்துள்ளன. யாழ் குடாநாட்டுக்குள் கிட்டத்தட்ட 4 1/2 இலட்சம் மக்கள் இருக்கின்றனர். அதனால் யாழ் குடா நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வன்னியில் உள்ள மக்கள் மத்தியில், தாமும் சொந்த இடம் திரும்பும் விருப்பம் மேலோங்கலாம் என்று புலிகள் கருதுகின்றனர். அதனால் யாழ் குடாநாட்டில் தாம் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் தொடர்பாக வன்னிப் பகுதியில் பகிரங்கமாக தெரிவிக்க வேண்டிய அவசியம் புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது.**

### மக்களுக்கு விளக்கம்

தமது போர்த்தந்திரங்களை மிக இரகசியமாகப் பாதுகாத்துவரும் புலிகள், தற்போது முதற்தடவையாக தமது போர்த்தந்திரம் பற்றி மக்களுக்கு தெரிவித்துள்ளனர்.

யாழ் குடாநாட்டில் தமது எதிர்கால போர்த்தந்திரம் தொடர்பாக வன்னியில் விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதாவது:

"யாழ் குடாநாட்டுக்கான போர்முறைத் திட்டம் தயாராகிவிட்டது.

அதிரடித் தாக்குதல்களை தீவிரப்படுத்தி, கெரில்லாப் போரைக் குடாநாட்டில் விரிவுபடுத்தும் தந்திரோபாயத் திட்டங்களோடு போரணிகள் தயார்ாகிவிட்டன.

யாழ்-குடாநாட்டு படையெடுப்பு நடந்து முடிந்துவிட்ட நிலையில், இப்போது வன்னிப் பெருநிலம்மீதான படைநடவடிக்கை எதிர்பார்க்கப்படுகின்றது.

விடுதலைப் போராட்டத்தின் செயற்பாட்டு மையமாகவும், புலிகள் இயக்கத்தின் பின்னணித் தளப்பிரதேசமாகவும் வன்னிப் பிராந்தியமே இப்போது விளங்குவதால், வன்னியில் யுத்தத்தை புலிகளின் வாசல்படிகளுக்கு கொண்டு செல்ல படையினர் தயாராகின்றனர்.

யாழ் குடாநாட்டில் படையினரின் உறுதியான நிலைப்படுத்தலை தடுத்து நிறுத்துவதன் மூலமாகவே போராட்டத்தின் தளப் பிராந்தியமான வன்னியையும் பாதுகாக்க முடியும்.

வன்னிப் பிரதேசத்தில் உறுதியாக காலூன்றி நின்று, சிறீலங்கா அரசாங்கத்துக்கு எதிரான நாடு தழுவிய போராட்டத்தை அங்கிருந்து நெறிப்படுத்துவதுடன், யாழ்-குடாநாட்டுக்குள் பெரும் அழிவை ஏற்படுத்தும் தாக்குதல்களையும் புலிகள் மேற்கொள்வர்,"என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னி பெருநிலப்பரப்பை படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவது முடியாத காரியம் என்றும் புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' தனது சமீபத்திய வெளியீட்டில் தெரிவித்துள்ளது.

### வன்னியும் போரும்

வன்னியில் உள்ள மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் விடுதலைப் புலிகள் பத்திரிகை பின்வருமாறு தெரிவித்திருக்கிறது:

"படையினரின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் இருக்கும் மக்கள்தான் தமது பிரதான எதிரிகள் என்ற நிலையை படையினர் விரைவில் எதிர்கொள்ளப் போகின்றனர்."

வன்னி 8885 சதுரகிலோமீட்டர் விஸ்தீரணம் கொண்ட ஒரு பாரிய தொடரான நிலப்பரப்பாகும். படையினரின் 'கைப்பற்றும் சக்திக்கு' அப்பாற்பட்டதாக வன்னியின் நில விஸ்தீரணம் உள்ளது.

அத்துடன் யாழ்-குடாநாட்டில் இருந்ததைப்போல ஆட்சி அலகுகள், மக்கள் செறிவு ஒரு குறித்த பகுதியில் குவிந்திருக்கவில்லை. அதுபோல வன்னியின் நிலவளமும் ஒரு குறித்த வட்டாரத்திற்குள் ஒடுங்கிவிடவில்லை.

குடாநாட்டு சமரின் காரணமாக மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வன்னி வந்து சேர்ந்தனர். இப்போது வன்னி பெருநிலப்பரப்பில் ஆறு அல்லது ஏழு இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். யாழ்-குடாநாட்டில் நாலு அல்லது ஐந்து இலட்சம் மக்களே வசிக்கின்றனர். இந்தவகையில் யாழ்-குடாநாட்டில் உள்ள மக்கள் தொகையைவிட வன்னியில் அதிகளவு மக்கள் வசிக்கின்றனர். இது போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் புதிய விடயமாகும்.

இதுவரை 1035 சதுர கிலோ மீட்டர்களை கொண்ட யாழ் குடாநாட்டுக்குள் நிலைகொண்டிருந்த போராட்ட மையம், இப்போது, 8885 சதுர கிலோ மீட்டர்களை கொண்ட வன்னி பெரு நிலப்பரப்புக்கு இடம்மாறி உள்ளது.

என்னதான் முயன்றாலும் வன்னி தளப்பிரதேசத்தை புலிகள் இயக்கத்திடமிருந்து கைப்பற்ற படைகளால் முடியாது." என்று விடுதலைப் புலிகள் பத்திரிகை தெரிவித்துள்ளது.

### சில வேளைகளில்....

வன்னிப் போர் தொடர்பாக விடுதலைப் புலிகள் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தின் இறுதியில், பின்வருமாறும் புலிகள் தெரிவித்துள்ளனர்: "வன்னி பெரு நிலப்பரப்பில் படையினரின் நடவடிக்கைகள் காரணமாக சிலவேளை குறித்த சில நிலப்பரப்புக்கள் படையினரின் பிடிக்குள் செல்லவும் கூடும். இன்றைய நெருக்கடியான நிலையில் இவை பற்றி கணிப்புக் கூறுவது கடினம். ஆயினும் வன்னியைப் பாதுகாக்க வேண்டிய இன்றியமையாத பணி எம் அனைவர் முன்னும் உள்ளது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர் கைது

## நிஷாந்தன்மீது தொடர்ந்து விசாரணை

புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினரான நிஷாந்தன் என்றழைக்கப்படும் குமாரவேலு விக்னராஜா தொடர்பாக கனடா பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்திவருகின்றனர்.

கனடாப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் நிஷாந்தன்.

இவர் முன்னர் புலிகள் இயக்கத்தில் முக்கிய உறுப்பினராக இருந்தவர். கொழும்பு மருதானையில் 1987ல் நடைபெற்ற கார்க் குண்டு வெடிப்பு நடவடிக்கைக்கு பொறுப்பாக இருந்தவர். குண்டைத் தயாரித்ததும் இவர்தான். இயக்கத்தில் இருந்து வெளியேறி கனடா சென்ற நிஷாந்தன் அங்கு மொழி பெயர்ப்பாளராக பணியாற்றினார்.

கனடா பொலிசாரின் மொழி பெயர்ப்பாளராகவும், இலங்கை அகதிகள் தொடர்பாக தகவல்கள் கொடுத்து உதவுபவராகவும் நிஷாந்தன் பணியாற்றினார்.

இயக்கங்களில் இருந்து விலகிவந்து தாம் சாதாரண ஆட்கள் என்று சொல்லி கனடா பிரஜா உரிமைபெறும் தமிழ் இளைஞர்கள் தொடர்பாக தகவலறிந்து சொல்லி விடுவார் நிஷாந்தன்.

ஆயினும் தான் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர் என்பதை மட்டும் மறைத்துவிட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளார் நிஷாந்தன்.

"இவர் ஒரு புலி என்று தெரிந்திருந்தால் வேலையில் சேர்த்திருக்கமாட்டோம்" என்று கனடிய பொலிசாரால் நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

கனடிய பொலிசில் மொழி பெயர்ப்பாளராக பணியாற்றியபோது இவர்து மொழி பெயர்ப்புக்கள் சரியான முறையில் நடைபெற்றதா என்பது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

# பிணையால் கிடைக்காத பயன்

## திருமலையில் வாடும் கைதிகள்

திருமலை, மூதூர் பகுதிகளில் அவசர கால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு திருமலை இராணுவ தடுப்பு முகாமில் 11 ஆண்களும் 2 பெண்களும் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். பின்னர் அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது. பிணைத் தொகையோ அவர்களது சக்திக்கு மீறியது. அதனால் வெளியே வரமுடியாமல் விளக்க மறியலில் வாடிக்கொண்டிருக்கின்றனர்.

விளக்கமறியலில் இருப்பவர்களும், அவர்களுக்கு வழங்கப்பட்ட பிணைத்தொகையும் பின்வருமாறு:

கிருஷ்ணன் ஞானேஸ்வரன், 35 ஆயிரம் ரூபா காசுப் பிணை; துரையப்பா சின்ன நயினார், 25 ஆயிரம் ரூபா காசுப்பிணை, 50 ஆயிரம் சரீரப்பிணை; சின்னையா சந்திரசேகர், காசுப்பிணை 35 ஆயிரம்; வேலாயுதம் பார்த்தீபன், 35 ஆயிரம் காசுப்பிணை; ராசலிங்கம் பிரபாளசிங்கம், 35 ஆயிரம் கர்சுப்பிணை, 75 ஆயிரம் சரீரப்பிணை; கோபாலன் கணேசமூர்த்தி, 10 ஆயிரம் காசுப்பிணை 25 ஆயிரம் சரீரப்பிணை சிவப்பிரகாசம் தியாகராஜா 35 ஆயிரம் காசுப்பிணை; இளையதம்பி விமலராசா, 10 ஆயிரம் காசுப்பிணை; மரகரன் ரவிநாதன், காசுப்பிணை 25 ஆயிரம்; கனகசுந்தரம் அழகன், காசுப்பிணை 35 ஆயிரம்; கருப்பையா மாரிமுத்து, காசுப்பிணை 35 ஆயிரம்; ஐயப்பன் புஸ்பராணி (மாத்தளை) காசுப்பிணை 25 ஆயிரம்; மார்க்கண்டு இன்பவல்லி, காசுப்பிணை 50 ஆயிரம்; சரீரப் பிணை ஒரு இலட்சம்.

இவ்வளவு தொகையான பிணை அறவிடப்பட்டமை தொடர்பாக ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பாராளுமன்றத்திலும் கண்டித்துப் பேசியிருந்தார்.

பிணையும் ஒன்றுதான், சிறை நீடிப்பும் ஒன்றுதான் என்று கருதப்படுமளவுக்கு பிணைத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனால் பிணை செலுத்த முடியாமல் ஐந்துமாதங்களாக விளக்கமறியலில் இருப்பவர்களும் இதில் அடங்குவர்.

# முரண்படுகிறார் முன்னாள் அமைச்சர்!

## அரசின் தீர்வு யோசனைக்கும் பாராட்டு!

ஐ.தே.கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் வெளிநாட்டமைச்சருமான ஏ.சி.எஸ்.ஹமீத் தனது கட்சியின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பாக அதிருப்தி அடைந்துள்ளார்.

கட்சிக்குள் சிறுபான்மை இனத்தின் ஆதரவை இழக்கும் போக்கு தலைதூக்கியிருப்பதாக ஹமீட் கவலையடைந்துள்ளார். கட்சிக் கூட்டம் ஒன்றில் அதனை வெளிப்படையாகவே அவர் தெரிவித்தார் என்று அறியப்படுகிறது.

சம்பத்தில் அரசாங்க பத்திரிகையான சண்டே ஒப்சேவரில் ஏ.ஸி.ஹமீத்தின் பேட்டி ஒன்று வெளியாகி இருந்தது.

தான் வெளிநாட்டமைச்சராக இருந்த காலகட்டத்தில் கியூபா அரசாங்கம் வழங்கிய மருத்துவ துறைக்கான புலமைப்பரிசில் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு அப்பேட்டியில் விளக்கம் கொடுத்திருந்தார்.

அரச பத்திரிகையில் ஐ.தே.கட்சி மூத்த தலைவர் ஒருவர் தன்நிலை விளக்கம் கொடுக்க இடமளிக்கப்பட்டமை பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாத்தளையில் அண்மையில் திரு.ஹமீத் உரை நிகழ்த்துகையில், பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் சமர்ப்பித்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் நாட்டின் நன்மை கருதியே கொண்டு வரப்பட்டவை என்று கூறியமை, பலருடைய கருத்தையும் ஈர்த்துள்ளது.

ஐ.தே.கட்சி, வெளிப்படையாக அதிகாரப் பகிர்வு யோசனைகளை விமர்சிக்கவில்லை. அத்துடன் ஆதரவினையும் வழங்கவில்லை. அக்கட்சியின் பொது உறுப்பினர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பும் இருந்து வருகிறது. ஹமீதின் பகிரங்கமான அறிவித்தலுக்கு, ஐ.தே.க. தலைமையினால் ஒரு திட்டவட்டமான முடிவு எடுக்கப்படாதமையினால், கட்சி வட்டாரத்தில் எதிர்ப்பு அலை கிளம்பியுள்ளது.

### தத்தெடுக்கும் திட்டம்

இலங்கையின் வடக்கு-கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த குழந்தைகளை தத்தெடுத்து பராமரிக்க கனடாவில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முன்வந்துள்ளது.

ஒரு குழந்தையைத் தத்தெடுப்பதற்கு மாதாந்தம் உதவக்கூடியவர்கள் தம்மோடு தொடர்பு கொள்ளுமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இத் திட்டத்தை செயற்படுத்தக் கூடிய தொண்டர்களும் தேவைப்படுவதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

# அமைச்சர் தொண்டா அதிருப்தி

பால் உற்பத்தியாளர்களிடமிருந்து ஒரு லீற்றர் பாலைப் பெறுவதற்கு ரூ 6.00 அதிகரிக்கப்படுவதற்கான அங்கீகாரம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் வர்த்தக அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரட்ண இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அதனால் அதிகரிக்கப்பட்ட தொகை இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் கால் நடை அபிவிருத்தித்துறை அமைச்சர் தொண்டமான் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

ஒரு லிட்டர் பாலை உற்பத்தி செய்ய உற்பத்தியாளர்களுக்கு சுமார் ரூ 15.00 வரை செலவாகிறது. ஆனால் ஏற்கனவே வழங்கப்பட்ட ரூ 2.00 அதிகரிப்புடன் சேர்த்து லீட்டருக்கு ஆக ரூ 12.50 மட்டுமே பெற்று நட்டமடைகிறார்கள், என்பதை அமைச்சர் தொண்டா சுட்டிக்காட்டினார்.

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையினைக் குறைப்பதற்காக 10 சதவீத இறக்குமதி வரியை நீக்கிவிடலாமா என்று அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. நியூஸிலாந்து பால்மா உற்பத்தி நிறுவன நிர்வாகி கிரிஸ் எஃப்.மூர் கருத்துத் தெரிவிக்கையில் அமெரிக்க டொலருக்கெதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைவதனாலும் பணவீக்கம் அதிகரிப்பதனாலும் இவ்வரி நீக்கத்தினால் பால் மா விலையில் எதுவித பாரிய மாற்றமும் எற்படவழியில்லை என்றார்.

அமுல் (இந்திய) நிறவனத்துடன் இணைந்து செயற்படவிருக்கும் திட்டம் நடைமுறைக்கு வருமானால், 'மில்கோ' பாலின் விலை ரூ 65 ஆக மட்டுமே இருக்கும் என்று அமைச்சர் விக்கிரமரட்ண கூறியுள்ளார்.

# அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் தலையீடு!

## பின்தங்கிய பகுதிகளில் மோசமான கல்வி நிலை!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பில் படையினரின் கட்டுப்பாட்டிலில்லாத படுவான்கரை, வாகரை, பதுளை வீதி ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் பல நூற்றுக்கணக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அதேவேளை மட்டக்களப்பு நகரை அண்டிய பகுதிகளில் ஏராளமான மேல்மிஞ்சிய ஆசிரியர்கள் காணப்படுகிறார்கள். அரசியல் வாதிகளும், அதிகாரிகளும் தமது சுயநல அதிகாரங்களை திணிப்பதே இதற்குக் காரணமென்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் கல்வி கற்ற மக்கள் விரல்விட்டு எண்ணக் கூடியளவே இருப்பதனால் அப்பகுதிகளில் ஆசிரியர் அல்லது வேறேதும் வெற்றிடங்கள் ஏற்படும்போது போட்டியில்லாத கஷ்டப்பிரதேசங்களைக் காட்டி மட்டக் களப்பிலுள்ள திணைக்கள அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் உறவினர்கள் நியமனம் பெறுகின்றனர்.

தாம் நியமனம் பெறுவதற்காக மட்டுமே மேற்படி கஷ்டப்பிரதேசங்களை அடையாளம் காட்டுகின்றனர். பின்னர் நியமனம் பெற்றதும் உறவினர்களான அதிகாரிகளினதும் அரசியல் வாதிகளினதும் செல்வாக்கையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி இப்பகுதிகளில் பாதுகாப்புக் காரணத்தைக் காட்டி நகரை அண்டிய பகுதிகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று விடுகின்றனர். வாகரைப் பிரதேசத்தில் 15 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் நூற்றுக்கும் அதிகமான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஒருவரே அதிபராகவும், ஆசிரியராகவும் கடமையாற்றும் பாடசாலைகளும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

செல்வாக்குக் குறைவாக உள்ள காரணத்தினால் பல ஆசிரியர்கள் கஷ்டப்பிரதேசங்களில் பல வருடங்களாகப் பணியாற்றிவருகின்றனர். செட்டிபாளையம். குருக்கள் மடம் போன்ற பகுதிகளிலிருந்து 60 மைல் தூரம் பயணம் செய்து வாகரையில் கடமையாற்றும் ஆசிரியர்களும் உண்டு.

வாகரையில் கற்பித்த தமிழ் பா.உ. ஒருவரின் சகோதரரும், உறவினரும் இலேசாக இடமாற்றம் பெற்று தமது ஊர்ப் பாடசாலையில் கடமையாற்றுகின்றனர்.

# சுண்ணக்கல் சூளைகளுக்கு மூடுவிழா!

## புலிகளின் தடையும், புதிய வரிவிதிப்பும்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பில் சுண்ணக்கல் சூளை வைத்திருப்போரினதும் அதனுடன் தொடர்புபட்ட தொழிலாளிகளினதும் பாடு இனிப் பெரும் திண்டாட்டமாகவே இருக்கும் என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

கடந்த வாரம் முதல் தமது கட்டுப்பாட்டுப்பகுதிகளிலுள்ள கடற் கரையிலிருந்து சுண்ணக்கல் அகழ்ந்தெடுப்பதைப் புலிகள் முற்றாகத் தடை செய்துள்ளனர். "தமது பகுதிகளிலுள்ள ஒவ்வொரு வளங்களுக்காகவும் தாம் போராடுவதாகவும் ஆகையினால் அவை இங்கிருந்து பிறிதொரு பகுதிக்குக் கொண்டு செல்லப்படுவதை எவ்வகையிலும் தாம் அனுமதிக்க முடியாதென்றும்" புலிகள் தெரிவித்துள்ளனர். இத்தடை விதிப்பால் இலட்சக் கணக்கான ரூபாய் வரியைப் புலிகள் இழந்துள்ளனர். இதற்கு முன்னர் ஒரு சூளை வைத்திருப்போரிடமிருந்து மாதாந்தம் ரூபா 3000/= தை வரியாக அறவிட்டனர். இவ்விதம் மாதம் 500,000/= ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை சுண்ணாம்புச் சூளை வைத்திருப்போரிடமிருந்து புலிகள் வரியாகப் பெற்றனர்.

இதனிடையே செங்கல் உற்பத்தி செய்வோரிடம் உடனடியாக அதிகரித்த வரிவிதிப்பைப் புலிகள் அறவிடுகின்றனர். ஏற்கனவே ஆயிரம் கற்களுக்கு 50/= ரூபாவாகவும், பின்னர் 300/= ஆகவும் இருந்த வரி விதிப்பு தற்சமயம் 450/= ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சமீப நாட்களுக்கு முன்னர் சகல செங்கல் வாடி உற்பத்திகளையும் புலிகளே பொறுப்பேற்று நடத்தி வந்தனர். கல்வாடிக் காரர்களுக்குரிய கூலியையும் புலிகளே கொடுத்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உழவு இயந்திரம் சொந்தமாக வைத்திருக்கும் ஒருவர் புலிகள் செய்கை பண்ணும் 10 ஏக்கர் காணியை விதைப்புக்கு ஏற்றவாறு இனாமாக உழுதுகொடுக்கவேண்டும். இதனடிப்படையில் சூடடித்தும் கொடுக்க வேண்டும். இவை புலிகளின் பகுதிகளில் சுழற்சி முறையில் நடந்து வருகின்றன.

இது ஒரு புறமிருக்க; மட்டக்களப்பு மாவட்டத்தின் காட்டுப் பகுதிகளில் கடந்த சில நாட்களாகப் பாரிய சத்தங்கள் இரவிலும் பகலிலும் கேட்ட வண்ணமுள்ளன. வெடிக்காத பல குண்டுகளையும், ஷெல்களையும் புலிகள் கண்டெடுத்துச் சென்றதாக மக்கள் தெரிவிக்கிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

# நீண்டகாலக் கோரிக்கை நிறைவேறுகிறது

(கண்டி நிருபர்)

## தமிழிலும் உரைகளைக் கேட்கலாம்

மத்திய மாகாண சபை நடவடிக்கைகளை மும்மொழிகளிலும் வழங்கிக் கொள்ளும் பொருட்டு நவீன கேட்போர் கூடமாக சபை மண்டபம் புனரமைக்கப் பட்டு வருகின்றது.

மாகாண சபையில் கணிசமான அளவில் தமிழ் பேசும் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவர்களில் இ.தொ.கா.வை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் அதிகம். மாகாண சபை உரைகள் தமிழில் மொழி பெயர்க்கப் படவேண்டுமென்ற உறுதிப்பாடு நெடு நாட்களாக நிலவிவருகின்றது. சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் "எமக்கு சிங்கள உரைகளை தமிழில் தாருங்கள்" என்று பல்லாண்டுகளாக தமிழ் உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோளின் பேரில் 38 இலட்சம் ரூபா செலவில் பத்திரிகையாளர்கள், உயர்மட்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் சமகால மொழி பெயர்ப்புக்களைப் பெற்றுச் சொல்லவும் கேட்கவும் இந்தப் புதிய புனரமைப்புப் பணிகள் உதவும்

இதன் அடிப்படையில் சபை மண்டபம் விரிவாக்கப்பட்டுவருவதுடன் பெறுமதியான தொழில் நுட்பச் சாதனங்களும் பொருத்தப் பட உள்ளன. மிக நீண்டகாலமாக இருந்து வரும் தமது கோரிக்கைகளில் ஒன்று இப் பொழுதாவது நிறைவேறும் முயற்சி குறித்து தமிழ் உறுப்பினர்கள் சிலர் முரசுக்குத் திருப்தி தெரிவித்தனர்.

மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரான காலம் சென்ற அமரர் வீ. அண்ணாமலை, கண்டி மாவட்ட அபிவிருத்திச் சபையில் உறுப்பினராக இருந்தவேளையில் கூட சபை நடவடிக்கைகள் அனைத்தும் தமிழ் மொழியிலும் வழங்கப்பட வேண்டுமென அடிக்கடி சுட்டிக்காட்டியதையும் பலர் நினைவு கூருகின்றனர்.

# 630 இலட்சம் ரூபாவுக்கான திட்டங்கள்

## அங்கீகாரம் கிடைத்தது என்கிறார் அரச அதிபர்

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவிருக்கும் பணிகளுக்காக நோராட் ஒதுக்கிய 1200 இலட்சம் ரூபாவில் 630 இலட்சம் ரூபாவுக்கான திட்டங்களுக்கு இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டு நிதியுதவியும் வந்தடைந்திருப்பதாக அரசாங்க அதிபர் ஏ.கே.பத்மநாதன் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலகத்தைப் புனரமைக்க 25 இலட்சம் ரூபாயும், மட்டக்களப்பு திறந்த பல்கலைக்கழகத்திற்கு கணனிப்பிரிவை ஏற்படுத்த 30 இலட்சம் ரூபாவும், நாவலடி மீன்பிடி பயிற்சிக் கல்லூரி நூலகத்திற்கு 5 இலட்சம் ரூபாவும், பனை அபிவிருத்திச்சபை பிராந்திய நிலைய கட்டிட நிர்மாணத்திற்கு 7,65,000 ரூபாவும், மரமுந்திரிகை அபிவிருத்தித்திட்டத்திற்கு 1,75,000 ரூபாவும், விவசாயக் கிணறுகளை அமைக்க 1,60,000 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

# விடிவு காலம் பிறக்குமா?

'ஜனசவிய' பயிலுநர் நியமனம் பெற்ற 35,000 ஆசிரியர்களும் நியமனம் கிடைத்த 1990-01-01 திகதியிலிருந்து அனுபவித்து வரும் இன்னல்கள் பல.

ஆரம்பத்தில் தமது வாழ்க்கைச் செலவுக்கே போதாத "ஆயிரம்" ரூபாவைச் சம்பளமாகப் பெற்றதுடன், பலரது பலவாறான கேலிவார்த்தைகளினாலும் கேவலப்படுத்தப்பட்டார்கள்.

சகல சிரமங்களுடனும் ஐந்து வருடங்களாக தொலைக்கல்விப் பயிற்சி நெறியிலும் தொல்லைப் படுத்தப்பட்டார்கள். அவ்வளவு சிரமங்களுக்கு மத்தியில் ஆறுவருடங்களைத் தாண்டி ஏழு வருடங்களாகியும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பட்டியலில் சேரமுடியாத நிலை தொடர்கிறது. தொலைக்கல்விப் பரீட்சையின் முடிவுகள், பரீட்சை முடிந்து ஒரு வருடமாகியும் இது காலவரை வெளியாகவில்லை. இவர்களுக்குப் பின்னால் நியமனம் பெற்ற ஏனைய ஆசிரியர்கள் தமது பயிற்சிகளை முடித்து பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பட்டியலில் இருக்கின்றார்கள்.

இவர்களின் பரீட்சை முடிவு வெளிவருமா? விடிவு காலம் பிறக்குமா?

ஏ.யூ.எம்.றிஸான் அலி.
மொ/கமேவெல தமிழ் வித்தியாலயம், பசறை.

# அதிகாரிகளின் அதிரடி நடவடிக்கை

(அக்குறணை நிருபர்)

சனநடமாட்டம் அதிகமாக உள்ள கண்டி புகையிரத நிலைய வீதி நடைபாதை வியாபாரிகளின் சிறிய சிறிய வண்டில்களால் போக்குவரத்துக்கு பெரும் நெருக்கடி இருந்து வருகிறது. குறுகலான இருவழிப் பாதையில் வாகனங்களோடு மக்களும் நடைபாதை வியாபாரிகளும் நடமாடுவதால் அடிக்கடி சிறு சிறு விபத்துகளும் நிகழ்வதுண்டு.

நடைபாதை வியாபாரிகளுக்கு அண்மைக் காலங்களில் பலதடவை நகரசபை அதிகாரிகள் எச்சரிக்கை செய்தும் அதனை அலட்சியம் செய்தவர்களாக தொடர்ந்தும் தமது வியாபாரத்தை நடாத்தி வந்தனர்.

சமீபத்தில் திடீரென்று லொறிகளிலும் வானிலும் வந்த நகர சபை அதிகாரிகள் பொலிஸாரின் துணையுடன் அனைத்து வியாபாரிகளின் றம்புட்டான், அப்பிள், மங்குஸ் சுமந்த வண்டில்களை பலவந்தமாக ஏற்றிக் கொண்டு சென்றுவிட்டனர்.

# தரீக்கா அலுவலகம்

## தீவைத்து எரிப்பு!

(காத்தான்குடிநிருபர்)

காத்தான்குடி நதியா கடற்கரை வீதியிலுள்ள அகில இலங்கை தரீக்கதுல் முப்லிஹீன் தலைமைக் காரியாலயம் இனந்தெரியாத நபர்களினால் தீவைத்து எரித்து நாசப் படுத்தப்பட்டுள்ளது. ஐந்து இலட்சித்து மூவாயிரத்து இருநூற்றிப் பத்து ரூபாய் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகி விட்டதாக மேற்படி அமைப்பின் பிரமுகர் ஆதம்லெப்பை முஹம்மது கலீல் காத்தான்குடி பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது: சம்பவதினத்தன்றிரவு 11.30 மணியளவில் வந்த இனந்தெரியாத கோஷ்டியினர் அலுவலகத்தை வளைத்து தீவைத்துவிட்டுத் தப்பியோடியுள்ளனர். இதனால் அங்கிருந்த சீமெந்து, குர்ஆன் பிரதிகள், கம்பிகள் உட்படப் பல பொருட்கள் தீக்கிரையா கியுள்ளன.

அடுத்தநாள் அதிகாலை 6.00 மணியளவில் அங்கு சென்று பார்த்தபோது அலுவலகம் தீயினால் எரிந்திருந்ததாக ஜனாப் கலில் தனது பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இதுவரை சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யபடவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

# கலைஞருக்குக்கிடைத்த வாய்ப்பு?



இந்தியாவில் ஐக்கிய முன்னணி அரசில் கருணாநிதிதான் பிரதமராகியிருக்க வேண்டும். கொஞ்சம் மாறிவிட்டது.

ஐக்கிய முன்னணி அரசு ஏற்படுத்த முதுகெலும்பாக இருந்த 'கிங்மேக்கர்'களில் முதல்வர் மூப்பனார் தான்.

ஐக்கிய முன்னணி அரசு ஏற்படும் முன் யாரை பிரதமராகத் தேர்வு செய்வது என்று ஐக்கிய முன்னணித் தலைவர்கள் எல்லோரும் கூடிப் பேசியிருக்கிறார்கள். வி.பி.சிங் பெயரை ஏற்கனவே கருணாநிதி உட்பட சிலர் சொல்லி வந்ததால், அவரே சரியான ஆள் என்று தீர்மானித்து அவரை அழைக்கப் போனார்கள். வி.பி.சிங். வீட்டிற்குச் சென்று அவரைப் பிரதமராகப் பொறுப் பேற்கச் சொல்லி வற்புறுத்தினார்கள். அவர் உடல்நிலையைக் காரணம் காட்டி மறுத்து விட்டார். வேறு ஏதாவது காரணம் சொல்லியிருந்தால் அவரை எப்படியும் இழுத்து வந்திருப்பார்கள். மருத்துவக் காரணம் சொன்னதால் அவரை விட்டு விட்டு திரும்பினார்கள். திரும்பும் போது, கருணாநிதியுடன் பேசிக் கொண்டே வந்த மூப்பனார், "அடுத்து யார் இருக்கிறார்கள், நீங்கள்தான் பிரதமர்; நான் முன்மொழிந்து விடுகிறேன்." என்று சொன்னார். உள்ளூர பூரிப்படைந்த கருணாநிதி சிரித்துக் கொண்டே, "அய்யய்யோ அதெல்லாம் வேணாங்க, நமக்கு தமிழ்நாடு போதும். நீங்க அப்படி எதுவும் முன்மொழிந்து விடாதீங்க!" என்றார். மூப்பனார் நகைச்சுவைக்காகச் சொன்னாரோ, சீரியசாகச் சொன்னாரோ தெரியவில்லை. ஆனால் அவர் அப்போது கருணாநிதியை முன்மொழிந்திருந்தால் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் யாரும் அதை எதிர்த்திருக்க மாட்டார்கள். கருணாநிதியே பிரதமராகியிருப்பார் என்று டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆங்கிலம், இந்தி மொழிகளில் பேச்சு வளமை இல்லாததால்தான் டில்லி பொறுப்பைக் கருணாநிதி விரும்பியிருக்க மாட்டார். இல்லாவிட்டால் பிரதமர் பொறுப்பேற்க முன் வந்திருப்பார். என்று டில்லித் தமிழர் ஒருவர் குறிப்பிட்டார்.




**கலை அலங்கார வகுப்புக்கள்**

- சிகை அலங்காரம்
- அழகுக்கலை
- மணப்பெண் அலங்காரம்
- 4 மாத கற்கை நெறி

**ஆரம்பம்: 23.06.96**

**FASNAZ BEAUTY SALON**

இல. 142, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை,
கொழும்பு-06.
தொலைபேசி:589457

**மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHIATRIST)**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்தியிரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்.)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

ஜூன், **19** முதல் **28** வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 Fax No. 436439 ஜூலை 4,5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், ஜூலை 7,8,9 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் **DR. P. ARUMUGAM** No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

**BRIGHT** ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத,
வாசிக்க கற்றுத்தரப்படும்
விபரங்களுக்கு கீழ்காணும்
விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்:..............................

விலாசம்:..............................

**BRIGHT TRAINING CENTRE**
S-27, FIRST FLOOR, P.O. BOX. 162.
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL: 434770

**விளம்பரப் பகுதி**



**மின்சார வேக மலையாள மாந்திரீக சக்தி**

ஆத்மாக்களின் எண்ணங்கள் எண்ணியபடி நிறைவேறினால் மாத்திரமே ஆத்ம திருப்தி அடைகிறார்கள். கேட்டவருக்கு கேட்டவரம் தரும் ஸ்ரீ துர்கா தேவியின் அற்புத அருள் கொண்ட உலக மாந்திரீக சக்கரவர்த்தி திரு.பி.கே.சாமி அவர்களை அணுகினால் கோரிக்கை கொடுக்கும் அன்பர்களுக்கு இத்தனையாம் திகதி இத்தனை மணிக்கு தங்கள் வேலை பூர்த்தியென சான்றிதழ் வழங்கப்படும். அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டதும் வரையறுக்கப்பட்ட தனியார் லிமிடெட் கம்பனி இது ஒன்றேயாகும். எத்தனை யெத்தனையோ வெளிநாட்டவருக்கும் உள்நாட்டவருக்கும் எம்மால் வெற்றிபெற்ற சான்றிதழ்கள் ஆயிரக்கணக்கில் உண்டு. சான்றிதழ்களை நேரில் பார்வையிடலாம். எம்மாதமும் 20 முதல் மாதக் கடைசிவரை கொழும்பு ஸ்ரீதுர்க்கை தேவஸ்தானத்திலும் இதர நாட்களில் நுவரெலியா ஸ்ரீ துர்கை தேவஸ்தானத்திலும் திரு. சாமி அவர்களை சந்திக்கலாம். உள்நாட்டவர் நேரில் சந்திக்க ஆரம்ப அனுமதி கட்டணம் ரூ.250. வெளிநாட்டவர்கள் பிரச்சினைகளை கூறி பிறந்த திகதி மாதம் வருடம் இவைகளை குறிப்பிட்டு அனுப்பி ஆரம்ப கட்டணமாக ரூ.1000 அனுப்பினால் அவர்கள் வேலைக்குரிய கட்டணமும் எண்ணங்கள் பூர்த்தியாகும் திகதியும் கொண்ட கார்டும் அனுப்பப்படும்.

Dr.பி.கே.சாமி (J.D.G.A.N.)JP
பி.கே.சாமி அஸோஸியட் பிரைவட் லிமிடெட்
இல.162, மே பீல்ட் றோட்,
கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13

கொழும்பு தொலைபேசி இல - 01342463-342464-344831-344832
- FAX-00941342464
நுவரெலியா தொலைபேசி இல - 052-2508-3093-3570-3336
- FAX-0094523093

[illegible]

**பிரெஞ்சு வகுப்பு**

பேச எழுத வாசிக்க 3 மாத
துரித பயிற்சி வகுப்பு

ஆரம்பம் :
22-6-96 முதல்

Batch I திங். வியா. 9-10.30
Batch II சனி. ஞாயிறு 11-12.30

By
K.S. இந்திரகுமார் CAP
நேரம் பொருந்தாதவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்

APSS 116A 2/1, Galle Road,
Wellawatte. (Near Over Bridge)

**வெளிவந்துவிட்டது...**

வெற்றிக்கனி
ஆண்டு 5
இதழ் 7,8,9,10,11
கல்வி மஞ்சரி
O/L வினாவிடை
EFFECTIVE ENGLISH WITH GRAMMAR 1 & 2

**BRIGHT BOOK CENTRE**
S-27,First Floor, P.O. Box - 162
Colombo Central Super Market Complex
Colombo - 11. T.P. 434770

**பாகிஸ்தான் குவ்வத்தே பஹார்**

Quwathe Bahar

- இது முற்றிலும் இஸ்லாமிய முறைப்படி தயாரிக்கப்பட்டது.
- முளைப்பலவீனத்தைப் போக்கி உடம்புக்கு புஷ்டியைத் தரும்.
- இழந்த சக்தியை மீட்டு தரும்.
- வயது வந்தவர்களுக்கு மிகச் சிறந்தது.
- தபாற் செலவு உட்பட

விலை ரூபா 190/=
For one month use

**QUATHE BAHAR**
310/2 BULUGOHOTENNA
(off Neerella Road)
AKURANA.

**இதோ வெளிவந்துவிட்டது!**

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க
மேன்மைகொள் சைவநீதி உலகமெல்லாம் விளங்க
"சங்கீத சாகரம்" யோகானந்தம் யாதவன் பாடிய

**தமிழ்வேதம்**
(திருமுறைத் தொகுப்பு)

தேன்தமிழ்த் தேவாரங்களும் தித்திக்கும் திருப்புகழும் நெஞ்சினை ஈர்த்து உருக்கும் திருவாசகமும் ஒருங்கே தொகுக்கப்பட்ட ஒலிப்பதிவு நாடாவும் இலவசக் கையேடு ஒன்றும் கிடைக்கக்கூடிய இடங்கள்:

வெள்ளவத்தையில்:
- Jet Music Corner
- New Abirami Video Home
- G.N.B. Traders, Mayura Place

பம்பலப்பிட்டியில்:
- Greenlands Hotel
- Telecare Communication Centre

செட்டியார் தெருவில்:
- Rajikala Video Home

உள்நாட்டு, வெளிநாட்டு முகவர்கள் தொடர்புகொள்ளக்கூடிய முகவரி:
CO-ORDINATOR, RELIGIOUS & CULTURAL AFFAIRS,
"VIDYA KALALAYA", 11/2, CHARLEMONT ROAD, WELLAWATTE, COLOMBO-06, SRI LANKA.
(Advt.)

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில்
அமைந்த காண்டம் எனும்
நாடி ஜோதிடத்தில்
உங்கள் பலன்களை
**ரிஷி. S. மணி**
மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-63611
Fax : 503030




படிப்பகம்

www.padippakam.com

# தமிழக முதல்வர் கிழித்துள்ள கோடு

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

## வரையறை தாண்டாத அணுகுமுறை

புலிகள் மீதான தடையை இந்திய அரசு மீண்டும் இரண்டுவருடகாலம் நீடித்துள்ளது.

தேவகவுடா தலைமையிலான இந்திய அரசாங்கம் புலிகள் மீதான அணுகுமுறையை மாற்றிக்கொள்வது தொடர்பாக யோசிக்கவேயில்லையென்று தெரிகிறது.

புதிய இந்தியப் பிரதமர் தேவகவுடாவைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழர் பிரச்சனையின் அடிச்சுவடியையே இனித்தான் படிக்க வேண்டும்.

இந்திய தேசிய அரசியலுக்குக்கூட தேவகவுடா புதியவர்தான். இந்தியாவில் அவரது கர்நாடக மாநிலம் தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் உள்ள பிரச்சனைகள் தொடர்பாகக்கூட இனித்தான் அவர் அறிந்துகொள்ள வேண்டும். அவர் அறிந்து முடிப்பதற்கிடையில் ஆட்சியே கவிழ்ந்து போனாலும் போகலாம்.

இந்த இலட்சணத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக ஆழ்ந்து படித்து, ஆவன செய்யத் திட்டமிட அவருக்கு எங்கே நேரம்?

தமக்கு முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சியின் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகளில் தேவகவுடா அரசாங்கம் குறிப்பிடத்தக்க மாற்றம் எதனையும் ஏற்படுத்தப்போவதில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சனையிலும் காங்கிரஸ் அரசின் நிலைப்பாடுதான் புதிய அரசின் நிலைப்பாடாகவும் இருக்கும்.

மத்திய அரசில் தி.மு.க.அங்கம் வகிப்பதால் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு இல்லாத ஒரு நிர்ப்பந்தம் புதிய அரசுக்கு ஏற்படும்.

இலங்கைத் தமிழ் மக்களை கவனியுங்கள் என்று காங்கிரஸ் கட்சிக்கு எடுத்துரைக்க யாரும் இருக்கவில்லை.

தேவகவுடா அரசுக்கு எடுத்துரைக்கவும், அரசாங்கத்தில் தானும் ஒரு அங்கம் என்ற ரீதியில் தனது கருத்தை கவனத்தில் கொள்ளச் செய்யவும் தி.மு.க.வால் முடியும் என்பது புதிய விஷயம்.

ஆனால், தி.மு.க.பதவிக்கு வந்தபின்னர் கலைஞர் கருணாநிதி மேற்கொண்டுவரும் நிலைப்பாடு உற்சாகமானதாக தெரியவில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு அரசியல்தீர்வு காணப்படவேண்டும் என்று அவர் சொன்னதற்கு இங்கே பலத்த வரவேற்பு. அந்த ஒரு சொல்லைவைத்தே இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் தி.மு.க. என்ன செய்யப்போகிறது என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்திவிட்டார்.

கடந்த காலத்தில் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக கலைஞர் கருணாநிதி காட்டமான கருத்துக்களையெல்லாம் தெரிவித்திருந்தார்.

தனித்தமிழ்ழமே இலங்கை இனப்பிரச்சனைக்கு ஒரே தீர்வு என்றும் முன்னர் அவர்தான் கூறியிருந்தார். இலங்கைக்கு இந்திய இராணுவம் அனுப்பப்படவேண்டும் என்பதை முதன் முதலில் உரத்துச் சொன்னவரும் அவர்தான்.

பாகிஸ்தானில் இருந்து பங்களாதேஷை இந்திய இராணுவத்தை அனுப்பி பிரித்துக் கொடுத்ததுபோல, இலங்கையிலும் தமிழ்ழம் உருவாக இந்திய இராணுவம் உதவவேண்டும் என்ற அடிப்படையில்தான் தி.மு.க. அக்கோரிக்கையை எழுப்பியிருந்தது.

இலங்கைக்கு செல்லும் இந்தியப்படை

> "அன்று கலைஞர் கொடுத்த 50 ஆயிரத்தை புலிகள் மறுத்தார்கள். இப்போது கலைஞரின்முறை. புலிகளது வாழ்த்துச் செய்தியை பத்தோடு பதினொன்றாக கருதிக்கொண்டது போல் கருத்துச் சொல்லியிருக்கிறார்."

சமாதானப்படையாக செல்லவேண்டும் என்று தி.மு.க. கேட்கவில்லை. இலங்கை செல்லும் இந்தியப்படை இலங்கைத் தமிழர்களுக்கு நாடு ஒன்றை உருவாக்கிக் கொடுக்கும் படையாக செல்லவேண்டும் என்பதே தி.மு.க.வின் கோரிக்கையாக இருந்தது.

இலங்கைத் தமிழர் பிரச்சனையை மையமாக வைத்து தமிழக அரசியல் இயங்கிய காலகட்டமும் இருந்தது.

தமிழக மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பதும் அவசியம் என்றநிலை இருந்தது.

அதனால்தான் கலைஞரும், எம்.ஜி.ஆரும் போட்டி போட்டுக்கொண்டு இலங்கைத் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தார்கள்.

கலைஞரால் தமிழ் நாட்டில் மட்டும்தான் இலங்கைத் தமிழர் பற்றி பேசமுடியும். நான் ஐக்கிய நாடுகள் சபையிலேயே குரல் கொடுக்க வைக்கிறேன் பார் என்று தனது அமைச்சர் பண்டிருட்டி ராமச்சந்திரனை ஐ.நா.சபைக்கு அனுப்பிவைத்தவர் எம்.ஜி.ஆர்.

கலைஞரும் விடவில்லை. தமிழ்ஈழ ஆதரவாளர் அமைப்பு (டெசோ) என்று ஆரம்பித்து, தமிழ் ஈழத்தை ஆதரிப்பதில் தான்தான் முன்னணியில் நிற்பதாகக் காட்டினார்.

இப்போது அக்காலகட்டம் கனவாகிவிட்டது. இலங்கைத் தமிழர் பிரச்சனைபற்றி பேசுங்கள் என்று இங்குள்ள தமிழர் அமைப்புக்கள்-புலிகள் உட்பட-தமிழகத் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருக்கின்றன.

இலங்கைத்தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு என்பதை தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தது. ஆனால், பதவிக்கு வந்தபின்னர் இலங்கைத்தமிழர் பிரச்சனை தொடர்பாக கலைஞர் தெரிவித்த கருத்துக்கள் அவராகவே கூறியதல்ல. பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் சொன்ன பதில்களாகவே அவை வெளிவந்தன.

பத்தோடு பதினொன்றாக கேட்கப்பட்ட கேள்வியாக இலங்கைத் தமிழர் பிரச்சனையில் உங்கள் நிலைப்பாடு என்ன? என்று கேட்கப்பட்டது. "அரசியல் தீர்வு காணப்படவேண்டும். இது தொடர்பாக மத்திய அரசுடன் பேசுவோம்." என்று சொல்லியிருக்கிறார் கலைஞர்.

ஆனால், அக் கருத்துக்கு கலைஞர் முன்னர் தெரிவித்த காட்டமான கருத்துக்களுக்குக்கூட கிடைக்காத முக்கியத்துவம் இலங்கையில் கிடைத்திருக்கிறது.

தமிழ் பத்திரிகைகள் மட்டுமல்ல, சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள்கூட கலைஞரின் கருத்தை வைத்து கட்டுரைகள் விமர்சனங்கள் தீட்டியிருக்கின்றன.

இதன்காரணத்தை சரியாக நோக்கினால், இலங்கைத் தமிழர்கள் மகிழ்ச்சிப்பட ஒன்றுமில்லை. கவலைப்படுவதுதான் நியாயம்.

சர்வதேச அரங்கில் மட்டுமல்ல, அயல் நாடான இந்தியாவில்கூட போதிய அனுதாபத்தையும், ஆதரவையும் பெறமுடியாதநிலையில் இலங்கைத் தமிழர் போராட்டம் வெளியுலகில் பலவீனப்பட்டிருக்கிறது. தனிமைப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்த ஆதரவைக்கூட பறிகொடுத்த நிலையில்தான் காணப்படுகிறது.

ராஜீவ்காந்தி கொலைக்குப் பின்னர் கிட்டத்தட்ட கடந்த ஐந்து வருடங்களாக இந்தியாவில் மத்திய அரசும், தமிழக மாநில அரசும் இலங்கை இனப்பிரச்சனை குறித்து மௌனம் சாதித்து வந்தன.

அந்த இடைவெளியும், அந்த மௌனத்தால் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட உணர்வும்தான், தமிழக முதல்வராக பொறுப்பேற்கப்பட்டவுடன் கலைஞர் தெரிவித்த கருத்துக்கு இத்தனை முக்கியத்துவம் ஏற்படக்காரணமாகியது.

நீண்டகாலமாக மழை இல்லாமல் வரண்டு கிடந்த பூமி மழையைக் கண்ட்டுமாதிரித்தான் இதுவும். ஆனால், கலைஞர் கருணாநிதியின் கருத்து மழையா? தூவானமா? கடந்தகாலத்தில் அவர் சொன்ன கருத்துக்கள், நிலைப்பாடுகளோடு ஒப்பிடும்போது இப்போது சொல்லியிருப்பது வெறும் தூவானம்தான்.

பேரினவாத சக்திகளைப் பொறுத்தவரை கலைஞரின் கருத்தை தமது விருப்பு, வெறுப்புக்கு ஏற்ப நோக்கவேண்டிய அவசியம் ஏன் வந்தது?

கடந்த ஐந்துவருடகாலமாக இந்தியா இலங்கைத் தமிழர் பிரச்சனையை கைவிட்டுவிட்டது என்ற நிலைதான் இருந்தது.

இலங்கைத் தமிழர்களுக்கு பின்பலம் இல்லாமல் போயிருந்தமை பேரினவாத சக்திகளுக்கு ஆறுதலான விஷயம்தான். ஆனால், கலைஞர்மீது எப்போதுமே பேரினவாத சக்திகளுக்கு ஒரு சந்தேகம் இருந்துவந்திருக்கிறது. கலைஞர் கருணாநிதி பிரிவினைக்கு ஆதரவானவர். புலிகளின் நண்பர் என்பதெல்லாம் அவர்களது எண்ணமாக இருக்கிறது.

அரசியல்தீர்வு பற்றி கலைஞர் சொன்னதும், அவர்களது சந்தேகத்துக்கு கொம்புசீவிட்டதுபோல ஆகிவிட்டது.

கலைஞர் கருணாநிதியின் வெற்றி குறித்து தமிழ்நாட்டிலுள்ள அவரது அரசியல் எதிரிகளே கவலைப்படாதளவுக்கு, இலங்கையில் உள்ள பேரினவாத சக்திகள் கவலைப்படுவதாகத் தோன்றுவது அதனால்தான்.

ஆக, இலங்கைத் தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல, பேரினவாதிகள் மத்தியிலும் கலைஞர் கருணாநிதி என்ன செய்யப்போகிறார்? என்னும் எதிர்பார்ப்பு பெரியளவில் காணப்படுகிறது.

ஆனால், விஷயம் என்னவென்றால், இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் தமது வரையறை என்ன என்பது தொடர்பாக தெளிவான ஒரு கோட்டை கீறிக் கொண்டு, அதற்குள் நின்றுதான் கலைஞர் கருத்து தெரிவித்து வருகிறார்.

இலங்கை இனப்பிரச்சனையை மையமாக வைத்து தமிழக அரசியல் சுழன்ற காலம் மலையேறிவிட்டது.

இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுக்காதவர்கள் தமிழ் உணர்வு இல்லாதவர்கள் என்று கருதப்பட்ட காலங்கள் இனித் திரும்புமா என்பது சந்தேகம்தான்.

தமிழக மக்களிடம் செல்வாக்குப் பெறத்தக்க ஒரு விடயமாக இல்லாத பிரச்சனையில் தமிழக அரசியல்வாதிகள் தமது கவனத்தை அதிகம் செலுத்தப்போவதில்லை.

எப்போதுமே மக்களிடம் விலைபோகக்கூடிய கோஷங்கள், பிரச்சனைகள் என்பவற்றுக்குத்தான் அரசியல்வாதிகள் தமது நிகழ்ச்சி நிரலில் முதலிடம் கொடுப்பார்கள்.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இயல்பாகவே தமிழ்உணர்வு உள்ளவர்தான். இலங்கைத் தமிழர்மீது தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவைவிட கலைஞர் பாசமுள்ளவர். பற்றுள்ளவர்தான்.

ஆனால், அரசியல் என்று பார்க்கும்போது கலைஞருக்கு இப்போதுள்ள முக்கிய கடமை கிடைத்த ஆட்சியை தக்கவைப்பதும், தனக்குப் பின்னரும் தி.மு.க. ஆட்சி தொடரக்கூடிய நிலையை ஏற்படுத்துவதும்தான்.

தி.மு.க.வுக்கு இப்போது கிடைத்துள்ள வெற்றி அக்கட்சியின் செல்வாக்கினால் மட்டும் கிடைத்தது அல்ல. ஜெயலலிதா தன் பொற்கரங்களால் தமிழக மக்களை புரட்டி எடுத்ததால் கிடைத்த வெற்றி.

தமிழ் நாட்டில் சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டுப் போனதும் ஜெயலலிதா ஆட்சிமீது சொல்லப்பட்ட முக்கிய புகார்.

தமிழ்நாட்டில் வன்முறைக் கலாசாரம் பெருகிவிட்டது என்று ரஜினிகாந்த் பேசிய பேச்சுத்தான் வெடிகுண்டாகமாறி வேலை செய்தது.

அந்தப் பேச்சு தனது ஆட்சிக்காலத்தில் எழக்கூடாது என்பதில் கலைஞர் முதல் கவனம் செலுத்துவார்.

அங்குதான் இருக்கிறது பிரச்சனை.

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு என்று பார்க்கும்போது, புலிகள் அங்குவந்து சேர்ந்துவிடக்கூடாது என்பதும் ஒரு முக்கிய விடயமாக கொள்ளப்படும்.

தனக்கும், இலங்கையில் உள்ள தீவிரவாத அமைப்புக்களுக்கும் இடையே தொடர்புகள் இருப்பதாக காட்டிக்கொள்ள கலைஞர் விரும்பாதிருப்பதும் அதனால்தான்.

இன்னமும் சொல்வதானால், புலிகளுக்கும் தனக்கும் இடையே தொடர்போ, உறவோ இல்லையென்பதை நிரூபிக்கும் வகையில்தான் கலைஞரது அணுகுமுறைகள் அமையப்போகின்றன.

புலிகள் சார்பாக பிரான்சில் இருந்து திலகர் ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

அதுதொடர்பாக கலைஞர் கூறியிருந்த கருத்து, புலிகளை அவர் எந்தளவுதூரம் தவிர்க்க விரும்புகிறார் என்பதைத்தான் கோடிட்டுக்காட்டுகிறது.

"வாழ்த்து சொல்வது அவரவர் கருத்து, விருப்பம்" என்றுவிட்டார் கலைஞர். வேண்டாத விருந்தாளிகள் வீடுதேடி வந்துவிட்டார்கள். அதற்காக அவர்களை வரவேற்கவோ நட்பு பாராட்டவோ தயாராக இல்லை என்பதுபோலவே கலைஞரது கருத்து இருக்கிறது.

இந்த நேரத்தில் பழையதை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. தனது பிறந்தநாளுக்காக தமிழ் இயக்கங்களுக்கு தலா 50 ஆயிரம் கொடுத்தார் கலைஞர். ஏனைய இயக்கங்கள் அதனைப் பெற்றுக்கொண்டன. புலிகள் மட்டும் எம்.ஜி.ஆருக்கு தமது விசுவாசத்தைக் காட்டுவதற்காக, கலைஞர் கொடுத்த பணத்தை வாங்க மறுத்திருந்தார்கள்.

இப்போது புலிகள் அனுப்பிய வாழ்த்துச் செய்தியை பத்தோடு பதினொன்றாக கருதும் வகையில் பதில் சொல்லியிருக்கிறார் கலைஞர்.

முன்னர் என்றால் புலிகள் வேறுவிதமாக தமது பிரதிபலிப்பை காட்டியிருப்பர். இப்போது தமிழ்நாட்டில் கலைஞரை எப்படியாவது நட்பாக்கிக் கொள்ளவேண்டிய நிலை புலிகளுக்கு உண்டு.

அதனால், கலைஞர் வெறுத்தாலும், அவரைப் புகழவேண்டிய நிலையில் புலிகள் இருக்கிறார்கள். அதன் வெளிப்பாடுதான், 'கலைஞர் தனது புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை கைவிடவேண்டும்.' என்று விடுதலைப் புலிகள் பத்திரிகையில் வெளியாகியுள்ள வேண்டுகோள்.

இந்தியா தொடர்பாகவும், தமிழக அரசியல் தலைவர்கள் தொடர்பாகவும், தமிழக பின்தளத்தை எப்படி பயன்படுத்தவேண்டும் என்பதிலும் புலிகள் கைக்கொண்ட அணுகுமுறைகளின் தோல்வியைத்தான் கலைஞருக்கு புலிகள் விடுத்துள்ள வேண்டு கோள் புலப்படுத்துகிறது.



தந்தை செல்வா-அமிர், மத்தியில் கலைஞர், இணைந்து நிற்பதில் ஆசை. கனவான காலம்

குறுகிய கால அடிப்படையில் நோக்கினால்: இந்திய- தமிழக அரசியலில் புலிகள் கடைப்பிடித்த அணுகுமுறைகள் பயன் கொடுத்திருந்தன என்பது உண்மைதான்.

உதாரணமாக, கலைஞர் கொடுத்த 50 ஆயிரத்தை பிரபா மறுத்ததால், அதனை மறக்காத எம்.ஜி.ஆர்.மூன்று கோடி ரூபாய்களை புலிகளுக்கு கொடுத்திருந்தார். ஒரு இயக்க வளர்ச்சியில் அந்தத் தொகை குறிப்பிடத்தக்கதுதான்.

எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பின்னர் கலைஞரோடு புலிகள் உறவை எற்படுத்திக்கொண்டனர். புலிகள் இயக்கத்தின் பலம் காரணமாகவே அதன் நட்பை புறக்கணிக்க முடியாமல் கலைஞரும் ஏற்றுக் கொண்டார்.

ஆனால், பத்மநாபா கொலை, ராஜீவ் கொலை போன்றவற்றுக்கு கலைஞரின் நட்பு மூலம் கிடைத்த சாதகங்களை புலிகள் பயன்படுத்திக் கொண்டனர்.

பத்மநாபா கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் தமிழ்நாட்டிலிருந்து தப்பி யாழ்ப்பாணம் வருவதற்கு தடையே இருக்கவில்லை. அப்போது தமிழக உள்துறை செயலாளராக இருந்த நாகராஜன் வாய்மூலம் போட்ட உத்தரவுதான் தமிழக பொலிசாரைக் கட்டிப்போட்டிருந்தது.

பத்மநாபா படுகொலை கலைஞருக்கு அதிர்ச்சிதான். அதேவேளை அதனை ஒரு முதலும் கடைசியுமான அதிர்ச்சியாக ஏற்றுக் கொள்ளவே நினைத்தார். ஆனால் அடுத்தும் பெரும் இடி விழுந்தது. கலைஞர் வெறுத்துப் போனார். இறுதியில் அவரது ஆட்சிக்கே ராஜீவ் கொலை தூக்குக்கயிரானது.

பத்மநாபா கொலை, ராஜீவ் கொலை இரண்டுமே ஒரு பின்தளத்தை எப்படி பயன்படுத்தக்கூடாது என்பதற்கு நல்ல உதாரணங்கள்.

அந்த இரண்டு சம்பவங்களிலும் தமிழக அரசின் நட்பை புலிகள் பயன்படுத்தியவிதம் அவர்களது குறிவைப்புக்கு சாதகம்தான். ஆனால் நீண்டகால அடிப்படையில் பார்க்கும்போது புலிகளுக்கு அரசியல், இராணுவரீதியில் நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டன.

சில நிகழ்வுகளுக்கான கூட்டல் கழித்தல் கணக்குகளை உடனடியாகப் போட்டுப்பார்த்தால் லாபம் காட்டும். அதே நிகழ்வுகளை வைத்து நீண்டகாலம் கழித்து கணக்குப் பார்த்தால் நஷ்டம் காட்டும்.

இந்தியா தொடர்பான புலிகளின் அணுகுமுறைகளும் அந்தக் கணக்குமாதிரித்தான்.

இந்தியாவோடு தேவையானது நீண்டகால நட்பு என்பதை அக்காலகட்டத்தில் புலிகளுக்கு இருந்த வாய்ப்புக்களும், வளங்களும் மறக்கடிக்கச் செய்திருந்தன.

இந்திய அரசானாலும் சரி, தி.மு.க. வானாலும் சரி இலங்கைப் பிரச்சனையில் ஆர்வம் காட்டும் போது அதிலே ஒரு பகுதியாக அவர்களது சொந்த நலனும் இருக்கவே செய்யும். அந்த நலனும் இல்லாமல் போகுமானால் அவர்களது ஈடுபாடு குறையவே செய்யும்.

கலைஞர் கருணாநிதியைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தான் காட்டும் அக்கறை மூலம் தமிழக மக்களிடமும் செல்வாக்குப் பெறவே விரும்புவார்.

புலிகளை அங்கு நடமாடவிட்டால் தனது செல்வாக்கு மட்டுமல்ல, ஆட்சிக்கே ஆபத்து என்ற நிலையில், எதிர் நிலைப்பாட்டைத்தான் எடுப்பார்.

எனவே தவறு கலைஞர் மீதா? அவரை இந்நிலைப்பாட்டுக்கு தள்ளிய புலிகள் மற்றும் ஈழப் போராளி அமைப்புக்கள் மீதா என்பதை தீர்மானிக்க வேண்டிய தருணம் இதுதான்.

புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் கலைஞருக்கு விடுத்துள்ள வேண்டுகோளில், தவறுகளுக்காக வருந்தும் அறிகுறியைவிட, காங்கிரஸ் அரசுமீது குற்றம் சாட்டும் தொனியே மேலோங்கியுள்ளது.

ஆனால், தற்போதுள்ள மத்திய அரசும் காங்கிரஸ் கட்சியின் பிடியில்தான் இருக்கிறது. கலைஞர்கூட காங்கிரஸ் கட்சியை பகைத்துக் கொள்ளும் நிலையில் இல்லை.

அதுதவிர, இந்திய மத்திய அரசியலில் காங்கிரஸ் கட்சி எப்போதுமே தீர்க்கமான பங்கை கொண்டிருக்கவே செய்யும். எனவே- இந்திய உள் அரசியலில் தலையிட்டு விமர்சிப்பது புலிகளுக்கு நீண்டகால நோக்கில் சாதகமானதல்ல.

நடந்தது நடந்ததாக இருக்கட்டும். இனி நடப்பது நல்லதாக இருக்கும் என்ற நம்பிக்கையை தமது அணுகுமுறைகள் மூலம் இந்திய-தமிழக அரசியல் சக்திகளிடம் ஏற்படுத்த புலிகள் முயன்றால், அது உடனடியாக இல்லாவிட்டாலும், நீண்டகால நோக்கில் பயன்கொடுக்கக்கூடும்.

ஆனால், புலிகள் எதிர்ப்பார்ப்பது போல உடனடியாக கலைஞரோ, இந்திய அரசோ புலிகளுக்கு சாதகமான போக்கை கைக்கொள்ளப்போவதில்லை.

அரசியல் தீர்வு முயற்சிகளில் கூட இந்தியா உடனடியாக இலங்கை அரசை நிர்ப்பந்திக்கக்கூடிய அரசியல் சூழல் அங்கு காணப்படவில்லை.

இந்நிலையில், 'இலங்கைத்தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு' என்ற கலைஞரின் கருத்தை, ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்றளவில் சுவைத்துக்கொண்டிருக்கலாம். ■

**நாரதர்**

---



## அதிரடி அய்யாத்துரை

கட்டுப்பாட்டு பகுதிக்குள் ரெண்டு எழுத்தார் நடமாட்டம் கூடியிருக்குதாம். சறம், சேர்ட், இடுப்பில் சுமையோடு திரிகினமாம். சனம் துறவிகள் மாதிரி மாறிப்போட்டினம். சித்தன் போக்கு சிவன்போக்கு எண்டமாதிரித் திரியுது சனம். விரக்திமேல் விரக்திபட்டு மனம் மரத்துப்போகும்தானே.

வீடுகளுக்கு திரும்பியவைக்கு காத்திருந்த அதிர்ச்சிகளில் ஒன்னு கட்டில்களில் மெத்தைகளும் மாயம். காயம்படும் ஆட்களுக்கு உதவும் எண்டு ரெண்டு எழுத்தாரும் அவற்றைக் கொண்டுபோனதாகத் தகவல். சனம் இப்போதைக்கு திரும்பாதுதானே, சும்மா கிடந்து பழுதுபடுவதைவிட பயன்படுத்தலாம் எண்டு நினைச்சிருப்பினமாக்கும்.

வெளிநாட்டுக் கடிதங்களைத்தான் யாழில் உள்ளவை பலர் ஆவலோடு எதிர்பார்த்திருக்கினமாம். கடிதங்களை ஒழுங்காக கிடைக்க ஆகவேண்டியதைப் பார்க்கச் சொல்லி அதிகாரிகளை மொய்க்கினமாம். விலைகள் தலைசுற்றவைக்குது. அதனால் வெளி நாட்டுக்காக கைச்செலவுக்கு தேவைப்படும்தானே. ரெண்டு எழுத்தார் சர்வதேச தலையீடு கேட்கினம். சனம் சர்வதேச தபாலை எதிர்பார்க்குது.

எல்லாம் ஒழுங்காகக் கிடைக்கத் தொடங்கினால் சனம் எல்லாத்தையும் மறந்துவிடும் எண்டு ரெண்டு எழுத்தார் தரப்பில் பலமான கருத்து நிலவுது. அதனால் அதுக்கேற்றமாதிரியான அலுவல் பார்ப்புக்களிலும் இறங்கத்தான் செய்வினம். அது ஒரு பக்கமிருக்க, அயல்வீட்டுக்காரனுடன் பிரச்சனையெண்டா, ஆளை மெள்ள மாட்டிவிடுகிற மொட்டைக் கடித சமாச்சாரமும் அமோகமாக ஆரம்பிச்சிருக்குதாம். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டாவது தங்கடை காரியம் சாதிக்கிறதிலை எங்கள் ஆக்கள் சிலர் கில்லாடிகளல்லோ.

கூட்டான கட்சிக்குள் கொள்கை முரண்பாடு. கிழக்கின் வெகுஜன பிரதிநிதிகள் இருவர் வடக்கு-கிழக்கு பிரிப்பை ஒற்றைக்காலில் நின்று வற்புறுத்துகினமாம். யார் அந்த இரண்டுபேர் தெரியுமோ? ஒருவர் து.சிங்கம். மற்றவர் திருவான மலையின் தங்கமானவர்! இருவரும் பிரிப்பு பிரிப்பு எண்டு வாதாட, திருவானமலையின் சம்பந்தமானவர் இணைப்புக்கு குரல் கொடுத்தவராம். ஒரு முடிவுக்கு வரமுடியாமல் கூட்டான கட்சியின் சம்பத்திய கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாம். தனிநாடு கேட்ட கட்சிக்குள் மாகாணப் பிரிப்பு சண்டை, எப்படியோ பிரிவினைக் கோரிக்கையை கைவிடாமல் தொடர்வது கொள்கை உறுதிதானே.

இயக்கங்கள் துவக்கை வைத்து பணம் திரட்டினால், கூட்டான கட்சியும் என்ன குறை வைக்குமோ? பதவியைவைச்சு நாலு காசு சம்பாதிக்கினமாம். கிழக்கில் கூட்டான கட்சி வெகுஜன பிரதிநிதிகள் சிலர் சிபாரிசுகளுக்காக அன்பளிப்புக்கள் வாங்குவதாக பலத்த பேச்சு அடிபடுகிறது. அகிம்சை வழியிலும் உழைக்கலாம். சாணக்கியம் தான்.

தடைமுகாமில் போய் காத்திருக்கட்டும் எண்டு இப்பவெல்லாம் தாராளமாக பாஸ் கொடுக்கினம் ரெண்டு எழுத்தார். பச்சைத்தரப்பின் அனுமதி கிடைக்கும்வரை ரெண்டு எழுத்தாரின் பகுதியில்தானே பயணிகள் காத்திருப்பினம். அந்த இடத்தில் சாப்பாட்டுக்கடை, தங்குவசதி என்று பலவழிகளில் ரெண்டு எழுத்தாரும் நல்ல வருமானம் பெறமுடிகிறதாம்.

இடம்பெயர்ந்துவந்து தலைநகரில் இருக்கும் பெரியவர் ஒருவர் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தார். "ஏன் பாருங்கோ கவனிப்பு போதாதோ?" எண்டு கேட்டேன். "இல்லை, ஊரில் எண்டால் காற்றாட ஈஸிச்சேரில் படுத்துக் கிடக்கலாம். இங்கே ஒரு அறைக்குள்ளே வாழைக்குலைக்கு புகைபோடுகிறமாதிரியல்லோ அடைஞ்சுகிடக்க வேண்டிக்கிடக்கு. பைப்பை திறந்தா சொட்டு சொட்டா தண்ணீர் வருகுது. அங்கை எண்டால் 25 வாளி அள்ளிக் குளிக்கலாம். என்னதான் இருந்தாலும் அந்த சுகம் வருமோ?" எண்டு கேள்வி மேல் கேள்வியாலை துளைச்சுப்போட்டார் மனுசன்.

வீடுகளில் கிடந்த ரேடியோப் பெட்டிகளும் திறந்து பார்க்கப்பட்டு பிரிச்சுக் கிடக்காம். ஏனாம்? நகையை நட்டை உள்ளே ஒளிச்சு வைச்சுப்போட்டு சனம் போயிருக்கலாம் எண்டு ஒரு சந்தேகம்தான், சனத்தின் 'டெக்னிக்' தெரிஞ்ச தம்பிமார்தான் பிரிச்சுப் பார்த்திருப்பினம் எண்டு சனம் கதைக்குதாம்.

டி.ராஜேந்தர் தமிழக தேர்தலில் அமோக வெற்றி பெற்றவரல்லோ. அடுக்குமொழி விஷயத்தில் அவர் ஸ்பெசலிஸ்ட். உதாரணத்திற்கு ஒன்று.

"ரோமமும் காமமும் இல்லாமல்
மனிதன் பிறப்பதில்லை.
தலையில் ரோமம் உதிர்ந்தால்
அதற்கு பெயர் வழுக்கை.
மனதில் காமம் உதிர்ந்தால்
அதற்குப் பெயர் ஆன்மிக வாழ்க்கை."



படிப்பகம்

www.padippakam.com

# 83

அரசியல் தொடர்

# புறக்கோட்டையில் குண்டு வெடிப்பு




கனடாவில் சமீபத்தில் கைது செய்யப்பட்டுள்ள நிஷாந்தன். தன்னைப் பற்றிய தகவல்களை மறைத்தார் என்று குற்றச்சாட்டு.

# றோ-புலிகள் கூட்டுத் திட்டம்

அற்புதன் - எழுதுவது

### வழிமறித்து தாக்குதல்

1987 சிங்கள-தமிழ் புத்தாண்டை முன்னிட்டு போர் நிறுத்தம் ஏற்படுத்தும் முயற்சி தோல்வியடைந்தது பற்றி சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தேன்.

போர் நிறுத்தத்துக்கு உடன்படமறுத்த பிரபாகரன் திருமலையில் இருந்த புலேந்திரனுக்கு தாக்குதல் ஒன்றுக்கான உத்தரவை அனுப்பினார்.

ஏப்ரல் 14ம் திகதி அநுராதபுரத்தில் புதுவருடக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. பெருந்திரளான சிங்கள மக்கள் அதில் கலந்துகொண்டனர்.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் அனுராதபுரக் கொண்டாட்டத்துக்கு சிங்கள மக்கள் சென்றிருந்தனர்.

திருக்கோணமலையில் குடியேறியிருந்த சிங்கள மக்களில் பலரும் கொண்டாட்டங்களுக்கு சென்றிருந்தனர்.

புதுவருட கொண்டாட்டங்கள் முடித்து திருமலை நோக்கி பஸ்சில் சென்றுகொண்டிருந்தனர். 'கித்துலுத்துவ' என்னுமிடத்தில் வைத்து பஸ் வண்டிகள் வழி மறிக்கப்பட்டன.

மறித்தவர்கள் புலிகள் அமைப்பினர். பஸ்சிலிருந்து அனைவரையும் கீழே இறங்குமாறு கூறினார்கள் புலிகள். ஆயுத பாணிகளாக அவர்கள் நின்ற கோலத்தில் இருந்தே ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது என்று பஸ்சில் இருந்தவர்களுக்கு புரிந்து விட்டது.

அவர்கள் எதிர்பார்த்தது நடந்தது. பஸ்சிலிருந்து இறங்கியவர்கள்மீது சரமாரியாக சுடத்தொடங்கினார்கள் புலிகள்.

எங்கும் மரண ஓலம். துப்பாக்கி வேட்டொலிகள். உயிர்தப்பி ஓடநினைத்தவர்களும் துரத்திச்சென்று தாக்கப்பட்டனர்.

150 பேர் வரையான சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர்.

புலேந்தி அம்மான் என்றழைக்கப்பட்ட புலேந்திரன் தலைமையில்தான் அத்தாக்குதல் இடம்பெற்றது.

### 'றோ' போட்டதிட்டம்

இலங்கை அரசை வழிக்கு கொண்டு வர வேண்டுமானால் தலைநகரில் பாரிய தாக்குதல் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று இந்திய உளவுப்பிரிவான 'றோ' திட்டமிட்டது.

'றோ' சார்பாக ஈழப்போராளி அமைப்புக்களை கையாண்டவர் சந்திரன். ஏனைய இயக்கங்களைவிட புலிகள்மீது சந்திரனுக்கு ஒரு பிடிப்பு இருந்தது.

கொழும்பில் அக்காலகட்டத்தில் தாக்குதல் நடத்துவதானால் ஈரோசினால் மட்டும் தான் முடியும் என்ற கருத்து இருந்தது.

கொழும்பில் குண்டுத்தாக்குதல்களையும் ஈரோஸ் நடத்தியிருந்தது.

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

(அவைபற்றி பின்னர் குறிப்பிடப்படும்)

எனவே-கொழும்பில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவது தொடர்பாக ஈரோஸ் அமைப்பை முதலில் அணுகியது 'றோ'.

வெடி மருந்தும், தேவையான பணமும் தரப்படும் என்று 'றோ' சார்பாக சொல்லப்பட்டது.

தமது அமைப்பினருடன் பேசிவிட்டு முடிவு சொல்வதாக ஈரோஸ் சார்பில் பேசியவர் சொல்லிவிட்டு வந்துவிட்டார்.

'றோ'வின் திட்டம் குறித்து ஈரோசில் முக்கியமானவர்கள் கூடி விவாதித்தனர்.

ஈரோசினால் கொழும்பில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் பொருளாதார இலக்குள், இராணுவ இலக்குகளை குறிவைத்தே நடத்தப்பட்டவையாகும்.

'றோ'வின் திட்டப்படி தாக்குதல் நடத்தினால் பொதுமக்களே பெருமளவில் பலியாக வேண்டியிருக்கும்.

'றோ'வின் திட்டத்துக்கு உடன்பட முடியாது என்று ஈரோஸ் முடிவு செய்தது. என்றாலும் அதனை நேரடியாகச் சொல்லாமல் ஈரோஸ் பின்னடித்துக் கொண்டிருந்தது.

ஈரோஸ் தாமதம் செய்து இழுத்தடித்தமையால் புலிகளிடம் கேட்டது 'றோ'.

"கொழும்பில் உங்களால் தாக்குதல் நடத்தமுடியுமா?" "முடியும்" என்றார்கள் புலிகள்.

ஆனால் றோவுக்கு சந்தேகம்தான். கொழும்பில் புலிகள் அக்காலகட்டத்தில் தாக்குதல் எதனையும் செய்திருக்கவில்லை.

தாக்குதலுக்கு தேவையான வெடிமருந்து 'றோ'வினால் வழங்கப்பட்டது. கிட்டத்தட்ட நூறுகிலோ வெடிமருந்து கொடுக்கப்பட்டது.

தமிழ்நாட்டிலிருந்து வெடிமருந்தை யாழ்ப்பாணம் கொண்டுவந்து சேர்த்தார்கள் புலிகள்.

அடுத்து-அதனை கொழும்புக்கு கொண்டு செல்ல வேண்டும்.

யாழ் பல்கலைக்கழகத்தில் 'தளிர்' என்னும் பத்திரிகையை வெளியிட்டவர்களில் முக்கியமான ஒருவர் குரு.

'தளிர்' புலிகளுக்கு சார்பான சஞ்சிகை. பொதுவான சஞ்சிகைபோன்று வெளியிட்டு வந்தனர்.

கொழும்பு நடவடிக்கைக்கு குருதான் பொறுப்பாக அனுப்பட்டார். குண்டைத் தயாரிக்கும் பொறுப்பு சிவரூபன் என்பவருக்கு வழங்கப்பட்டது.

நீர்வேலி பப்பனின் லொறியில் சாமான்களோடு சமான்களாக வெடிமருந்து கொழும்புக்கு வந்து சேர்ந்தது.

### குண்டுக்கார்

கொழும்பில் கார் ஒன்றை வாங்கி அதிலே குண்டு பொருத்தப்பட்டது.

ஏப்பரல் 21ம் திகதி குண்டு பொருத்தப்பட்ட கார் கொழும்பு புறக்கோட்டை நோக்கிப் புறப்பட்டது.

மாலை நேரமானதால் கொழும்பு புறக்கோட்டை ஜனங்களால் நிரம்பிவழிந்து கொண்டிருந்தது. வானம் சற்று இருளத் தொடங்கியிருந்தது.

மழை வரமுன்னர் பஸ்ஸைப் பிடித்துவிட்டு செல்லும் அவசரத்தில் சனங்கள் ஓட்டமும், நடையுமாக பஸ் நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.



குண்டு பொருத்தப்பட்ட கார் புறக்கோட்டை பஸ் நிலையம் அருகே வந்து நின்றது. சாரதி ஆசனத்தில் இருந்தவர் இறங்கிச் சென்றுவிட்டார்.

காருக்குள் பொருத்தப்பட்டிருந்த நேரக்குண்டு தனது நேரம் வரும்வரை காத்திருந்தது.

நடக்கப்போகும் கோரத்தை காணச் சகியாமல் வானம் கரும்போர்வைக்குள் தன்னை மூடிக்கொண்டது.

கார்க் குண்டு பலத்த சத்தத்துடன் வெடித்தது. நகர் அதிர்ந்தது.

அதேநேரம் வானம் இடிமுழக்கம் எழுப்பி மழை பொழியத் தொடங்கியது.

புறக்கோட்டை பஸ் நிலையம் உருமாறிப் போயிருந்தது. பஸ் நிலையத்தில் காத்திருந்தவர்கள் உட்பட பலியான மக்களது எண்ணிக்கை நூற்றுக்கும் மேல்.

மூவினத்தைச் சேர்ந்தவர்களும் பலியானவர்களில் அடங்கியிருந்தனர்.

புறக்கோட்டை சம்பவத்தின் கோரத்தை விடாது பெய்துகொண்டிருந்த அடை மழை சற்றுத் தணித்துக்கொண்டிருந்தது.

அடைமழை பொழியத் தொடங்கி இருக்காவிட்டால் கலவர சூழ்நிலை ஒன்று உருவாகியிருக்கக்கூடும்.

> "கார் ஸ்டார்ட் ஆகவில்லை என்றதும் பொலிசாரும் சேர்ந்து தள்ளினார்கள். காருக்குள் குண்டு குறித்த நேரத்தில் வெடிக்கக் காத்திருந்தது."

கொழும்பில் அதுவரை நடத்தப்பட்ட தாக்குதல்களில் பொதுமக்கள் பெருமளவில் பலியான தாக்குதல் அதுதான்.

பொதுமக்களை இலக்காக வைத்து கொழும்பில் நடத்தப்பட்ட முதல் தாக்குதலும் அதுதான்.

### பழி வேறிடத்தில்

குண்டுவெடிப்பை அடுத்து நாடெங்கும் ஊரடங்கு சட்டத்தை உடனடியாகப் பிறப்பித்தது அரசாங்கம்.

கொழும்பின் சில பகுதிகளில்மட்டும் தமிழர்களுக்கு சொந்தமான கடைகள் தாக்கப்பட்டன. கலவர சூழல் ஏற்படாமல் தடுப்பதில் அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்க அம்சம்.

1977, 1983ம் ஆண்டுகளில் ஜே.ஆர் அரசாங்கம் நினைத்திருந்தால் இனக் கலவரங்களை கட்டுப்படுத்தி இருக்கலாம் என்பதற்கு 1987ல் மேற்கொள்ளப்பட்ட கட்டுப்படுத்தும் நடவடிக்கை ஒரு சான்று.

எனினும், கொழும்பில் இருந்த தமிழர்கள் பலர் அரசாங்கத்தைவிட மழைக்கே நன்றி சொல்லிக்கொண்டனர்.

குண்டுத்தாக்குதலை நடத்தியவர்கள் புலிகள்தான். பழி விழுந்தது ஈரோஸ்மீது.

ஈரோஸ்தான் தாக்குதலை நடத்தியது என்று அரசாங்கமும் சந்தேகம் தெரிவித்தது.

புலிகளும், ஈரோசும் இணைந்து செய்திருக்கலாம் என்றும் ஒரு ஊகம் வெளியானது.

தமக்கும், புறக்கோட்டைத் தாக்குதலுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று ஈரோஸ் அமைப்பு திட்டவட்டமாக மறுத்திருந்தது.

ஈரோசின் மறுப்பை யாருமே நம்பவில்லை.

புறக்கோட்டை பஸ் நிலைய குண்டு வெடிப்பை ஈழப் போராளிகளுக்கு எதிரான சர்வதேச பிரசாரத்திற்கு பயன்படுத்தியது அரசாங்கம்.

பொதுமக்களை இலக்காக வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் என்பதால் சர்வதேச கண்டனமும் எழுந்தது.

இத்தாக்குதலின் பின்னர் 'றோ'வுக்கு புலிகளால் கொழும்பிலும் தாக்கமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருந்தது.

புறக்கோட்டை குண்டுவெடிப்பின் பின்னர்தான் கொழும்பில் தமது நடவடிக்கைகளை தொடரலாம் என்ற நம்பிக்கையும் புலிகள் அமைப்பினருக்கு ஏற்பட்டது.

'றோ' அமைப்பால் புலிகள் இயக்கத்திற்கு ஒரு பெருந்தொகை வழங்கப்பட்டது. கிட்டத்தட்ட இருபது இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதில் உறுதியான தகவல் கிடைக்கப்பெறவில்லை.

'றோ' கொழும்பு அரசாங்கத்தை அதன் காலடியில் வெடிக்கும் குண்டுகளால் அதிர்ச்சிக்குள்ளாக்க நினைத்தது.

பொதுமக்கள் பெருமளவில் பலியாகும் நடிவடிக்கை தெற்கிலும் பிரச்சனையின் தீவிரத்தை உணரச்செய்யும் என்பதும் நோக்கமாக இருந்திருக்கலாம்.

அரசாங்கத்தின் காலடியில் குண்டுகளை வெடிக்கச் செய்து நெருக்கடியை ஏற்படுத்துவது மூலம், இலங்கை அரசாங்கம் இந்திய மத்தியஸ்தத்தை நாடியே தீரவேண்டிய நிலைக்கு தள்ளப்படும்.

இந்தியா தவிர்ந்த வேறுநாடுகளை நம்பிக்கொண்டு இலங்கை அரசும், ஜே.ஆரும் வடக்கு-கிழக்கு நிலவரத்தை கட்டுப்படுத்த முடியாது என்ற செய்தியையும் குண்டு வெடிப்பு மூலம் 'றோ' வெளிப்படுத்த முயன்றிருக்கலாம்.

தமது நாட்டின் நலன் என்ற பக்கத்தில் இருந்து உளவுப்பிரிவுகள் தீட்டும் திட்டங்கள் சில நம்பமுடியாதளவுக்கு கொடூரம் நிறைந்தவையாக இருக்கலாம்.

ஆனால் காலம் காலமாக அவ்வாறான நடிவடிக்கைகள் தொடரவே செய்கின்றன.

உதாரணமாக, இந்தியாவில் நடைபெற்ற பம்பாய் குண்டுவெடிப்பின் பின்னணியில் பாகிஸ்தானின் உளவு நிறுவனம் இருந்தது.

உளவு நிறுவனங்களது செயற்பாடுகள் ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியாதளவுக்கு மிக இரகசியமாக திட்டமிடப்படுவதால் நிரூபிப்பது கடினம்.

புறக்கோட்டை குண்டு வெடிப்பு தனது திட்டப்படிதான் நடந்தது என்று 'றோ'வும் ஒப்புக்கொள்ளப்போவதில்லை. 'றோ' சொல்லியே செய்யப்பட்டது என்று புலிகளும் வெளியே சொல்லப்போவதில்லை.

சொன்னால் இருதரப்புக்குமே அது பாதகம்தான். அதனால் இரகசியம் இறுதி வரை பாதுகாக்கப்படும்.

புறக்கோட்டை குண்டுவெடிப்பை தமது அரசியல், இராணுவ நோக்கங்களுக்கும் சாதகமாக இருக்கும் என்பதாலேயே புலிகளும் செய்வதற்கு ஒப்புக்கொண்டார்கள்.

### மற்றுமொரு தாக்குதல்

கொழும்பு புறக்கோட்டை குண்டு வெடிப்பை அடுத்து, கொழும்பில் புலிகள் மற்றொரு குண்டுவெடிப்பு தாக்குதலுக்கும் திட்டமிட்டனர்.

நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டவர்களில் ஒருவர் மூர்த்தி.

கொழும்பில் விபச்சாரம் செய்துவந்த மனோகரி என்னும் பெண் மூர்த்திக்கு பழக்கமானவர்.

மனோகரியை தன் அருகில் வைத்துக் கொண்டால் யாருக்கும் சந்தேகம் வராது என்று நினைத்தார் மூர்த்தி.

குறிப்பிட்ட தொகைப் பணம் தருவதாக சொல்லப்பட்டதால் மனோகரியும் ஒத்துழைக்க உடன்பட்டார்.

கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் மனோகரியுடன் தங்கியிருந்தார் மூர்த்தி.

இரண்டாவது நடவடிக்கைக்கும் நீர்வேலி பப்பனின் லொறியில் வெடிமருந்துகள் கொழும்புக்குள் பத்திரமாகக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன.

நிஷாந்தன் என்னும் விக்கிதான் கார்க்குண்டை தயார்படுத்தினார்.

தாக்குதல் இலக்காக தெரிவு செய்யப்பட்ட இடம்தான் பயங்கரமானது.

மருதானை பொலிஸ் நிலையம், ரயில் நிலையம், பஸ்நிலையம் என்பவற்றை பாதிக்கக்கூடிய பொது இடத்தில் காரை நிறுத்த வேண்டும்.

கார்க் குண்டு வெடிக்கும் நேரம் பாடசாலைகள் விட்டு மாணவர்கள் திரும்பும் மத்தியான வேளையாக இருக்க வேண்டும். மாணவர்கள் மட்டுமல்லாமல், ரயில் நிலையம், பஸ்நிலையம் என்பவற்றில் மத்தியான வேளையில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும்.

புறக்கோட்டை பஸ் நிலைய குண்டு வெடிப்பைவிட மருதானை குண்டு வெடிப்பு பயங்கரமாக இருக்க வேண்டும் என்பதுதான் திட்டம்.

குறைந்தது 300 பேராவது பலியாகக் கூடும் என்று கணிப்பிட்டே திட்டம் தீட்டப்பட்டது.

கார்க்குண்டு தயாராகியதும் மூர்த்தியிடம் காரை ஒப்படைத்தார் நிஷாந்தன்.

மூர்த்தி காரைச் செலுத்தினார். அருகில் மனோகரி அமர்ந்திருந்தார்.

### பொலிசாரும் தள்ளினர்

மருதானை பொலிஸ் நிலையம் அருகே வந்ததும், போக்குவரத்து நெரிசலில் ஏற்பட்ட பதட்டத்தில் கார் நின்றுவிட்டது.

மீண்டும் ஸ்டாட் செய்தால் குண்டு வெடித்துவிடுமோ என்று பயந்தார் மூர்த்தி. அதனால் அவரும், மனோகரியும் காரை விட்டு இறங்கி, தள்ளிக்கொண்டு சென்றார்கள்.

இருவராலும் தொடர்ந்து தள்ளிச் செல்ல முடியவில்லை. பொலிஸ் நிலைய வாயிலருகே வந்ததும் பதட்டம் வேறு வந்துவிட்டது.

இதனைக் கவனித்த மருதானைப் பொலிசார் சிலர், "என்ன பிரச்சனை?" என்று கேட்டனர். மனோகரிக்கு சிங்களம் நன்கு தெரியும். 'ஸ்டாட் வரவில்லை' என்று சொன்னார்.

பொலிஸ் நிலைய வாயிலில் கார் நின்றால் மேலதிகாரிகளிடம் திட்டு வாங்க வேண்டியிருக்குமே. அதனால் பொலிசாரும் சேர்ந்து காரைத் தள்ளி பொலிஸ் நிலைய வாயிலுக்கு சற்றுத் தள்ளி நிறுத்தினார்கள்.

ஆனால், காரை நிறுத்த வேண்டிய இடம் அதுவல்ல. இன்னமும் முன்னே செல்ல வேண்டும்.

மேலும் தள்ளிச் சென்றால் பொலிசார் சந்தேகப்படுவார்களோ என்று இருவரும் பயந்து விட்டனர்.

அதனால் காரை அப்படியே நிறுத்தி விட்டு 'மெக்கானிக்கை' அழைத்து வருவதாகக் கூறிவிட்டு, இருவரும் நழுவி விட்டனர்.

குறித்த நேரத்தில் கார்க்குண்டு வெடித்தது.

மருதானைப் பொலிஸ் நிலையத்தில் இருந்த பொலிசார், பஸ் நிலையத்தில் நின்ற பொதுமக்கள் உட்பட 150 பேர்வரை பலியானார்கள். நடைபாதை வியாபாரிகள் 7 பேரும் பலியானார்கள்.

இந்த நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட மனோகரி பின்னர் கைது செய்யப்பட்டார்.

மூர்த்தி, நிஷாந்தன் ஆகியோர் தப்பிச் சென்றனர்.

விசாரணையின்போது சகல விபரங்களையும் ஒப்புவித்தார் மனோகரி.

மூர்த்தி, நிஷாந்தன் ஆகியோர் பின்னர் இயக்கத்தைவிட்டு வெளியேறினார்கள். நிஷாந்தன் சமீபத்தில் கனடாவில் கைது செய்யப்பட்டுள்ளார். (தொடர்ந்து வரும்)

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# புத்தளம் படுகொலைகள்..... தவறிவரும் இலக்குகள்!



அநுராதபுரம், புத்தளம் ஆகியனவற்றின் எல்லைப்பகுதியில் உள்ள மீன்பிடிக்கிராமம் ஒன்றின்மீது கடந்த வாரம் மூர்க்கத்தனமான தாக்குதல் ஒன்று ஆயுதக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இத்தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 17 பேர்- வயது வேறுபாடின்றி கோரமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

ஸ்தல விசாரணைகள் மற்றும் உயிர்தப்பியோர் கொடுத்த விபரங்களைப் பார்க்கும் போது எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களே இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் இன்றைய உள்நாட்டு யுத்த நிலவரம் காரணமாக பச்சிளம் குழந்தைகள் முதற்கொண்டு, எதுவுமறியாத அப்பாவி மக்கள் பல்லாயிரக் கணக்கில் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையின் இன்றைய வடக்கு-கிழக்கு யுத்தம் இதுவரை சுமார் 50 ஆயிரம் பேரைப் பலியெடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இத்தொகையில் 75 சதவீதத்துக்கும் அதிகமான தொகையினர் அப்பாவிப் பொதுமக்களே என்பதை ஐயந்திரிபறக் குறிப்பிடமுடியும். இந்த அப்பாவிப் பொதுமக்கள் இலங்கையில் உள்ள மூவினத்தையும் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

ஆரம்பத்தில் அரசியல் கோரிக்கைகளுக்கெதிரான வன்முறைகளாகவே கலகங்கள் வெடித்தன. இக்கலகங்களில் அப்பாவிப் பொதுமக்களே உயிர், உடமைகளை இழந்தார்கள்.

பின்னர், காலப்போக்கில் இலங்கையின் அரசியல் பிரச்சனை ஓர் உள்நாட்டு யுத்தமாக மாறியபோதும் கூட அப்பாவிப் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரசியல் பிரச்சனைகள், இராணுவ ரீதியிலான அணுகுமுறைகள் என்பன எத்தகைய தீவிரத்தைக் கொண்டிருந்தபோதிலும், எந்தவொரு இனத்தைச் சேர்ந்த பொதுமக்களும் இழப்புக்களை எதிர்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

## "எப்போது நிராயுதபாணிகள் ஆயுதபாணிகளால் பாதிக்கப்படுகிறார்களோ அப்போது மானிட தர்மம் மடிந்துவிடுகிறது."

வடக்கு-கிழக்குப் பிரச்சினையே இன்று நாட்டில் ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. அத்துடன் இப்பிரச்சினை ஒரு முடிவில்லாத ஆயுதப் போராட்டத்தையும் கொண்டுள்ளது.

ஆயுதப் போராட்டம் வடக்கு-கிழக்கு விவகாரத்தில் முக்கிய இடம் பிடித்தமைக்கு, அப்பாவிப் பொதுமக்கள் காலத்துக்குக் காலம் தாக்கப்பட்டமையும், ஜனநாயக ரீதியிலான கோரிக்கைகள் பலாத்காரமான வழிமுறைகள் மூலம் தட்டிக்கழிக்கப்பட்டுவந்ததுமே முக்கிய காரணங்களாகும்.

எனவே ஆயுதப் போராட்டம், பலாத்காரம், இராணுவ நடவடிக்கைகள் என்பன பிரச்சனைகளை சுமுகமாக்குவதற்குப் பதிலாக அவற்றைக் கொளுந்து விட்டெரியச் செய்பவையாகவே இருக்கின்றன.

அநுராதபுரம்- புத்தளம் பிரதேசத்தில் கடந்த வாரம் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு எல்.ரி.ரி.ஈ.யினரே பொறுப்பாளிகளாவர், என்று அரசு தெரிவித்துள்ளது.

அத்துடன் கடந்த காலங்களில் சிங்களக் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் மீதான தாக்குதல்களுக்கும் எல்.ரி.ரி.ஈ.யினரே பொறுப்பாளிகள் எனவும் அரசு தெரிவித்துள்ளது.

தென்னிலங்கையில் வடக்கு-கிழக்குப் பகுதிகளை அண்டிய சிங்களக்கிராமங்களில் இதுவரைகாலமும் இடம்பெற்ற பலநூற்றுக்கணக்கான அப்பாவி மக்களின் படுகொலைகளுக்கு எல்.ரி.ரி.ஈ.யினரையே அரசு சாடியுள்ளறது. அது முற்றிலும் தவறான குற்றச்சாட்டு என்றும் கூறிவிடமுடியாது.

மறுபுறத்தே வடக்கிலும், கிழக்கிலும், படையினரின் இலக்குத்தவறிய தாக்குதல்களினால் மட்டுமல்ல, விஷமத்தனமாகவே பொதுமக்கள் மூர்க்கத்தனமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் எண்ணிலடங்காது இடம்பெற்றுள்ளன.

அத்துடன் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல, தென்னிலங்கையில் கூட ஆட்சியதிகாரங்களின் அடாவடித்தனமான போக்குகளினால் கடந்தகாலங்களில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வதைமுகாம்கள், கொலைமுகாம்கள், தனிப்பட்ட ஆயுதபாணிகள், என்று பல்வேறு வடிவத்திலும் மனித உரிமைமீறல்கள், சித்திரவதைகள், படுகொலைகள் என்பன நேரடியாகவும், மறைமுகமாகவும் இடம்பெற்றுள்ளன.

இதற்கு தற்போது இடம்பெற்றுவரும் ஆணைக் குழு விசாரணைகள் சான்று பகருகின்றன.

எனவே எத்தகையதொரு சூழ்நிலையிலும் பொதுமக்கள்- எந்தவொரு இனத்தைச் சேர்ந்தவர்களானபோதிலும் அவஸ்தைக்கும், அவலத்துக்குமுள்ளாவதை அறவே ஏற்றுக்கொள்ளமுடியாது.

இன்று நாடளாவிய ரீதியில் அனைத்து இன மக்களும் மடியில் நெருப்பைக் கட்டியவர்களாக நடமாடித் திரிவதையே அவதானிக்க முடிகின்றது.

எங்கே, எப்போது, எத்தகைய அனர்த்தம் ஏற்படுமோ என்பது அவர்களின் மனதில் உள்ள பீதியாக இருக்கின்றது.

வடக்கு-கிழக்கின் இன்றைய நிலபரத்தை எடுத்து நோக்கினால் படையினரும், எல்.ரி.ரி.ஈ.யினரும் பரஸ்பரம் பதுங்கியிருந்து ஒருவரையொருவர் தாக்கிவருகின்றனர்.

இந்த கெரில்லாத் தாக்குதல் அண்மைக்காலங்களில் மும்முரமடைந்துள்ளது. வடக்கே யாழ் குடாநாட்டைப் படையினர் கைப்பற்றியதையடுத்து எல்.ரி.ரி.ஈ.யினர் கிழக்கில் இந்த கெரில்லாத் தாக்குதலை தீவிரமாக்கியுள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலும் கோண்டாவில், புத்தூர் ஆகிய இடங்களில், படையினருக்குக்குறிவைத்துப் புதைத்து வைக்கப்பட்டிருந்த அமுக்க வெடிகளில் பொதுமக்கள் சிக்குண்டு உயிரிழந்திருந்தனர்.

இது தவிர சிறு பொறி வெடிகள், கண்ணிவெடிகள் என்பவை காரணமாகவும் கை, கால்களை இழந்தும் அப்பாவிப் பொதுமக்கள் வடக்கே இழப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

நவீன தந்திரமான கெரில்லா யுத்தத்தில் மனிதர்கள் ஏறத்தாழ மிருகங்களாகவே மாறிவிடுகின்ற தன்மை காணப்படுகின்றது.

வனங்களில் வாழுகின்ற மிருகங்களான கொரில்லா, புலி, சிங்கம் என்பன பதுங்கித்தாக்கியே தமது இரையைப் பெறுகின்றன.

இப்பதுங்கித் தாக்கும் தந்திரத்திற்காக அந்த விலங்குகள் நீண்ட நேர காலத்தைச் செலவிடுகின்றன.



எவ்வித சத்தமோ, சலசலப்போ இன்றி புலன்கள் அனைத்தையும் உரிய வகையில் உபயோகித்து இரைதேடித் தமது பாய்ச்சல்களை மிருகங்கள் நடத்துகின்றன.

இத்தகைய தாக்குதல் பாணியையே கெரில்லாத்தாக்குதல், அதிரடித்தாக்குதல் என்றெல்லாம் இன்றைய காலகட்டத்தில் ஆயுதப் படையினரும், கிளர்ச்சியாளர்களும் உலகில் அனைத்துப் பகுதிகளிலும் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே மனிதனை மிருகமாக்கிவிடுவதாகவே இந்தப் பதுங்கித் தாக்கும் முறை விளங்குகின்றது.

இத்தாக்குதல்முறை காரணமாக அமைதியாக வாழ்ந்துவரும் மக்களும் பூரண அவஸ்த்தைக்குள்ளாகிவருகின்றனர்.

கடந்த வாரம் அநுராதபுரம்- புத்தளம் பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல்கூட படுமோசமானதாகவுள்ளது. தாக்குதல்களை மேற்கொண்டவர்களுக்கும், கொடிய விலங்கினங்களுக்குமிடையே எவ்வித வேறுபாடுமில்லை என்பதைக் கூட இத்தாக்குதல் வெளிப்படுத்தியிருந்தது.

ஆயுதமேந்தியவர்கள், ஆயுதபாணிகளையே எதிர்கொள்ள வேண்டுமே தவிர நிராயுதபாணிகளையல்ல.

எப்போது நிராயுதபாணிகள், ஆயுதபாணிகளால் பாதிக்கப்படுகிறார்களோ, அப்போது மானிடதர்மம் என்பது நசிந்து விடுகின்றது.

உயர்ந்த இலட்சியங்கள், உரிமைகள், நீதி, நியாயங்களை வென்றெடுப்பதற்கான போராட்டங்கள் என்பது எவ்விதத்திலும் நெறிதவறித் தடம் புரண்டு விடக்கூடாது.

நெறி தவறிய போராட்டங்கள் தோல்விகளை மட்டுமல்ல, அபாண்டமான பழிகளைக்கூட ஏற்படுத்தி விடுகின்றன.

ஒருபுறம் எல்.ரி.ரி.ஈ.யினரும், மறுபுறம் ஆயுதப்படையினரும் பரஸ்பர தாக்குதல்களில் ஈடுபட்டிருக்கும் இத்தருணத்தில் அப்பாவி மக்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கவே செய்வர்.

இதனால் யுத்தங்களுக்காகச் செலவிடப்படும் பணந்தவிர, பொதுமக்களின் இழப்புக்களுக்காகச் செலவாகும் பணமும் தொடர்ந்து அதிகரித்தே செல்லும்.

நன்கு முறுக்கேறி, மூர்க்கத்தன்மாக முற்றிப் போயுள்ள வடக்கு-கிழக்கின் யுத்த நிலவரத்தை அரசு முடிவுக்குக் கொண்டுவரவேண்டியதே இன்றைய தேவையாக இருக்கின்றது.

வடக்கு-கிழக்கு நிலவரத்தைப் பொறுத்தவரை இராணுவரீதியாகத் தனது கரம் மேலோங்கி இருப்பதாக அரசு மார் தட்டி வருகின்றது.

அப்படியாயின் ஒரு போர் நிறுத்தத்தை அறிவித்து அரசியல் ரீதியான அணுகுமுறைகளை அரசு ஆரோக்கியமானதாக்க வேண்டும்.

இல்லையேல் வடக்கு-கிழக்கின் யுத்த நிலவரம் என்பது தொடர்ந்து திக்குத் திசைதெரியாமலும், கண்மூடித்தனமானதாகவும் தொடர்ந்து செல்லும் என்பதற்கு கடந்தவாரங்களில் அப்பாவிமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் நல்ல உதாரணமாக விளங்குகின்றன.

சமாதானத்தை ஏற்படுத்துவது கடினமான பணியாக இருக்கலாம். ஆனால் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு போர்நிறுத்தமொன்றைக் கொண்டு வரலாம்.

இப்போர்நிறுத்தம் உயிராபத்துக்களைத்தவிர்க்கும் அதேசமயம், அரசியல் அணுகுமுறைகளை ஆரோக்கியமானதாக்கி விடவும் முடியும், என்றே கருதமுடிகின்றது.

## இந்திய அரசியல்










-தமிழக சஞ்சிகை 'துக்ளக்' வெளியிட்ட காட்டூன்கள்-



படிப்பகம்

www.padippakam.com

# கைவிடப்பட்ட கார்லோஸ்

தருவது ரசிகன்

**கா**ர்லோஸ் நவேகாவுக்காக காத்திருந்தான்.

நேரம் செல்ல செல்ல 'அவள் வராமல் இருந்துவிடுவாளோ' என்றும் நினைத்தான்.

நவேகா ஏமாற்றவில்லை. மாலை 6.30 மணிக்கு வந்தாள். ஒரு தேவதை மாதிரி, குளிர்ப்பெட்டியில் இருந்து அப்போதுதான் வெளியே எடுத்த ஆப்பிள் மாதிரி இருந்தாள்.

மொஸ்கோவில் பார்த்ததைவிட இப்போது கன்னத்தில் தசை போட்டிருந்தாள். அவளும் கார்லோஸை விழிகள் விரிய பார்த்தாள். கார்லோஸ் முன்பைவிட ஒரு சுற்றுப் பெருத்திருந்தான். முகத்தில் மட்டும் அதே குழந்தைத்தனம். 'இவனா சர்வதேச பயங்கரவாதி' என்று நினைத்தாள். தான் கேள்விப்பட்ட செய்திகள் யாவும் பொய்யோ என்று ஒரு கணம் தடுமாறித்தான் போனாள்.

கார்லோஸ் 'ஹலோ' சொல்லி கை நீட்ட பற்றிக் குலுக்கி 'ஹலோ' என்றாள். மென்மையான கரம்.

"எப்படியிருக்கிறாய்?" என்றான் கார்லோஸ்

'பார்த்தால் எப்படித் தெரிகிறது?" என்று கேட்டுக்கொண்டே, அவன் காட்டிய இருக்கையில் அமர்ந்தாள்.

"சொன்னால் கோபிக்கமாட்டியே?"

"மாட்டேன், சொல்லு."

"இப்போதுதான் மரத்திலிருந்து பறித்த ஆப்பிள்மாதிரி இருக்கிறாய்" அவன் சொன்னதற்கு சங்கீதம் மாதிரிச் சிரித்தாள் நவேகா.

"என்ன குடிக்கிறாய்?"

"இரத்தம்!" என்றாள். கார்லோஸ் சிரிக்க, "சர்வதேச பயங்கரவாதியிடம் தாராளமாகக் கிடைக்கக்கூடியது அது ஒன்றுதானே!"

"பயங்கரவாதியென்றால் என்ன? சொல்லு, உனது விளக்கம் என்ன?"

"பயங்கர.. பயங்கரவாதியென்றால் இரக்கமில்லாதவர்கள். கொலைகாரர்கள். மனிதாபிமானம் கிலோ என்ன விலை என்று கேட்கக்கூடிய ராட்சகர்கள். போதுமா?"

"போதும். பாலஸ்தீனர்களை அவர்களது தாயகத்தைவிட்டே விரட்டினார்களே இஸ்ரேலியர்கள். அவர்கள் யார்?"

"அதுவும் பிழைதான். அதற்காக நீ செய்வதெல்லாம் நியாயம் என்று அர்த்தமா? கொடுமை!"

"எந்தவொரு அரசாங்கமாவது வன்முறை இல்லாமல் ஆட்சி நடத்துகிறதா சொல்லு. உரிமை கேட்டால் பொலிஸை விட்டு உதைக்கிறார்கள். சுதந்திரம் கேட்டால் உயிரைப் பறித்து வீசுகிறார்கள். அடிக்கு அடி கொடுத்தால்தான் உறைக்கிறது. என்னையே எடுத்துக்கொள்ளேன், சாதாரண கார்லோஸாக இருந்து நியாயம் பேசினால் அயல்வீட்டில் உள்ளவனுக்குக் கூட கேட்டிருக்காது. இப்போது நான் சொல்லும் ஒவ்வொரு கருத்தும் உடனடியாக உலகின் செவிகளில் எதிரொலிக்கிறது. வன்முறையை கைவிடு என்பீர்கள். கைவிட்டால் யார் மதிக்கிறீர்கள்? சில விஷயங்கள் பேசுவதற்கு சுலபமாக இருப்பது உண்மைதான். நடைமுறையில் அத்தனை சுலபமாக இருப்பதில்லை நவேகா."

"நீ யாருக்காக இப்படி எல்லாம் செய்கிறாய்?"

அந்தக் கேள்விக்கு கார்லோஸால் உடனடியாக பதில் சொல்ல முடியவில்லை. அரேபியப் புரட்சியின் ஓரங்கம் என்று கார்லோஸ் தன்னை அழைத்துக் கொள்கிறான். ஆனால் அரேபியப் புரட்சியாளன் என்ற வட்டத்திற்குள் இருந்து அவன் வெளியேறி நீண்ட காலமாகி விட்டது.

கார்லோஸ் எப்போதுமே அரேபியப் புரட்சியின் அங்கமாக முடியாது. வேண்டுமானால் அரேபியப் புரட்சியின் சில நலன்களுக்காக பயன்படுத்தப்படும் ஆயுதமாக உபயோகப்படுத்தப்படலாம் என்பதுதான் அரேபிய நாடுகளது எண்ணம் என்பது அவனுக்கு தெரிந்தே இருந்தது.

கார்லோஸ்மீது அரேபிய நாடுகளுக்கும், அரேபிய நாடுகள்மீது கார்லோஸுக்கும் பரஸ்பர சந்தேகம் இருந்தது. அதனால்தான் கார்லோஸ் ஐரோப்பிய நாடுகளில் தனது பாதுகாப்பு இல்லங்களை வைத்திருந்தான்.

"என்ன மௌனமாகிவிட்டாய்? நான் சொல்லவா? உனக்காக, உன் புகழுக்காக, உன் தேவைகளுக்காக! எனக்குத் தெரியும் உனக்கு உல்லாசமாக வாழ ஆசை. உன்னை எல்லோரும் புகழ வேண்டும் என்று ஆசை. பத்துப்பேர் மத்தியில் நீ இருந்தாலும், உன்னை மட்டுமே தனித்துவமாக பிரித்துக்காட்ட விருப்பமுள்ளவன் நீ. பாலஸ்தீன இயக்கங்கள் உனக்கு பயிற்சி தந்ததோடு சரி. உன்னால் தலைவனாக மட்டும்தான் இருக்க முடியும். தொண்டனாக இருக்க முடியாது. கட்டுப்பாடுகளை அனுசரித்து நடக்க உன்னால் முடியாது."

"நவேகா!"

"ஏன் கத்துகிறாய். 'நான்' என்பதை முதன்மைப் படுத்துபவன் புரட்சிகர இயக்கத்தில் இருக்கமுடியாது. நீ உனக்காக, உன் நலனுக்காக என்னவேண்டுமானாலும் செய்யக்கூடியவன். அதுதான் உனது கொமாண்டரையே கொன்றுபோட்டாய்."

"அவன் பயந்தாங்கொள்ளி. உபயோகமில்லாதவன்."

"உனக்கு உயிர் முக்கியமில்லையா. உன் உயிரைக் காப்பாற்றத்தானே அடுத்தவன் உயிரை எடுக்கிறாய்!"

"கற்பனை நன்றாக இருக்கிறது."

"கற்பனையல்ல, உன் தொடர்பான ஒவ்வொரு செய்தியையும் ஊன்றிக் கவனித்துத்தான் என் கருத்தைச் சொல்கிறேன்."

"நான் உல்லாசமாக வாழ நினைத்திருந்தால் பாலஸ்தீன இயக்கத்தில் ஏன் சேர்ந்திருக்க வேண்டும். ஒரு பெரிய தொழிலதிபராக வாழ்ந்திருக்கலாமே."

"உன் அடிமனதில் புதைந்து கிடந்த சாகசம் செய்யும் ஆசைக்கு அதெல்லாம் சரிப்பட்டு வரவில்லை. கொஞ்சம் சாகசம், கொஞ்சம் போர்க்குணம் கலந்த கலவையாக நீ இருந்தது உண்மை. இப்போது போர்க்குணம் போய்விட்டது. சாகசம் செய்து உலகை மிரட்டிக் கொண்டு வாழவே ஆசைப்படுகிறாய்.!"

முதல்முறையாக நவேகாவை விரோதம் கலந்து பார்த்தான் கார்லோஸ். "நீ சண்டை போடவா வந்திருக்கிறாய்?"

"நண்பியாக. என் நண்பனை அவனது கெட்டபாதையில் இருந்து முடிந்தால் திருப்பியழைக்க."

"முடியும் என்றா நினைக்கிறாய்?"

"முடியாது. நீ ஒரு காகிதப் புலி. உன்னைச் சுற்றி நீ கட்டிவைத்திருக்கும் பயங்கரமானவன் என்ற மாயைதான் உன்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து நீ மீள முடியாது." காகிதப்புலி என்ற வார்த்தை கார்லோஸை வெப்ப மூட்டியது. நிதானத்தை இழந்தான்.

"யாரடி காகிதப்புலி?" நெருங்கி அவள் கழுத்தை தன் கரங்களால் நெரித்தான்.

நவேகா திமிறவில்லை. எதிர்ப்புக் காட்ட வில்லை. அசையாமல் நின்றாள். கார்லோஸ் சட்டென்று தன் கைகளை விலக்கிக்கொண்டான்.

நம்பிக்கையான ஒரு நாட்டிடம் பகிரங்கமாக சரணடைந்துவிடேன்."

"சிங்கம் காட்டில் சுதந்திரமாக இருக்கும் வரைதான் மரியாதை. கூண்டில்மாட்டிவிட்டால் எல்லோரும் வேடிக்கைதான் பார்ப்பார்கள். சரணடையும்வரை சகல மரியாதைகளுடனும் பேசுவார்கள். சரணடைந்துவிட்டால் தூக்கி ஒரு மூலையில் போட்டுவிடுவார்கள்."

"உன்னை நினைத்தால் எனக்கு கவலையாக இருக்கிறது கார்லோஸ்." அவனை நெருங்கி கைகளைப் பிடித்துக்கொண்டாள்.

"வேண்டாம். யாருடைய அனுதாபமும் எனக்குப் பிடிக்காது. எனினும், நன்றி. உன்மீது கோபப்பட்டதற்கு என்னை மன்னித்துக்கொள். முதல் தடவையாக என் முகத்தை கண்ணாடியில் பார்த்ததுபோல இருந்தது. அதுதான் அதிர்ச்சி. கோபம், ஆத்திரம் எல்லாம்!" கார்லோஸ் குரலில் வருத்தம் தொனித்தது. நவேகா அவன் கரங்களை இழுத்து தன் மார்பின்மேல் வைத்தாள். கார்லோஸ் இதமாய் உணர்ந்தான்.

"வேண்டாம் நவேகா. நீ போய்வா!"

"எனக்கு வேணுமே!"

"என்ன?"

"நீ!" நெருங்கி அவன் கழுத்தை வளைத்து அவன் கீழ் உதட்டை தன் பற்களால் கடித்தாள்.

கார்லோஸ் அழைப்பை ஏற்றுக் கொள்ளத் தயாரானான்.



15 உலகைக் கலக்கிய மனித வெடிகுண்டு கார்லோஸ்

**சென்றவாரம்** தமது நாடுகளில் கார்லோஸ் தங்கியிருக்க அனுமதிப்பதில்லை என்று கிழக்கு ஐரோப்பிய நாட்டு பிரதிநிதிகள் முடிவு செய்தனர். கார்லோஸின் நடவடிக்கைகள் மீது விழுந்த முதல் அடி அதுதான். இனி...

"நீ போய்விடு இந்த இடத்தைவிட்டு" வெறிகொண்டு கத்தினான். நவேகா அவனை நிதானமாக நோக்கி, "பின்னர் ஏன் என்னை இங்கே அழைத்தாய்?" என்றாள்.

"இப்படி சண்டைபோடவல்ல."

"பின் எதற்கு? சரசம்புரியவா? வேணுமா கார்லோஸ், நான் வேணுமா? இதற்காகத்தானே ஆசைப்பட்டாய் நீ." கேட்டுக்கொண்டே தன் மேல்சட்டைப் பொத்தான்களை கழற்றினாள்.

"இதற்கு மட்டும்தானே உனக்கு நட்பு தேவை? இந்தா எடுத்துக்கொள்!" அவள் ஆவேசமாய் கேட்க கார்லோஸ் அவளை நெருங்கி, அவள் களைவதை நிறுத்த கைகளைப் பிடித்தான். தானே அவள் சட்டைப் பொத்தான்களைப் போட்டுவிட்டான்.



கார்லோஸ்

"நீ என்னை மிக அவமானப்படுத்துகிறாய். நீ மட்டுமல்ல, யாருமே இந்த கார்லோஸைப் புரிந்துகொள்ளவில்லை. நான் புரட்சியாளன் அல்ல, ஒப்புக்கொள்கிறேன். ஆனால் என்னையும் புரட்சியாளனாக்கியிருக்க முடியும். தளபதி வாடி ஹாட்டாட் எனக்கு நல்ல தலைவனாக இருக்கவில்லை. என்னை வைத்து ஈரான் சதாம் ஹுசைனோடு பேரம் பேசினார். சதாமின் பணத்திற்காக என்னை ஆயுதமாக்கி ஒபேக் நாடுகள்மீது பாயவிட்டார். எல்லாமே சுயநலம். என்னை யாரும் பயன்படுத்துவதைவிட, நானே என்னை பயன்படுத்திக்கொண்டேன். புரிந்துகொள்."

"தவறுகளுக்கு நியாயம் கற்பிப்பது சுலபம். நீ மாறப்போவதில்லையா?"

"முடியாது. கார்லோஸ் நிராயுதபாணியாகி விட்டால் சிறு புல்லும் மிதிக்க வரும். நான் என் பாதையை மாற்றிக் கொண்டால், அங்கே என் எதிரிகள் எனக்காக காத்திருப்பார்கள். இது ஒரு வழிப்பாதை. இறங்கிவிட்டால் போய்க்கொண்டே இருக்க வேண்டியதான். திரும்பிவர முடியாது."

"எதுவரை போவாய்?"

"முடிவுவரை!" முதல் தடவையாக கார்லோஸின் உதட்டில் ஒரு வறட்சியான புன்னகை உதித்தது.

"பாதுகாப்புக்கு உத்தரவாதம் கேட்டு,

✱✱☛

"**ச**ர்வதேச பயங்கரவாதி கார்லோஸ். கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கதவடைப்பு!"

காலையில் பத்திரிகைகளில் பார்த்துத்தான் கார்லோஸுக்கே அந்தச் செய்தி தெரிந்தது. எதிர்பாராத நெத்தியடிபோல இருந்தது.

கிழக்கு ஜெர்மன் அதிபரின் போன் இலக்கம் சுழற்றி, "பிரதமரோடு பேச வேண்டும்" என்றான். பிரதமர் லைனில் வரவில்லை. அவரது பி.ஏ.தான் பேசினாள். தவிர்க்கப்பார்க்கிறார். நேரடியாக பேசவிரும்பவில்லை என்று தெரிந்தது.

அன்று மாலையே அதிகாரிகள் சிலர் கார்லோஸை தேடிவந்தனர். மிகப் பணிவாகவும், நாகரீகமாகவும் கார்லோஸ் அங்கிருந்து உடனே வெளியேறுவதை பிரதமர் விரும்புவதாகத் தெரிவித்தனர்.

நவேகா மாலையில் வந்தாள். "ஐரோப்பா உன்னை கைகழுவிவிட்டது. இனி என்ன செய்யப்போகிறாய்?" என்றாள்.

"இந்த அகண்ட உலகத்தில் கார்லோஸ் கால்வைத்து நிற்கவா இடமில்லை?"

"கவலை இல்லையா?"

"ப்பூ.. எனக்கா? கார்லோஸை கைவிட்டதற்காக ஐரோப்பாதான் கவலைப்படப்போகிறது. மிக மிக கவலைப்படப் போகிறது!"

"பைத்தியக்காரத்தனமாக ஏதாவது செய்து தொலைக்காதே."

"இல்லை. உன்னோடு பேசியபிறகு நான் மாறியிருக்கிறேன். முழுதாக அல்ல, முடியுமான அளவுக்கு."

"உண்மையாகவா?"

"போகப் போக உனக்கே தெரியும். நான் உன்னிடமிருந்து விடைபெறும் நேரம் வந்துவிட்டது. என் இனிய சிநேகிதியே, எல்லாவற்றுக்கும் நன்றி. நேற்று ஒரு இனிய மாலைநேரத்தை எனக்கு பரிசளித்தாய். என்றும் அந்த சுகப்பொழுதும், உன் வாசனையும் எனக்குள் இருக்கும். நாம் பிரியும் இந்த நேரத்தில் உனக்கு என்ன வேண்டும் கேள்."

"ஒரே ஒரு முத்தம். மிக ஆழமாக, மிக நீளமாக" என்றாள். கண்ணீர் வழிந்தது நவேகாவிடமிருந்து.

கார்லோஸ் சிரியாவுக்குத்தான் நேரடியாகச் சென்றான். சிரிய அதிபர் உதவியோடு தனியான பாதுகாப்பு இல்லம் ஒன்றை பெற்றுக் கொண்டு அங்கு தங்கினான்.

கார்லோஸின் பாதையை மாற்றியமைக்கப்போகும் அந்த தொலைபேசி அழைப்பு வந்தது.

"ஹலோ மிஸ்டர் 'கே'" என்று கேட்டது ஒரு மென் பெண் குரல்.

(தொடர்ந்துவரும்.)

# கருவறையில் கொலைமுயற்சி

**த**ன் வயிற்றில் வளர்ந்து வந்த குழந்தையை சுட்டுக்கொல்ல முயன்றாள் ஒரு தாய். இந்த படுபாதகச் செயல் நடந்திருப்பது கனடாவில்.

கனடா நாட்டில் ஒட்டோவா நகரின் மேற்கில் உள்ளது சுமித்போல்ஸ் என்னும் பகுதி. அந்தப் பகுதியைச் சேர்ந்த பெண்மணி ப்ரெண்டா ட்டுமாண்ட். அவளது வயது 28.



நிறைமாத கர்ப்பிணியான ப்ரெண்டா தன் வயிற்றை நோக்கி கைத்துப்பாக்கியால் சுட்டாள். உடனே மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

வயிற்றில் இருந்த குழந்தையின் மூளைக்கு அருகே தோட்டா பாய்ந்திருந்ததை ஸ்கேன் மூலம் டாக்டர்கள் கண்டறிந்தனர். உடனடியாக தகுந்த சிகிச்சை வழங்கப்பட்டது.

குழந்தை உயிரோடு பிறக்காது என்றுதான் எல்லோரும் பயந்தார்கள். டாக்டர்களின் முயற்சியால் குழந்தை உயிர்தப்பிப் பிறந்தது.

ப்ரெண்டாவை பொலிசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். இவரது கணவர் ஒரு மெக்கானிக். தனது மனைவி ஏன் இப்படி நடந்துகொண்டாள் என்று தெரியாமல் குழம்பிப்போய் இருக்கிறார். ஏற்கெனவே இரு குழந்தைகள் இருக்கின்றன. மூன்றாவது குழந்தை பிறப்பது குறித்தும் மகிழ்ச்சியோடுதான் இருந்தாள். திடீரென்று என்னாச்சு. என்று தெரியவில்லையே என்கிறார் அவர்.

இதேநேரம் பொலிசாருக்கும் ஒரு குழப்பம். வயிற்றில் இருக்கும்போது குழந்தையை சுட்டுக்கொன்றால் அது கொலையா? கருச்சிதைவா? பிரசவத்துக்கு பின் குழந்தை உயிரிழந்தால் கொலை என்று சொல்ல முடியும். குழந்தை தப்பிவிட்டது. எப்படி வழக்குப் பதிவு செய்வது என்றெல்லாம் யோசித்து, இறுதியாக, கொலை முயற்சி என்று வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள்.

அம்மா என்றால் அன்பு. சில விதிவிலக்குகளும் உண்டு.

# ஜப்பானில் ஒரு தப்பு

**ஜ**ப்பான் நாட்டு மாணவிகளைப் பற்றி அந்தநாட்டு தொலைக்காட்சியான 'நிப்பான் ரி.வி. வெளியிட்டுள்ள தகவல்கள் அதிர்ச்சி தருகின்றன.

ஒருகாலத்தில் தமது இளைய தலைமுறை குறித்து பெருமைப்பட்டுக்கொண்ட ஜப்பான் இப்போது தலைகுனிந்து நிற்கிறது.

ஜப்பான் பள்ளிமாணவிகள் மத்தியில் 'எஞ்சோ கோசய்' பிரபலம். அது என்ன எஞ்சோ கோசய்? வசதியான ஆசாமிகளுடன் சுற்றுவது, ஜாலியாக இருப்பது என்று அர்த்தமாம். எஞ்சோ கோசய் மாணவிகளின் நாகரீகமாக மாறிவிட்டது. பணம் சம்பாதிக்க உதவும் நாகரீகம்.

இந்த நாகரீக விபசாரம் மூலம் மாதம் ஒன்றுக்கு 5 இலட்சம் யென் (கிட்டத்தட்ட மூன்று இலட்சம்) ரூபாய் வருமானம் ஒரு மாணவிக்கு கிடைக்கிறது.

பணத்தை வைத்து என்ன செய்கிறார்கள்? ஆடம்பர உடைகளுக்கு ஒரு பகுதி செலவாகிறது. கிளப்புகளில் சென்று கும்மாளமடித்து மறுபாதி கரைகிறது.

பாடசாலை செல்லும்போதே செல்லுலர் போனுடன்தான் மாணவிகள் செல்கிறார்கள். பணக்காரர்களிடம் இருந்து தகவல் வந்தவுடன் கல்லூரிக்கு மட்டம்போட்டுவிட்டு பறந்துவிடுகிறார்கள். 16 வயது மாணவிகள்தான் இந்த விவகாரத்தில் முன்னணியில் நிற்கிறார்கள் என்கிறது நிப்பான் ரி.வி.



இந்த சீரழிவு நாகரீகத்தில் 30 சதவீத மாணவிகள்தான் சிக்காமல் இருக்கிறார்கள். மீதி 70 சதவீத மாணவிகளும் 'எஞ்சோ கோசய்' தான்.

# கும்ளேயின் சிநேகிதி

**இ**ந்திய கிரிக்கெட் வீரர்களுக்கும், நடிகைகளுக்கும் இடையே கிசு-கிசுக்கள் அடிபடுவது வழக்கம்.

கிரிக்கெட் வீரர்களுக்கு வலை வீசுவது நடிகைகள் பலருக்கும், மொடல் அழகிகளுக்கும் பொழுதுபோக்கு. அதேநேரம் கிரிக்கெட் வீரர்களைக் கண்டால் ஒதுங்கிப் போகும் மொடல் அழகிகளும் இல்லாமல் இல்லை. அவர்களில் ஒருவர் கஷ்மீரா ஷா. இந்தியாவில் உள்ள முன்னணி மொடல் அழகி.



கஷ்மீராவின் கடைக்கண்பார்வை படாதா என்று சில கிரிக்கெட்வீரர்கள் அவர் பின்னால் அலைந்தது உண்டு. 'ஆளைவிட்டால் போதும்' என்று ஒதுங்கிப்போய்க் கொண்டே இருந்தார் கஷ்மீரா.

அப்படிப்பட்ட கஷ்மீராவிடம் இப்போதுபோய் அனில் கும்ளே என்று பெயரைச் சொன்னாலே போதும் உருகிவிடுகிறார்.

காரணம் சுவையானது. சினிமாவில் வருவது மாதிரியானது.

துபாய் நாட்டில் நடைபெற்ற ஆடை அலங்கார காட்சி ஒன்றுக்கு சென்றிருந்தார் கஷ்மீரா. இந்திய கிரிக்கெட் வீரர்கள் பலரும் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவர் அனில் கும்ளே.

துபாய் கடைத் தெருவில் கஷ்மீரா சென்று கொண்டிருந்த போது கார் ஒன்று அவரை லேசாக தட்டிவிட்டு சென்றுவிட்டது. கீழே விழுந்துபோன கஷ்மீராவை ஒருவர் கைகொடுத்து தூக்கிவிட்டார். தனது காரில் அழைத்துச் சென்று முதலுதவியும் செய்தார். அவர் வேறுயாருமல்ல, அனில் கும்ளேதான்.

அப்படி ஏற்பட்ட சந்திப்புத்தான் இப்போது நட்பாகத் தொடர்கிறது.

"அனில் கும்ளே போன்ற மனிதாபிமானமுள்ள கிரிக்கெட் வீரரைப் பார்ப்பது அபூர்வம்" என்கிறார் கஷ்மீரா.

அனில் கும்ளே-கஷ்மீரா நட்பு எதுவரைபோகும் என்று தெரியவில்லை.

# இன்னொரு மகாத்மா



**ப**டத்தைப் பார்த்ததும் மகாத்மா காந்தி என்று உடனே முடிவு செய்தவர்கள் மூன்று முறை தோப்புக்கரணம் போட்டுக்கொள்ளவும்.

இந்தியாவில் அஸ்ஸாம் மாநிலத்தில் வாழும் நாராயண் போரா அசப்பில் மகாத்மா காந்தி மாதிரியே இருக்கிறார். அதே உடை. அதே நடை. மரச் செருப்புக்கள். கண்கள் கூட அதே மாதிரி தீர்க்கமானவை. மகாத்மாவை இவர் இமிடேட் செய்யக்காரணம் என்ன? புகழாசையோ, விளம்பரப் பிரியமோ காரணம்அல்ல.


கல்லூரி நாட்களில் காந்தியின் சொற்பொழிவைக் கேட்ட அனுபவமுடைய நாராயண் போரா, அந்த மகாத்மாவின் கொள்கைகளை மக்கள் மறந்துவிட்டார்களே என்று வேதனைப்படுகிறார். அவரை மறுபடியும் நினைவுக்குக் கொண்டு வருவதுடன் அவரைப் போலவே ஆன்மீக உள்ளடக்கமுள்ள பேச்சுக்களை உதிர்ப்பதிலும் அஸ்ஸாம் வாழ் மக்களிடையே ஒரு விதமான விழிப்புணர்வைக் கொண்டு வருகிறார் இந்த 'மாதிரி மகாத்மா.'



படிப்பகம்

www.padippakam.com

## சேய் வருகைக்காக காத்திருந்த தாய்




↑ ஒரு நாலுவருசம் சிறையில் இருந்துவிட்டே 'தியாகி' என்றும், சிறை மீண்ட செம்மல் என்றும் மார்தட்டியவர்களை கண்டிருப்பீர்கள். படத்தில் இருக்கிறார் பாருங்கள் ஒரு முதியவர் அவருக்கு வயது 70. பெயர் கிம்சன்-மியோஸ். தனது இனிய இளமைக்காலமான 26 வயதில் சிறைக்குப் போனார். 44 வருடம் உள்ளேயே கிடந்து புழுங்கிவிட்டு 70வது வயதில் வெளியே வந்திருக்கிறார். மொத்தமாக 44 வருட சிறைவாசம். உலகில் மிக நீண்டகாலம் சிறைவாசம் இருந்தவர் இவர்தான். இத்தனைக்கும் இவர் செய்த குற்றம், தென் கொரிய அரசாங்கத்திற்கு எதிராக கருத்து வெளியிட்டதுதான். இவரது வருகைக்காக, தனது மகனைக் கடைசியாக ஒரு தடவையாவது பார்த்துவிடும் வைராக்கியத்தோடு உயிரைக் கையில் பிடித்தபடி இருந்தார் அவரது தாயார். தாயாரின் வயது 93. ஈன்ற பொழுதில் கண்ட அதே உவகையோடு 44வருடத்தின் பின்னர் தன் மகனைத் தாயார் காணும் காட்சிதான் இது. தாய்க்கு மகன் என்றும் சேய்தானே!

அமெரிக்காவில் கிரான்ட் போக்ஸ் வீதியில் எடுக்கப்பட்ட புகைப்படம்தான் இது. ஹெரால்டு வெய்வோடா என்பவர் தனது வீட்டில் செல்லமாக நாய் வளர்க்கவில்லை, பூனை வளர்க்கவில்லை. புலி வளர்க்கிறார். வாகனத்தில் செல்லும்போது தனது செல்லப் புலியையும் சங்கிலியில் போட்டு அழைத்துச் செல்கிறார். போக்குவரத்து நெரிசலில் செல்லும்போது அருகிலுள்ள வாகனத்தில் உள்ளவர்களை முறைக்கிறது புலி. அவர்களுக்கோ கிலி. அதனால் ஒரு லாபம் என்னவென்றால் ஏனைய வாகனங்கள் வெய்டோவின் வாகனத்தை முத்தமிடக்கூடிய தூரத்தில் வருவதேயில்லை. எட்டவே நின்று கொள்ளுகின்றன.

## எப்போது தாக்கலாம்





## நிறத்தில் இல்லை தரம்

படத்தை பார்த்ததும் பாரதியார் பாடலுக்காகவே கிளிக் செய்யப்பட்டது போலத் தெரியவில்லையா.

"சாம்பல் நிறமொரு குட்டி:- கருஞ்
சாந்து நிறமொரு குட்டி,
பாம்பு நிறமொரு குட்டி,-
வெள்ளைப்பாலின் நிறமொரு குட்டி."

எந்த நிறமிருந்தாலும் யாவும் ஒரு தரம். மனிதரும் அப்படித்தான் என்றுதான் சொல்லவந்தார் பாரதியார். நிறத்தில்லை தரம். பூனைகளிடம் கூட கற்றுக்கொள்ள வேண்டிய நிலை எமக்கு. படம் கிளிக் செய்யப்பட்டது சார்ஜாவில் உள்ள மிருகக்காட்சி சாலையில். (படஉதவி நஜீம்-துபாய்)

## வீட்டுத் தோட்டத்திலே

→ தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு, என்னமாதிரி சிரிக்கிறார் பாருங்கள். மகிழ்ச்சிக்கு காரணம் இல்லாமல் இல்லை. அவர் தோளில் இருப்பது 'பீட்ருட்'

உலகிலேயே மிகப் பெரிய பீட்ருட் அவர் தோட்டத்தில் உற்பத்தியாகி உலக சாதனை படைத்திருக்கிறது. சந்தோசம் வரத்தானே செய்யும்.

இதன் எடை எவ்வளவு தெரியுமா? 40 இறாத்தலும் 8 அவுன்சும். கைக்குள் அடங்காது. தூக்குவதும் சுலபமல்ல. கஷ்டம்தான். ஆனால் சாதனையாச்சே!




## வெங்காயம்

வெங்காயம் என்றதும் சாதாரணமாக நினைத்துவிடக்கூடாது. சிலருக்கு கோபம் வந்தால் 'வெங்காயம்' என்றுதான் திட்டுவார்கள்.

வெங்காயமும் சாதனை படைக்கும் என்று அவர்களுக்கு சொல்லிவையுங்கள்.

படத்தில் இருக்கும் வெங்காயம் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.

உலகிலேயே மிகப் பெரிய வெங்காயம் இது தான். இதன் எடை 12 இறாத்தலும் 4 அவுன்சும். சாதனை வெங்காயம்தானே! இதன் உரிமையாளர் மெல் எட்னி. வெங்காயத்தை உரிக்காமலேயே எட்னிக்கு கண்ணீர் வந்திருக்கும். ஆனந்தக் கண்ணீர்.



## தகவல் பெட்டி

பலத்த மோதலோ, பலசாலி யானையிடம் வசமாக மாட்டிக் கொண்டு உருட்டி உருட்டி அடிபடுகிறதோ குட்டியானையார் என்று நினைத்துவிடவேண்டாம்.

இது விளையாட்டுமட்டும்தான். வேடிக்கை விளையாட்டில் பொழுதைப் போக்கும் பழக்கம் யானைகளுக்கும் உண்டு. குஷி வந்தால் போதும் உருண்டு, புரண்டும், உருட்டியும், புரட்டியும் விளையாடத் தொடங்கி விடுகின்றன.

படத்தில் மேலே உள்ள யானைக்கு வயது மூன்று மட்டும்தான். பெயர்-கஜேந்திரன். உருட்டப் பட்டுக் கிடக்கும் யானையாருக்கு மூன்றரை வயது. பெயர் மங்களா. என்ன, அசல் தமிழ் பெயர்களாக இருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? இது இந்திய அரசால் ஜெர்மன் நாட்டுக்கு பரிசாக வழங்கப்பட்டவை. ஜெர்மனில் உள்ள ஹெல்லாபர்ன் நகர மிருகக்காட்சிச் சாலையில்தான் இந்த இடம்பெயர்ந்த யானைகள் கும்மாளமடிக்கின்றன. பெயர் தமிழாக இருந்த ராசியோ என்னவோ இந்த யானைகளும் இடம்பெயர்ந்த யானைகளாகிவிட்டன.

## விடாதே கஜேந்திரா!

## மரத்தில் பூத்த ஆமை



↑ ஆமைதான், ஆமையேதான் என்று ஒரு முடிவுக்கு வந்துவிடாதீர்கள். இது பழ ஆமை. என்ன, புரியவில்லையா? பப்பாளி பழம் ஒன்றுதான் ஆமை வடிவத்தில் காய்த்து அசத்தியிருக்கிறது. தமிழ்நாட்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் முட்டை வியாபாரி ஒருவரது வீட்டில்தான் இந்த பப்பாளி காய்த்துள்ளது.



www.padippakam.com



# பம்பாயிலிருந்து புதையல்

'புதையல்' படத்திற்காக பம்பாயில் இருந்து இறக்குமதியாகியுள்ள அழகுப் புதையல் ஷாக்ஷி. அரவிந்தசாமியின் ஜோடியாக நடித்துக் கொண்டிருக்கிறார்.

ஷாக்ஷியின் கவர்ச்சியான தோற்றம் கண்டு அரவிந்தசாமியே சற்று தடுமாறிப் போனாராம். எப்படி வேண்டுமானாலும் நடிக்கத்தயார் என்றுவிட்டார் ஷாக்ஷி. ஆனாலும் புதையலை தேவையானளவு மட்டுமே ரசிகர்களுக்கு காண்பித்தால் போதும் என்று முடிவு செய்திருக்கிறார் இயக்குநர்.

'புதையல்' படத்தில் நடிக்கும்போதே புதிய தமிழ் பட வாய்ப்புக்களோடு ஷாக்ஷி தங்கியுள்ள ஹோட்டல் கதவுகளை தட்டினார்களாம் தயாரிப்பாளர்கள். 'புதையல்' படப்பிடிப்பு முடிந்தபின்னர் பார்க்கலாம் என்று விட்டார் ஷாக்ஷி. தற்போதைக்கு உங்களை நேரில் பார்த்ததே போதும் என்று ஜொள்விட்டபடி திரும்பினார்கள் தயாரிப்பாளர்கள்.

அருகில் உள்ள படத்தை கூர்ந்து பார்த்து விட்டு சொல்லுங்கள், ஷாக்ஷி முன்னுக்கு வரக்கூடியவர்தானே?!

தமிழக சஞ்சிகையான 'குமுதம்' கமலஹாசனைப் பேட்டி
பேட்டியில் கமல் சொல்லியுள்ள கருத்துக்கள் கமலின் தெளிவான ப
உதாரணம். பேட்டியில் இருந்து முக்கிய பகுதி.

கே:- நடிப்பு என்றால் கமல் என்பது 20 வருஷங்களாக மாறவி

கமல்:- அப்படியா? அப்படின்னா சந்தோசமாத்தான் இருக்
வருஷமான்னு நீங்க சொல்றீங்க. எனக்கு வந்து 30 வருஷமா ஒரு
நம்பர் 1 ஆகத் தெரியறார். வீடியோ இல்லாத காலத்துல, தெ
டுறவோ, வெளிநாட்டு ஹொலிவுட் படங்களைப் பற்றி உடனடி
பரிமாறவோ இல்லாத காலகட்டத்தில் அவர் செய்த சாதனை
பிரமிக்க வைக்குது. ஏன் பொறாமையாகக்கூட இருக்கு. அந்த
இருந்து மீளவே முடியல.. ஒரு வேளை அவர்கூட நடிச்சு
குறைஞ்சிடும்னு அதையும் செஞ்சு பார்த்திட்டேன். ஊஹூம் எ
ஈடுபாடு. அவர் பெயர் சிவாஜிகணேசன். யோசித்துப் பார்த்தேன்
அளவுக்கு நிக்கனும்னா என்ன ஒரு வேகம், உத்வேகம் இருக்கனு
இப்ப இந்தியன் படம் நிக்குதுன்னா என்ன காரணம்னு நினைக்
கிறீங்க. தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்தினம் பத்தி சொல்றேன்.
செலவு விஷயங்களில் தலையிடவே இல்லை. தலைவலி



# கமல் பாடும் பாடல்

கமலஹாசன் சொந்தக் குரலில் பாடக்கூடியவர் என்பது தெரிந்த செய்திதான்.

தற்போது 'உல்லாசம்' படத்திற்காக ஒரு பாடல் பாடப்போகிறார். கமல் பின்னணி பாட படத்தில் வாயசைக்கப் போகிறவர் அஜித்குமார். ஏற்கனவே நடிகர் மோகனுக்காகவும் ஒரு படத்தில் பின்னணி பாடியவர் கமல். வேறு நடிகருக்காக கமல் பின்னணி பாடுவது இது இரண்டாவது முறை.

'உல்லாசம்' படத்தை தயாரிப்பது அமிதாப் பச்சன். படத்தை தொடக்கிவைத்தது ரஜினி. இசை: கார்த்திக்ராஜா. கமல்தான் பாட வேண்டும் என்று அவர்தான் ஒற்றைக்காலில் நின்றாராம். பாடலையும், இசையையும் பார்த்தும், கேட்டும்தான் சம்மதித்தார் கமல். 'முத்தே முத்தம்மா' என்ற வரிகளோடு தொடங்குகிறது பாடல். உச்சஸ்தாயியில் பாடவேண்டியிருக்குமாம். கமலால் முடியும் என்றுவிட்டார் கார்த்திக்ராஜா.

# 'பெரிய இடத்து மாப்பிள்ளை'

தாய்மாமன், மாமன் மகள், போன்ற படங்களை இயக்கி வெற்றி பெற்றவர் குருதனபால். உறவு முறையை ஒட்டி பெயர் வைப்பதில் அவருக்குப் பிரியம். தனது புதிய படத்திற்கு அவர் சூட்டியுள்ள பெயர்: 'பெரிய இடத்து மாப்பிள்ளை.'

கதாநாயகன் ரமேஷ் அரவிந்த். அவருக்கு ஜோடி சுவலட்சுமி. மற்றொரு ஜோடி தேவயானி. கவுண்டமணி, மணிவண்ணன், ராஜன் பி.தேவ், பாண்டியன், அலெக்ஸ் ஆகியோரும் நடிக்கவுள்ளனர். இசை: சிற்பி.

# மனிஷாவின் மாற்றம்

மனிஷா கொய்ராலா தற்போது குடிப்பதைக் கொஞ்சம் குறைத்திருக்கிறார் என்பது மிக முக்கிய செய்தி. நானா படேகருடன் காதல் முறிந்தபின்னர் கொஞ்சம் அதிகமாகவே தண்ணி போட்டுக்கொண்டார்.

சமீபத்தில் நானா படேகரும் மனிஷாவும் தனிமையில் சந்தித்து மனம்விட்டுப் பேசினார்களாம். அதன் பின்னர்தான் மனிஷா மதுவைத் தொடுவதைக் குறைத்திருக்கிறார்.



# ஆடினார் ராஜ்கிரண

'மாணிக்கம்' படத்தின் கிளைமாக்ஸ் காட்சி எ
காவல் கருப்பசாமிக் கோவிலில் படமாக்கப்பட்
சாமி அருள் ஆடுவது போன்ற காட்சியில் உ
யாகவே உணர்ச்சியவசப்பட்டு ஆடத்தெ
விட்டாராம் ராஜ்கிரண். படப்பிடிப்பை பா
கொண்டிருந்த கிராமவாசிகள் சிலரும்
தொடங்கிவிட்டனராம். மிகவும் ஈடுபாட்
நடித்திருக்கிறார் ராஜ்கிரண்.

வாட்டசாட்டமான முரட்டுத் தே
கொண்டவர் ராஜ்கிரண். காதல் காட்
நடிக்கும்போது வனிதாதான் சில
களில் பயந்து போனாராம்.

படத்தில் ராஜ்கிரணின் பா
ஏற்ற அதிரடி சண்டைக்காட்
இருக்கின்றன. விரைவில்
வருகிறது மாணிக்கம்

ஒடி தூள் கிளப
தில் புதிய பட
விஜய்யும்
அ
'ரா

# சூரியோதயம்

நீண்டகாலத் தயாரிப்பில் இருந்த படம் இசைப்பயணம். விஜயசாந்தி முக்கிய வேடத்தில் நடிக்கத் தொடங்கியபிறகு படத்தின் பெயரை மாற்றிவிட்டார்கள். 'சூரியோதயம்' என்று பெயரிட்டுள்ளனர்.

இலங்கை நடிகை சனோஜாவின் கவர்ச்சிதான் படத்தில் விசேஷ அம்சங்களில் ஒன்று. கவர்ச்சியையும், பாடல்களையும் மட்டும் நம்பி முதலில் படம் எடுத்தார்கள். பின்னர் விஜயசாந்தியை நடிக்கவைத்து மீண்டும் பல காட்சிகளை புகுத்தி படத்தை ஒப்பேற்றி இருக்கிறார்கள்.

இசைப் பயணம் என்று பெயர் வைத்த ராசியோ என்னவோ, படப்பிடிப்பும் நீண்ட பயணமாகிவிட்டது. அதனால்தான் பெயரை மாற்றிவிட்டார் தயாரிப்பாளர். இனியாவது படம் வந்தால் சரிதான்.

# ★ வால் நட்சத்திரம் ★

வானில் வால் நட்சத்திரம் தோன்றுவது தெரியும்தானே. விரைவில் வெள்ளித்திரையிலும் 'வால் நட்சத்திரம்' தோன்றப் போகிறது. புதிய படம் ஒன்றுக்கு 'வால் நட்சத்திரம்' என்று பெயரிட்டுள்ளனர். வில்லன் நடிகர் கரிகாலன் 'டிராகுலா' வேசம் போட்டு நடிக்கப்போகிறார். கதை, வசனம், இயக்கம்: எம்.தேவன்.

# வீரய்யா

'பூவரசன்' படத்தில் கார்த்திக் ஜோடியாக நடிப்பவர் ரக்ஷனா. கார்த்திக்குக்கு ரக்ஷனாவின் ஒத்தழைப்பு பிடித்துப் போனதால் தனது அடுத்த படத்திலும் அவருக்கு சிபாரிசு செய்திருக்கிறார்.

கார்த்திக்-ரக்ஷனா ஜோடி அடுத்ததாக நடிக்கும் படம் 'வீரய்யா.' செல்லக்கண்ணு படத்தை இயக்கிய என். ரத்னம் இயக்கவுள்ளார். துணிச்சலான ஒரு இளைஞனின் கதைதான் 'வீரய்யா'.

# ஹீராவின் தத்துவம்

திரையுலகம் பற்றி நடிகை ஹீரா ஒரு அனுபவ மொழியை உதிர்த்திருக்கிறார்.

"திரையுலகில் எல்லா உறவுமே தேவை கருதித்தான் ஏற்படுகிறது. இங்கே ஒன்றைக் கொடுத்தால்தான் இன்னொன்றைப் பெறமுடிகிறது. தேவை முடிந்ததும் கை கழுவும் ஆட்கள் இங்கே நிறையப்பேர் இருக்கிறார்கள். எல்லோரையும் அனுசரித்துப் போனால்தான் இங்கே தாக்குப்பிடிக்க முடியும்." என்கிறார் ஹீரா.

'காதல் கோட்டை' படத்தின் வெற்றி நிச்சயம். தமிழில் மீண்டும் ஒரு ரவுண்ட் வருவதும் நிச்சயம்' என்றும் உறுதியாகச் சொல்கிறார் ஹீரா.

# ரஞ்சிதாவின் நன்றி

ரஞ்சிதாவின் உயரம் ஐந்தடி ஏழு அங்குலம். உயரத்தால் ஒரு வசதியாதெனில் உயரமான ஹீரோக்களோடு இணைந்து நடிக்கலாம்.

சத்யராஜ், நெப்போலியன் போன்ற நடிகர்களோடு ரஞ்சிதாவுக்கு வாய்ப்புக் கிடைப்பதும் அதனால்தான். தற்போது 'புலி பொறந்த மண்ணு' படத்தில் நெப்போலியனுக்கு ஜோடியாக நடிக்கிறார் ரஞ்சிதா. பல நடிகைகளையும் பரிசீலித்துப் பார்த்து, இறுதியாக ரஞ்சிதாவுக்கே வாய்ப்புக் கொடுத்தார்களாம். நெப்போலியனை அணுகி தனியாக விசேஷ நன்றி சொன்னாராம் ரஞ்சிதா.

ராஜ்கிரண்-வனிதா-காந்திமதி
படம்: மாணிக்கம்

# என்ன பிடிக்கும்?

இந்திப்படவுலகில் கவர்சியான நடிகராகக் கருதப்படுபவர் ஜாக்கி ஷெராப். பெண்களிடம் உங்களுக்கு என்ன பிடிக்கும் என்ற கேள்விக்கு அவர் சொன்ன பதில்: "எல்லாமே பிடிக்கும். அவர்களின் பேச்சு, நடை, உடை, தோற்றம்.. ஒவ்வொன்றும் என்னைப் பரவசமானவனாக மாற்றுகின்றன. அவர்கள் காதல் மிகுந்தவர்கள். மென்மையானவர்கள்."

"உங்களை காதல் செய்யுமாறு பெண்கள் வற்புறுத்துகிறார்களே?" இது அடுத்த கேள்வி. அதற்கு ஜாக்கி ஷெராப் சொன்ன பதில்: "இதற்கு பதில் சொல்வது அநாகரிகம். விட்டுவிடுங்கள்."

# கமல் இயக்குவார்

'ரத்தத்தில் ஒரு முற்றுப்புள்ளி' படத்தை தயாரிக்க திட்டமிட்டுள்ள கமல், அதனைத் தானே இயக்குவது தொடர்பாகவும் யோசித்து வருகிறார். கமல் நடிக்க அவர் மனைவி சரிகா இயக்கும் 'அமரகாவியம்' படத்தில் கமல் தனது இயக்குநர் தகுதியை பரிசீலித்துப் பார்க்கப்போகிறார். தானே நேரடியாக இயக்காமல் சரிகாவுக்கு பின்னால் நின்று வித்தை காட்டப் போகிறார் கமல். அமரகாவியம் சரியாக வந்தால் 'ரத்தத்தில் ஒரு முற்றுப்புள்ளி' படத்திற்கு கமல் நேரடியான இயக்குநராகிவிடுவார்.

# டும்-டும்-

சௌகார் ஜானகியின் பேத்தி வைஷ்ணவி விரைவில் திருமணம் செய்யப்போகிறார்.

சீவலப்பேரி பாண்டி படத்தின் ஒளிப்பதிவாளரை நீண்டகாலமாக காதலித்துவந்தார் வைஷ்ணவி. தற்போது வைஷ்ணவி வீட்டில் காதலுக்கு பச்சைக் கொடி காட்டிவிட்டார்கள். அதனால் விரைவில் கேட்கப்போகிறது டும், டும்.

முகப்பில் \ வெங்கட்பிரபு-ரசிகா
படம்-பூஞ்சோலை

# கமலைப் பெண்ணாக்

'யாத்ரா மொழி' படத்தில் மோகன்லாலுடன் செ
நடிக்கிறார் சிவாஜி. படப்பிடிப்பு முடிவடையப்போகிறது
பி.வாசு இயக்கும் படம் ஒன்றில் நடிக்க சம்மதம் சொல்லிவிட்
'அவ்வை சண்முகி' படத்திலும் சிவாஜியை நடிக்க வை
யோசித்துவருகிறார் கமல்.

இதற்கிடையே மற்றொரு தகவல்: கல்லைப் பெண்ண
கமலைப் பெண்ணாக்கப்போகிறார் மைக்கல் ஜோன்ஸ். அ
படத்திலும் கமலுக்கு மேக்கப் போட்டவர். அவ்வை சன்
பெண் வேடம் அசத்தலாக இருக்கவேண்டும் என்பதால்
மீண்டும் அழைக்கப்பட்டிருக்கிறார். அவர் ஒரு அமொ


படிப்பகம்

கொடுத்த, அகம்பாவம் பிடித்த ஒரே நட்சத்திரம் யார் தெரியுமா? இந்தியன் தாத்தா மேக்கப். காலை 11 மணிக்கு போட்டா 3½ மணிவரைதான் இருக்கும். அதுக்கு மேலே தாத்தா இருக்கமாட்டார். போயிடுவார். புதுசா போடணும்.

**கே:- இப்போ வரும் படங்களில் ஒரிஜினல் தன்மை குறைந்துவருவது மாதிரித் தெரியுதே?**

**கமல்:-** அது இப்போதுன்னு இல்லை. இது எல்லாக் காலகட்டத்திலயும் இருந்திருக்கு. இப்போ ஈஸியா வெளியே தெரியுது. எந்தப் படத்தை வேணுமானாலும் சொல்லுங்க. அந்தக் காலகட்டத்தில் வந்த அதன் ஒரிஜினல் பற்றி

# பிரமிக்கவைக்கிறார் சிவாஜி
## கமல் மனம்திறந்து பாராட்டு

சொல்ல முடியும் என்னால்.

**கே:- பாரதிராஜாவின் படங்களில் இயல்புத் தன்மை, ஒரிஜினல்தனம் இருந்ததே..?**

**கமல்:-** போஸ்ட்மன்ஸ் ஸ்ராங்குலர் என்று ஒரு படம். பாரதி ராஜாவின் 'சிகப்பு ரோஜாக்கள்' அதோடு எக்கச் சக்கமாக ஒத்துப்போகும். அது எனக்குத்தெரியும். அவரு கொப்பி அடிச்சார்னு சொல்லலே. எல்லாக் கலைஞர்களும் அப்படித் தான். என் நடிப்பில் சிவாஜியின் பாதிப்பு இல்லையா?

**கே:- அப்பட்டமாக 'கொப்பி' அடிக்கும் போது ரசிக்க முடியவில்லையே?**

**கமல்:-** ஆமாம், அப்பட்டமாக கொப்பி அடிக்கும்போது பார்வையாளர்களே கண்டுபிடிச்சு நிராகரிச்சுடுவாங்க. சிவாஜியை அப்பட்டமாக கொப்பியடிச்ச யாருமே வெற்றியடைஞ்சதில்லை. என்னைமாதிரி ஆத்மார்த்தமா கொப்பி அடிக்கறதில என்ன தப்பு இருக்க முடியும்? யாருடி நீ மோகினி பாட்டுல சிவாஜி காட்டியிருக்கிற வேகமும், ஸ்டைலும்தான் இன்றைய ரஜினி. ரசித்து பார்த்தீங்கன்னா ரஜினியோட எல்லா ஸ்டைலும் அதில் இருக்கும். பாதிப்பு இல்லாத கலைஞனே இருக்கமுடியாது.

**கே:- உங்க மனைவி படம் இயக்கப் போவதாக சொல்லப்படுவது உண்மையா?**

**கமல்:-** ஆமாம். படம் என்னுடைய சொந்த தயாரிப்பு.

**கே:- வீட்டில் எந்த மொழியில் நீங்களும் மனைவியும் பேசுவீர்கள்?**

**கமல்:-** என் எதிரே தமிழ் பேசமாட்டாங்க. (சிரிப்பு) நாங்க ஆங்கிலத்தில் பேசுவோம். குழந்தைகள் தமிழ் பேசுறாங்க. ஹிந்தி, ஆங்கிலம் பேசுறாங்க.

**கே:- இளையராஜாவின் திறமை எப்படி?**

**கமல்:-** ஐந்து வயதில் பாடியிருக்கார். ஐந்து வயதில் பாடக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. வாய்ப்புக்கள் அமைந்திராத பட்சத்தில் கமலஹாசனும், ராஜாவும் மாடு மேய்த்துக் கொண்டிருப்பதற்குக்கூட சாத்தியம் இருக்கிறது.



...தமான்-அனுஷா
...ம்: இசைப்பயணம்

## எல்.பி.டபிள்யூ

இந்தி நடிகைகளில் கவர்ச்சியான கால்களை உடையவர் சோனாலி பென்ட்ரே. 'இங்கிலீஷ் பாபு தேச மெம்' என்னும் இந்திப் படத்தில் சோனாலியின் கால்களை பல கோணங்களில் காண்பித்தார்கள். ஆனாலும் படம் படு தோல்வி.

சோனாலி என்ன சொல்கிறார் தெரியுமா? ரசிகர்கள் எல்.பி.டபிள்யு கொடுத்து என்னை அவுட் டாக்கிவிட்டார்கள்" என்கிறார்.



கமல்-மீனா
படம்: அவ்வை சண்முகி

# சி னி வி சி ட்



நெப்போலியன்-சங்கவி
படம்: பகவத்சிங்

## ரம்பா படிக்கிறார்

தமிழில் இடத்தை பிடிக்க கடும் முயற்சியில் இருப்பவர் ரம்பா. தமிழ் தெரியாது என்பதுதான் ஒரு குறை. அதனால் தமிழ் கற்றுக்கொள்ள ஒரு மாஸ்டரை ஒழுங்கு செய்தார்.

கற்றுக்கொடுக்க வந்த மாஸ்டர் ரம்பாவின் ரசிகர். அவர் ரம்பாவையே அடிக்கடி பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாராம்.

அதனால் மாஸ்டரை நிறுத்திவிட்டு பெண் ஆசிரியை ஒருவரை நியமித்து தமிழ் கற்று வருகிறார் ரம்பா.

## அஜித்-விஜய் இணைவு

மணிரத்னம் தயாரிப்பில் வசந்த் இயக்கிய படம் 'ஆசை' 210 நாட்கள் ...க்கிறது. அதனை அடுத்து வசந்த் இயக்கத் ...றை தயாரிக்கிறார் மணிரத்னம். அஜித்குமாரும், ...ாயகன்களாக நடிக்கலாம் என்று தகவல். ..., விஜய்யும் ஏற்கனவே இணைந்து நடித்த படம் ... பார்வையிலே'.

## மி னி சி னி

* ரஜினியின் 'முத்து' தெலுங்கில் மொழிமாற்றப்பட்டு வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. ரஜினி தெலுங்கில் நேரடியாக நடித்து வசூலில் சாதனை படைத்த 'பெத்தராயுடு' வசூலை முறியடிக்கப் போகிறது தெலுங்கு 'முத்து'.

* 'அதர்மம்' படத்தை இயக்கிய ரமேஷ் கிருஷ்ணன் தற்போது முரளி நடிக்கும் படமொன்றை இயக்கி வருகிறார். இது முடிந்தவுடன் விஜயசாந்தி நடிக்கும் படமொன்றினை இயக்கவுள்ளார்.

* அருண்பாண்டியன்- மன்சூர் அலிகான் நடித்த 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' படத்தை தெலுங்கில் மொழிமாற்றி வருகிறார்கள். தெலுங்கில் இது 'அதிகாரி' என்ற பெயரில் வெளியாகவுள்ளது.

* பிரபல நாவலாசிரியை சிவசங்கரியின் கதை ஒன்று மலையாளத்தில் படமாகவுள்ளது. பிரபல மலையாள இயக்குநர் ஹரிகுமார் இயக்கும் இப்படத்தில் மம்முட்டி கதாநாயகனாக நடிக்கவிருக்கிறார்.

* மணிரத்னத்தின் 'ஆனந்தம்' படத்தில் தற்போது கௌதமி நடித்து வரும் வேடத்தில் முதலில் தபு நடிப்பதாக இருந்தது. திகதிகள் ஒத்துவராததால் தபு விலகிக்கொண்டார். இப்போது வேறொரு வேடத்தில் 'ஆனந்தம்' படத்தில் நடிப்பதற்கு தபு ஒப்பந்தமாகியுள்ளார்.

* விக்ரமன் இயக்கத்தில் விஜய் நடித்து வெற்றி பெற்ற 'பூவே உனக்காக' படத்தைக் கன்னடத்தில் தயாரிக்கிறார்கள். 'மலைச்சாரல்' படத்தில் நடித்த ராம்குமாரும், 'பூஞ்சோலை' நாயகி ரஷிகாவும் கன்னடப் பதிப்பில் நடிக்கிறார்கள்.

* 'பிரியம்' பட நாயகி மந்த்ரா பல படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்துள்ளார். இந்தியில் அமிதாப்-ரஜினி-கமல் நடித்த 'கிராப்டர்' படத்தில் சின்ன வயதுக் கமலாக நடித்தவரும் இவர்தான்.

* 'முறை மாப்பிள்ளை' படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமான ஸ்வரராஜ் ஒரு மலேசியத் தமிழர். 'முறை மாப்பிள்ளை' படத்திற்குப் பின் பிரகாஷ்ராஜ்-மீனா நடிக்க அதியமான் இயக்கும் 'சொர்ணமுகி' படத்திற்கு இசையமைக்கிறார்.

* 'பாஞ்சாலங்குறிச்சி', 'சேனாதிபதி' ஆகிய படங்களைத் தயாரித்து வரும் கே.பி.பிலிம்ஸ் கே.பாலு, அடுத்து சரத்குமார் நடிக்க மனோஜ்குமார் இயக்கும் 'சிம்மராசி' என்ற படத்தைத் தயாரிக்கவிருக்கிறார்.

* இதுவரை தமிழ் தவிர்ந்த வேற்று மொழிப் படங்களில் நடித்திராத சிவகுமார் முதன் முறையாக 'சௌகந்திகமானசம்' என்ற மலையாளப் படத்தில் நடிக்கிறார். இவருடன் ஜெயராமும் இணைந்து நடிக்கிறார்.

## வினிதாவின் விடா முயற்சி

நடிகை வினிதாவுக்கு இந்த ஆண்டு தமிழில் பெரிய வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. விடா முயற்சியோடு ஹீரோக்களை துரத்தித்திரிகிறார் வினிதா.

அவரது விடாமுயற்சி படப்பிடிப்பு ஒன்றிலும் வெளிப்பட்டுவிட்டது.

'சாம்ராட்' படத்தில் ராம்கியின் ஜோடியாக நடிக்கிறார் வினிதா. இருவரும் கல்லூரி மாணவ, மாணவிகளாக நடிக்கின்றனர்.

'பியானோ' வாசிப்பதில் ராம்கிக்கும், வினிதாவுக்கும் போட்டி. ராம்கி வெற்றி பெற்றால் முத்தம் தர சம்மதிப்பார் வினிதா. ராம்கி வெற்றி பெறுகிறார். வினிதாவும், ராம்கியும் உதட்டோடு உதடுசேர முத்தமிடுகின்றனர். இக் காட்சியை படமாக்கிவிட்டு 'கட்' என்றார் இயக்குநர். வினிதாவோ ராம்கியின் உதட்டை விடாமல் பிடித்துக்கொண்டார். இயக்குநர் பொறுமையிழந்து 'கட் கட்' என்று கத்தியபின்னர்தான் விட்டாராம் வினிதா. விடா முயற்சிதானே!

## கவுண்டமணியின் வயது

கவுண்டமணிக்கு அறுபத்து மூன்று வயது என்றால் நம்பமுடியுமா? உண்மை அதுதான் என்கிறது ஆனந்தவிகடன் பத்திரிகை. இச் செய்தியை வன்மையாக மறுத்துள்ளார் கவுண்டமணி. அப்படியானால் உங்கள் வயது என்ன? என்று கேட்டது பத்திரிகை. "அதை ஏன் உங்களுக்கு? ஆனால் என் வயது 63 அல்ல" என்று மட்டும் சொல்லியிருக்கிறார் கவுண்டமணி.

கவுண்டமணியின் வயது 60க்கு மேல் என்பதுதான் உண்மை. தனது 'இமேஜ்' போய்விடும் என்பதால் உண்மை வயதைச் சொல்ல மறுக்கிறார் கவுண்டமணி என்கிறார்கள்.

## ரசிகாவுக்கு வாய்ப்பு

கங்கை அமரன் இயக்கத்தில் அவரது மகன் வெங்கட் பிரபுவின் ஜோடியாக 'பூஞ்சோலை' படத்தில் நடித்துக்கொண்டிருப்பவர் ரசிகா. ஜெ.ஜெ.ரி.வி. நடத்திய அழகிப் போட்டியில் முதல் இடத்தில் வந்தவர் ரசிகா. கதைக்கு தேவையானால் முத்தக் காட்சியில் நடிக்க தயாராக இருக்கிறார். 'பூஞ்சோலை' படத்தில் வெங்கட்பிரபுவுடன் நெருக்கமான காட்சிகளில் தாராளமாக நடித்துள்ளார். சின்னராமசாமி, பெரியராமசாமி படத்திலும் நடித்து வருகிறார்.

## சில்க் ஏமாற்றம்

சில்க் சுமிதா குலுங்கிக் குலுங்கியே ரசிகர்களை கலங்கவைப்பவர். இப்போது அவரே கலங்கிப்போய் நிற்கிறார். உடல் வலிக்க உழைத்துச் சேர்த்த சொத்தையெல்லாம் அவரது காதலர் சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டாராம்.

'நம்பிக்கைவைத்து அவரோடு பழகினேன். இனி யாரோடும் உஷாராகத்தான் இருப்பேன்.' என்று சொல்லிக் குலுங்குகிறார்.....மன்னிக்கவும் புழுங்குகிறார் சில்க் சுமிதா.

# அயலவர்களை பகைக்காமல் இருக்க....

நாம் குடியிருக்கும் வீட்டைச் சுற்றி அல்லது அருகில் குடியிருப்பவர்களுடன் நாம் வளர்த்துக் கொள்ளும் உறவு, அவர்களுக்கும் நமக்கும் இடையே நிலவும் நட்பு, இவை நம் அன்றாட வாழ்க்கையை மிகவும் பாதிக்கின்றன. சில சமயங்களில் நல்ல விதமாய், சில நேரங்களில். நாம் விரும்பாத விதங்களில். கெடுதல்களை நினைத்து அண்டை அயல் வீட்டாருடன் பேசாமல், பழகாமல் ஒதுங்கிக் கொள்வது நல்லதல்ல. அதற்காக ஒரேயடியாய் பக்கத்து வீட்டிலேயே குடியிருப்பதும் கூடாது.

அப்படியானால்.. அக்கம் பக்கத்தாருடன் எப்படித்தான் பழகுவது?

அக்கம் பக்கத்து மனிதர்கள் பழகுவதற்கு இனிமையாகவும், எப்போதும் நமக்கு அனுசரணையானவர்களாகவும் இருப்பார்களென்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. மனிதர்களிடையே முரண்பாடுகள் சகஜம். அதை



மீறின தோழமையே நமக்கு அவசியம்.

பக்கத்து வீட்டுக்காரர்களின் நட்பென்பது அவசியம் என்று தெரிகிறது. ஆனாலும் சற்றுக் கவனமாயிருக்க சில முன்யோசனைகள் இதோ:

* பண உதவி கேட்காதீர்கள்...! கொடுக்காதீர்கள்.....!
* பேப்பர், புத்தகங்கள் ஓசி கொடுப்பதில் உங்களுக்கு இடைஞ்சல் இருக்குமானால் நாசூக்காகத் தெரிவித்து விடுங்கள்.
* அவசியமின்றி அடுத்த வீட்டில் மணிக்கணக்காய் உட்கார்ந்து அரட்டை அடிக்காதீர்கள்.
* பக்கத்து வீட்டாரின் சொந்த விஷயங்களைக் கிளறாதீர்கள்.
* அடுத்தவரின் சுக துக்கங்களில் ஆத்மார்த்தமாகப் பங்கெடுங்கள்.
* மது அருந்துதல், சீட்டு விளையாடுதல் போன்றவற்றில் பக்கத்து வீட்டுக்காரரைப் பங்கெடுக்க அழைக்காதீர்கள்.
* முடிந்தவரையில் அக்கம் பக்கத்து வீட்டாரின் குறைகளைப் பெரிது படுத்தாதீர்கள்.

பிறகென்ன ஜாலியோ ஜாலிதான்!

# கர்ப்பிணிகளுக்கு யோசனை

கர்ப்பகாலத்தில் கர்ப்பிணிகள் இரத்த அழுத்தம் இருக்கிறதா இல்லையா என்று கட்டாயமாக மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

கருவுற்ற பெண்களில் சிலருக்கு இரத்த அழுத்தம் ஏற்படவாய்ப்பு இருக்கிறது. வாய்க்கு ருசியாக சாப்பிடு என்று பெற்றவளும், உறவுக்காரர்களும் வறுத்தது, பொரித்தது என்று கொடுத்துக் கொண்டே இருப்பார்கள்.

எப்போதுமே வாய்க்கு ருசியாக இருப்பது வயிற்றுக்கு எதிரியாக இருக்கும். அதை மறந்து விடாதீர்கள். கருவுற்ற ஐந்தாம், ஆறாம் மாதங்கள் இரத்த அழுத்தம் அதிகரிக்கலாம். சிறுநீரில் ஆல்புமின் இருக்கும். பரிசோதனை செய்து தெரிந்து கொண்டு உணவுக் கட்டுப்பாடோடு இருந்தால் நல்லது.

சாப்பாட்டில் உப்பைக் குறைக்க வேண்டும். உப்பு தேவைக்கு அதிகமாக ஆகும் பொழுது அதை வெளியேற்ற சிறுநீரகங்களின் வேலைப்பளு அதிகரிக்கும். உப்பும் அத்தோடு நீரும் வெளியேறாமல் இருப்பதால் இரத்த அழுத்தம் அதிகமாகின்றது. கைகால்



களில் வீக்கம் ஏற்படுகிறது. பிரசவத்தின் போதும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் தவிர்க்க, கருவுற்ற நான்காம் மாதத்தில் இருந்தே மருத்துவப் பரிசோதனை, உணவுக்கட்டுப்பாடு, சிறிது ஓய்வு, முடிந்த அளவு வேலை எல்லாம் அவசியமாக இருக்க வேண்டும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டால்

ஒரு குடும்பத்தில் நான்கு பேர் இருந்தால் நான்கு விதமான கருத்துக்கள் இருக்கத்தான் செய்யும். ஒருவருடைய கருத்தை மற்றொருவர் ஏற்காத போதும், மறுக்கும் போதும் தான் சண்டைகளும், சச்சரவுகளும் ஏற்படுகின்றன. மற்றவர்களின் கருத்தைக் கேட்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொண்டால் சண்டைகள் கொஞ்சம் குறையும். தான் சொன்னதையே தான் எல்லோரும் செய்ய வேண்டும் என்று பெரியவர்கள் எதிர்பார்ப்பார்கள். அப்படி நடக்காத போது சண்டை வருகிறது.



சண்டை வராமலிருக்க சுலபமான வழி, கருத்து மோதல்கள் ஏற்படும் போதும் மௌனமாக இருப்பதுதான். சண்டை வருவதற்கான காரணம் என்னவென்று யோசித்துப் பாருங்கள். அந்தக் காரணத்தைப் போக்கினால், சண்டை ஏற்படுவதும் குறையும். வீட்டில் பணத் தகராறா? பற்றாக்குறை வராதபடி சமாளித்து நடந்தால் தகராறு வருவதற்கு வாய்ப்பில்லை. இப்படி குடும்பத்தில் ஒருவருக்கொருவர் சண்டை எதனால் ஏற்படுகின்றது, என்று பார்த்து அதைப்போக்க முயற்சி செய்தாலே போதும். வீட்டில் சமாதானக் கொடி பறக்கும்.

## குழந்தையின் தூக்கம்

பெரியவர்கள் தங்களுடன், தங்கள் படுக்கையில் குழந்தைகளையும் வைத்துக் கொண்டு உறங்கியதால் பெரும்பாலான குழந்தைகள் இறந்து விட்டதாகத் தெரிவிக்கிறது அமெரிக்காவின் நுகர்பொருள்பாதுகாப்பு கமிஷன்.

குழந்தைகள் பெரியவர்களின் மெத்தைகளுக்கு இடையிலும், கட்டில் மற்றும் சுவர்களுக்கிடையில் உள்ள இடைவெளியிலும் மிகச் சுலபமாக மாட்டிக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. மேலும் பெரியவர்களின் கால்களுக்கிடையில், குழந்தைகள் சிக்கிக் கொண்டு மூச்சுத் திணறவும், அவர்கள் மீது முட்டி மோதிவிடவும் வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதாக எச்சரிக்கிறது இந்த கமிஷன்.

அதே போன்று குழந்தைகள் படுக்கையில் இருந்து உருண்டு விழாமல் இருக்க, தலையணைகளை வைப்பதும் ஆபத்தானது. ஏனெனில், அவர்களால் மிக எளிதாக, அவற்றைத் தாண்டி உருண்டு விழவும், சுவாசிக்க முடியாமல் போகவும் நேரிடலாம் என்கிறது இந்த அமைப்பு.

## விரல் சூப்பும் குழந்தைக்கு

உங்கள் குழந்தைக்கு வயதாகியும், விரல் சூப்பும் பழக்கம் இருக்கிறதா?

களைப்பு, தூக்கமின்மை, பசி, உடல் சுகமின்மை போன்றவற்றால் அவதிப்படும் குழந்தைகளும், தேவையில்லாத பிரச்சனைகளுக்கிடையில் வாழும் குழந்தைகளும், இந்தப் பழக்கத்திற்கு எளிதில் அடிமையாகின்றனர். இதற்காக, குழந்தைகளை அடிப்பதோ, திட்டுவதோ பலனளிக்காது. ஆனால் இந்தப் பழக்கம் குழந்தையின் ஆறாவது வயதிற்கு முன் கண்டிப்பாக நிறுத்தப்பட வேண்டும். ஆறு வயது வரை, இந்தப்பழக்கத்தினால் முகமும், உதடுகளும் வடிவில்லாமல் போகவோ, பற்கள் முன்னே நீட்டிக்கொண்டு வளரவோ வாய்ப்பில்லை. இந்த வயதிற்குப் பிறகும், இந்தப் பழக்கம் தொடர்ந்தால், உங்கள் குழந்தையை ஒரு மனநல நிபுணரிடம் அழைத்துச் செல்ல வேண்டியது அவசியம்.

## கண்களின் கீழ்



கண்களின் கீழ் கருவளையம் காணப்படுகிறதா? தூக்கமின்மை, களைப்பு, வலிமையின்மை, இரத்த சோகை, நுரையீரல் மற்றும் வயிற்றுப் பிரச்சனைகள் போன்றவற்றால் தான் இப்படி ஏற்படுகின்றது. ஒரு சிலருக்கு அளவுக்கதிகமான குடிப்பழக்கத்தாலும், செக்ஸ் ஈடுபாட்டாலும் கூட இப்படித் தோன்றலாம்.

முறையான உடற்பயிற்சி, உணவு முறை போன்றவற்றின் மூலமும், மங்கலான வெளிச்சத்தில் அதிக நேரம் படிப்பதைத் தவிர்ப்பதன் மூலமும் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்கும். மேலும் எலுமிச்சம்பழச் சாறு அருந்துவதாலும், விட்டமின் 'சி' சத்தைச்சேர்த்துக் கொள்வதாலும் கூட இதைச் சரி செய்யலாம்.

## உலரும் கூந்தல்

* குளித்து விட்டு, வாராத கூந்தலை ஒரு போதும் பின்னிப்போடவோ, சேர்த்துக் கட்டவோ கூடாது.
* குளித்து விட்டு அவசர அவசரமாக வெளியே கிளம்ப வேண்டுமானால், கூந்தலை உலர்த்த ஹேயார் ட்ரையரைப் பயன் படுத்துங்கள். நனைந்த முடியைக் கட்டினால் கூந்தலுக்கு மட்டுமல்ல அது உடலுக்கே கெடுதி.
* உடலில் இரும்புச்சத்தின் அளவு குறைந்தால் பொடுகு தோன்றும். அதற்காகக் கண்ட கண்ட மருந்துகளை வாங்கிப் பயன் படுத்தாதீர்கள். அலர்ஜி உருவாகும். அதிகமாகப் பொடுகு இருந்தால் தோல் நோய் நிபுணரின் ஆலோசனையைப் பெறுங்கள். ஒரு நாளைக்கு முன்பு எண்ணெய் புரட்டி வைத்து, மறுநாள் நனைய வைத்து- முளை வரவைத்த வெந்தயத்தை அரைத்துப் பூசினால் ஓரளவு தொல்லை தீரும்.

## கரட் பூரி

[தொகுத்துத் - தருவது சுகந்தினி]

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| கரட் | - 1/4 கிலோ |
| மாவு | - 1/4 கிலோ |
| சீனி | - 1/4 கிலோ |
| பால் | - 1/2 போத்தல் |
| எண்ணெய் | - தேவையான அளவு. |

செய்முறை:

கரட்டைச் சீவவும். பாலில் நன்றாக வேகவிடவும். பிறகு எடுத்து மிக்ஸியில் போட்டு அரைக்கவும். இதனுடன் சீனியையும் சேர்க்கவும். இந்தக் கலவையை மாவுடன் சேர்த்து நன்கு பிசையவும். பாலை இந்தக் கலவையுடன் சேர்த்துக் கொள்ளவும். பிறகு சிறு சிறு உருண்டைகளாக உருட்டி கைகளினாலேயே வட்ட வட்டமாகப் பூரி மாதிரித் தட்டி எண்ணெயில் பொரித்து எடுக்கவும். சுவையான, சத்துள்ள பூரி இது.

* பீட்ரூட்டையும் இதுமாதிரி பூரி செய்ய உபயோகிக்கலாம்.

## நீர் மருத்துவம்



நமக்கு காய்ச்சல் வந்துவிட்டால் உடனே ஒரு துணியை நீரில் நனைத்து நெற்றியின் மீது பரவலாகப் போடுவோம் அல்லவா? இது இயல்பான ஒன்றுதான்! இதிலிருக்கும் ஈரமானது நமது உடலின் அதிக வெப்பத்தைக் குறைத்து சமன் செய்யப் பயன்படுகிறது.

இந்த வகையில் மட்டுமின்றி நீரானது நமது வாழ்வில் மிகவும் அரும்பெரும் மருத்துவப்பயன்களைக் கொண்டுள்ளது எனலாம்.

நெஞ்சுவலி வருபவர்களுக்கு மார்பின் மீது ஈரத்துணியைப் போடுவதைப் பார்த்திருப்பீர்கள்! இதை நீண்ட காலங்களுக்கு முன்பு 'லூயிஸ் கூன்' என்பவர் கண்டறிந்து நவீனப்படுத்தினார். அதுதான், 'வாட்டர் தெரபி'.

அத்துடன் மலையுச்சிகளிலிருந்து கீழே விழும் நீர் அதிக வேகமாக வரும். அத்துடன் இதில் மின்சாரமும் கலந்து இருக்கும். அந்த மின்நீரில் நாம் நனைந்து குளிக்கும் போது உடல் தேவையான மின்சாரத்தைப் பெற்றுக்கொள்கிறது. அதிர்ச்சியால் பிரமை கொண்டவர்களை இப்படித் தான் பெரும் பாலும் குணமடையச் செய்கிறார்கள்.

முதுகில் உள்ள 'சியாட்டிகா' எனப்படும் தண்டுவட நரம்பு பாதிக்கப்பட்டால் முதுகு வலியும், அதனைத் தொடர்ந்து மூட்டுவலியும் வரும். இதற்குத்தான் 'ஹிப் பாத்' பயன் படுத்தப்படுகிறது.

நமது உடலில் உள்ள அதிக வெப்பத்தை நாம் குளித்துவிட்டு குளியலறையிலிருந்து வெளிவரும் போதுதான் உணரமுடியும்.

ஒரு சின்னஞ்சிறிய விஷயம்....

நன்கு கொதித்த நீரில் குளிக்கக்கூடாது. இளம் சூடான நீரில்தான் குளிக்க வேண்டும்.

சாதாரண குளியலின் துவக்கம் தோள் பள்ளடையிலிருந்து இருக்க வேண்டும்.

நீங்கள் எப்படி?

## எலிசபெத் விளக்கம்



எலிசபெத் டெய்லருக்கு 63 வயது. ஹொலிவுட் படவுலகின் அந்தக் கால கவர்ச்சிக் கன்னி. கிளியோபாத்ராவாக நடித்து இரசிகர்களை மயக்கிப் போட்டவர்.

இப்போது 63 வயதானாலும் அழகாக- திடமாக இருப்பதுதான் அவரது தனித்துவம்.

சமீபத்தில்தான் தனது எட்டாவது கணவரை விவாகரத்து செய்தார் அல்லவா எலிசபெத்? அது ஏன் என்றும் மறைக்காமல் சொல்லியிருக்கிறார்.

"நான் 3 முறை செய்த இடுப்பு அறுவை சிகிச்சை காரணமாக முன்புபோல நாங்கள் இருவரும் சேர்ந்து இருக்க முடியவில்லை.

என்னை திருமணம் செய்துகொண்டதால் அவருக்கு நெருக்கடிகளும், பிரச்சனைகளும் ஏற்பட்டன. நான் அவருக்காக வருந்துகிறேன்." என்றுள்ளார் எலிசபெத் டெய்லர்.

"இனிமேல் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்" என்று எலிசபெத் டெய்லர் அறிவித்திருக்கிறார். இதனால் பிரபல ஹோட்டல் முதலாளிகள் சிலர் கவலையடைந்துள்ளனர். அடிக்கடி கிடைத்த வருமானம் பாதிக்கப்படுமே என்பதுதான் அவர்களின் கவலை.

## தேனிலவு எப்படி?



* எந்த இடத்திற்கு சென்று தேனிலவை அனுபவிக்கலாம் என்பதை தம்பதியர் இருவரும் இணைந்தே தீர்மானிக்க வேண்டும். அப்படியானால்தான் ஆரம்பமே அமோகமாக இருக்கும்.
* திருமணம் முடிந்தவுடன் தேனிலவுக்கு செல்லக்கூடாது. ஓரிரு தினங்கள் ஓய்வு எடுத்துக்கொண்டு தெம்போடு செல்வதுதான் நல்லது.
* என்னதான் புதுமணத்தம்பதிகள் ஒருவரை ஒருவர் அந்தரங்கமாக புரிந்துகொள்ள அவசரப்பட்டாலும், ஆடைகளும் அவசியம்தானே. பரஸ்பரம் கவர்ச்சியாக தோன்றக் கூடிய ஆடைகளை அணிந்துகொள்வது அவசியம்.
* தேனிலவுக்குச் செல்லும்போது புத்தகங்கள், பாடல் கசட்டுக்கள் என்பவற்றைக் கொண்டு செல்லவேண்டாம். அவற்றுக்கெல்லாம் எங்கே நேரம் இருக்கப்போகிறது?
* தேனிலவு மிக நீளமாகவும் இருக்கக் கூடாது. மிக குறுகிய காலமாகவும் இருக்கக் கூடாது. இரண்டு மூன்றுவாரங்கள் போதும்.
* தேனிலவுக்கு செல்லும்போது துணைக்கு யாரையும் அழைத்துச் செல்லவே கூடாது. அவர்கள் உடன் இருப்பது சிவபூசையில் கரடி மாதிரியாகிவிடும்.

## வீராங்கனையின் வாக்குமூலம்

டென்னிஸ் உலகில் முதல் இடத்தில் இருக்கும் வீராங்கனை ஸ்டெபி கிராப்.

உலகில் மிகப்பெரும் கோடீஸ்வரிகளில் ஒருவரான ஸ்டெபி கிராப்புக்கும் வாழ்க்கையில் ஏற்ற இறக்கங்கள் இல்லாமல் இல்லை.

இதோ தனது உணர்வுகளை அவரே சொல்கிறார் கேளுங்கள்:

19 வயதில் என் மீது பிரேமை வயப்பட்ட ஒரு இரசிகன் என் எதிரிலேயே தற்கொலை முயற்சியில் இறங்கினான். விமர்சகர்கள் என்னை 'டென்னிஸ் கம்ப்யூட்டர்' என்று புகழ்ந்து தள்ளினார்கள். இன்றைய 26 வயதிற்குள் எத்தனையோ சாதித்தாகிவிட்டது. ஆனாலும் திருப்தி என்பதே இல்லை. 'பேர்ஃபெக்ஷன்' என்கிற நட்சத்திரத்தை நோக்கி ஓடி ஓடி, ஆடி ஆடி எனக்கு அலுத்துவிட்டது. இது ஒரு பயங்கரமான சித்திரவதை அனுபவம். வெற்றிகளால் வரும் தலைக்கனம் தோல்விகளால் வரும் கழிவிரக்கத்தை விட மேலானதில்லை.

தோல்விகள் புதுமையாக என்னைப் பாதிக்கின்றன. பொதுவாக தோல்விக்குப் பின்னால் மிகமிக விரைவாக நான் சோர்ந்து தூங்கிவிடுகிறேன். பள்ளியில் குழந்தைப் பருவத்தில் எனக்கு சிநேகிதிகள் மிக மிகக் குறைவு. இருந்தவர்களும் என்னை அலட்சியம் செய்வார்கள். அல்லது 'டீஸ்' பண்ணுவார்கள். 13 வயதில் டென்னிஸ் நிபுணி ஆனேன். அன்று ஆரம்பித்த 'சித்திரவதை' இன்னும் தொடர்கிறது.

மார்ட்டினா நவரத்திலோவா ஒரு தனிப்பிறவி. அவளை ஒரு மகாமேதை- மாபெரும் வீராங்கனை என்பேன். காலியான ஸ்டேடியத்தில் அவளுக்கெதிராக விம்பிள்டன் சென்டரில் விளையாட வேண்டும். ஜெயிப்பதற்காகவோ ஸ்கோர் பண்ணுவதற்காகவோ அல்ல.... எங்களுக்கிடையில் மட்டும் இந்த டென்னிஸ் விளையாட்டை ஆடி இரசிக்க வேண்டும். இப்படி ஒரு விநோத ஆசை இருக்கிறது.




## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | திருமதி. சரோஜினி குமாரசாமி |
| | மாளிகாவத்தை அரச தொடர்மாடி,கொழு-10. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** V

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 29-06-1996

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

www.padippakam.com

# அந்தநாள் ஞாபகம்



பண்டிதர் நேரு-அருகே எட்வினா-போராட்டமும்-நட்பும்

இந்தியாவை விட்டு ஆங்கிலேயர்கள் வெளியேறிவிட்டார்கள். ஆனாலும் ஆங்கிலேயர்கால சம்பவங்கள் இன்னமும் பாரதநாட்டில் கதை கதையாக சொல்லப் பட்டுவருகின்றன.

அவற்றில் ஒரு சுவையான கதை, நேருவின் காதல் கதை. ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து நேரு போர்க்கொடி உயர்த்தியபோதும், மௌண்ட்பேட்டன் பிரபுவின் மனைவி எட்வினாவுக்கும் நேருவுக்கும் இடையே இனிய நட்பு மலர்ந்தது. அப்போதே பரவலாக பேசப்பட்ட விவகாரம் அது.

கேதரின்கிளைமெண்ட் என்பவர் சமீபத்தில் வெளியிட்டுள்ள நாவல் பழசைக் கிளறுகிறது. நாவலின் பெயர் 'எட்வினா அன்ட் நேரு.'

# நிலமை கட்டுப்பாட்டில்

விம்மி விம்மி
விழிநீரைக் கக்கிய
விழிகள் இப்போது வற்றிவிட்டன!
-0-
தீச்சுடர்கள்
துடிதுடிக்கப்
பற்றியெரிந்த இதயம்
உபதேசங்களின்
ஒத்துழைப்பால்
அணைக்கப்பட்டுவிட்டது!
-0-
உள்ளத்துள்ளே
ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த
ஒப்பாரி அலைகள்
ஓய்ந்து போயின!
-0-
இன்னொரு-காதல்
தாக்குதல் நிகழ்வதைத்
தடுத்து நிறுத்த
மனதின்
அருகுகள் யாவும்
பாதுகாப்பால்
பலப்படுத்தப்பட்டுள்ளன!
-0-
என் வதனத்தை நோக்கி
ஏவப்படுகின்ற
புன்னகைகள் கூட
தீவிர பரிசீலனையின் பின்பே
ஏற்றுக் கொள்ளப்படுகின்றன!
-0-
என் வாழ்வினுள்
ஊடுருவ முயற்சித்த
சில சிநேகங்கள்
விரக்தி ஏந்திய
எனது நயனங்களால்
சந்தேகத்தின் பேரில்
சுட்டெரிக்கப்பட்டன!
-0-
என் கவிதைகளில்
அவனைப் பற்றிய
சோகங்கள்
தணிக்கை செய்யப்படுகின்றன!
-0-
இந்நிலை நீடித்தால்,
கொந்தளித்துக் கொண்டிருக்கும்
வாழ்வுத் தேசத்தில்
அமைதி நிலைபெறுமென்று-என்
ஆன்மாவின்
தலைமைப்பீடம்
உறுதியாக நம்புகிறது!
-0-

செல்வி. பஹீமா ஜஹான்,
தெமடகொல்ல, மெல்சிரிபுர.

# காதல் மீதங்கள்

'நேசகியே..!
நீ
நடந்து சென்ற
புல் வெளிகளில்
வசந்தத்தை (நீ)
தேடுகிறேன்.
*
உன்
கூந்தலை
அழகிட்ட
பூ மரங்களை
தடவிக் கொள்கிறேன்.
*
நீ
இருந்துபோன
மணல் மேடுகளில்
இப்போது
மண்டியிட்டு
இருக்கிறேன்
*
நீ
என்னோடு பேசிய அந்த
வார்த்தைகளை
மீண்டும் மீண்டும்
மீட்டிக் கேட்கிறேன்
*
நீ
தந்துபோன
வெகுமதிகள்
ஒவ்வொன்றிலும்
உன்
முகம் பார்க்கிறேன்.
*
நீ
தொட்டு போன
என்
விரல்களை
உற்றுப் பார்க்கிறேன்
*
நான்
சுவாசிக்கும்
காற்றுக்கூட
உன்னில்
பட்டுவருவதாக
உணர்கிறேன்.
*
கண்மணி...
நீயில்லாத
உன் ஊரான
என்
காதல் தேசத்தில்
இப்போது
நான் மட்டும்
தனியாய்..
*

ஆர். சாந்தசீலன், பொத்துவில்-03.

# தேன் கிண்ணம்



# நாளை

பூவுலக மக்களை
புதைத்த திருப்தியில்
ஆயுதங்கள்
அமரர்களுக்குச் சவால் விடும்!
**
நைல் நதியை
தோற்கடித்த மகிழ்ச்சியில்
குருதியாறு
குபிரெனப் பாயும்!
**
எவெரெஸ்டயும்
தாண்டிய இறுமாப்பில்
பிணக் குவியல்கள்
நிமிர்ந்து நிற்கும்!
**
இரத்தத்தில் தோய்த்தெடுத்த
மல்லிகைப் பூக்களாய்
புறாக்களும்
உருமாறியிருக்கும்!
**
அகராதியை விட்டு
சமரசம், சாந்தி, சமாதானம்
போன்ற பதங்கள்
பறந்திருக்கும்!
**
போர்
இலவசமாய் இரை தரும்
என்ற நம்பிக்கையில்,
புயல், பூகம்பம், எரிமலை
என்பன அமைதியாயிருக்கும்!
**
பிரச்சார மேடைகளில்
கழுகுகளும் நாய்களும்
அரசியல்
பேசிக் கொண்டிருக்கும்!
**
என்றோ அழிந்த
டைனோசர்களை
இன்று ஆராயும்
விஞ்ஞானிகளைப் போல்
நாளை
மானுடத்தை காட்டு விலங்குகள்
ஆராய்ச்சி
செய்து கொண்டிருக்கும்!

செ. திவாகரன்.

# நானும்—நாயும்

எப்போதும் போல் என்னைக் கண்டு
ஓடி வந்து கால்களை நக்கி
சந்தோசத்தின் உச்சத்தில்
என் செருப்பைக் கடித்து இழுக்கும்
இந்த வாய் கறுத்த சிவலை நாய்!

இன்று அதன் பார்வை
கொஞ்சம் கூட சரியேயில்லை;
நாக்கை வெளியே தொங்கவிட்டு
கண்கள் இரத்தக் குண்டாகி,
என்னைக் கடித்துக் குதறுவது போல்
முறைத்துப் பார்க்கின்றது
என் ஈரக்குலை நடுங்கியும்
காற்சட்டை கொப்பளித்தும்

ஆத்திரம் மூக்கை முட்ட
வேண்டுமென்றே என்னருகில் வந்து
கால்களை கிளப்பி சிறுநீர் கழித்தது;
நான் என் உயர்திணையை இழந்தேன்.

விருத்தியில் நீ மனிதன்!
உன் உசம்புகை ஒவ்வொன்றிலும்
மிலேச்சத் தனம் நிரம்பி வழியும்
சிலசமயம் உன் எச்சில்கூட
விஷமாகும்!

நீ மரங்களின் தோல்களால்
உன் தோல்களை மறைத்த காலமே,
உன் மனிதம், மரணித்துவிட்டது;
இன்றுவரை நீ ஒரு காட்டுமிராண்டி!

அந்தக் காக்கையின் பார்வையில்
நாம் கால்களிலிருந்து மட்டுமே
வித்தியாசப்பட்டவர்கள்;
நீயும் என்னோடு வா
தெருவில் கிடந்து புணர்வோம்!

மருதமுனை ஜமீல்.

# கங்காணி சொன்னாரா?

யாருக்கும் தெரியாமல்
நள்ளிரவில் வரச்சொல்லி!
அழாத குறையாக
ஏன் மச்சான் கெஞ்சினீங்க?
❋ ✓ ❋
ஏதாச்சும் பேசன்னு
நச்சரிச்சுக் கெடப்பிகளே,
இப்ப மட்டும் ஏன் மச்சான்
பேசாம நிக்கிறிக?

மேற்கால வீசும் இந்த
குளிர் காத்து படுறச்சே
உயிர் வரைக்கும் நடுங்குவது
ஒங்களுக்குப் புரியல்லியா?
❋ ✓ ❋
ஓம் மொகமும் தெரியலீங்க
எம் மொகமும் தெரியலீங்க

கும் மிருட்டில் நிக்கிறச்சே
எம் மனசு நடுங்குதுங்க
❋ ✓ ❋
ஏதாச்சும் பேசு மச்சான்
சீக்கிரமாப் போக வேணும்
பேசாம நிற்பதற்கா
நடு நிசியில் வரச் சொன்னா?

ச்சே! கண்ட கண்ட
இடம் தொட்டுக்
கன்னத்தில் முத்தம் வைச்சுப்
பொல்லாத வேலையெல்லாம்
தைரியமாச் செய்யிறியே?
❋ ✓ ❋
என்னது....!
கார் வாங்க முன்னம்-நல்லாக்
கவனிச்சு வாங்கச் சொல்லி
கங்காணி சொன்னாரா!!

எம். சுரேஷ்

# என்றாவது ஒரு நாள்

சிலரின் கண்ணீரை
தண்ணீராய் நினைத்து
தட்டிக் கழி(ளி)த்தோம்.
**
இன்று
தண்ணீர் எம்மை
"தட்டி" கேட்கிறது
**
அவசர காலச் சட்டத்தால்
முகில்களை பிடித்து-
இலங்கைமேல்
போடலாம் தான்
**
வானம் தான் எம்
கட்டுப்பாட்டில்
இல்லையே.....!
இரவின் நட்சத்திரத்தை
விளக்காக நினைத்து
"வடக்கு" பார்த்தது.
*
இன்று
"தெற்கு" பார்க்கிறது.
**
"அவர்களின்"
கண்ணீரை
சேர்த்திருக்கலாம்.
**
ஓடு வருடமாவது
மின்சாரம்
பெற்றிருப்போம்.

சுபா வரன், கண்டி.

# இந்த வாரம் உங்கள் பலன்

( 23.06.96 முதல் 29.06.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன், புதன் |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| இடபம் | - செவ்வாய், வெள்ளி. |

சந்திரன்- மிதுனம், கர்க்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், வீண் பகை. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், பணவரவு. | காலை | 6 மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | பகல் | 12 மணி |
| புதன்- செலவு மிகுதி, பெரியோர் உதவி. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- தனலாபம், சுபகாரிய மகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 மணி |
| சனி- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் | 12 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- மனக் கலக்கம், காரியத்தடை. | பி.ப. | 1 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், பணச் செலவு. | காலை | 7 மணி |
| வியாழன்-புதிய முயற்சி, காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பணவரவு. | காலை | 6 மணி |
| சனி- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை | 7 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| புதன்- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | காலை | 7 மணி |
| வியாழன்- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- தூரஇடப் பயணம், முயற்சித் தடை. | காலை | 6 மணி |
| சனி- பெரியோர் உதவி, அந்நியர் சகவாசம். | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- வீண் கலக்கம், இனசன விரோதம். | காலை | 7 மணி |
| செவ்வாய்- துயர் அதிகம், செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், பெரியோர் பழி. | காலை | 6 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, இனசன நன்மை. | பகல் | 12 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 1 மணி |
| திங்கள்- இனசன நன்மை, மனக் கலக்கம். | மு.ப. | 9 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. | 9 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், தொழில் விருத்தி. | காலை | 7 மணி |
| சனி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, பணவரவு. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| செவ்வாய்- புதிய இடமாற்றம், மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| புதன்- அந்நியர் உதவி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 3 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | காலை | 7 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் | 12 மணி |
| சனி- தொழில் விருத்தி, பணவரவு. | காலை | 8 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணச் செலவு. | காலை | 6 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, கௌரவம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- மறைமுக எதிர்ப்பு, குடும்பக் கலகம். | காலை | 7 மணி |
| புதன் - பயனுள்ள செயல், தொழில் விருத்தி. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை. | மு.ப. | 9 மணி |
| சனி- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பயனுள்ள செயல், தொழில் சிறப்பு. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், கௌரவம். | காலை | 8 மணி |
| செவ்வாய்- தனலாபம், முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| புதன்- வீண் கலக்கம், காரியானுகூலம். | பகல் | 12 மணி |
| வியாழன்-வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | காலை | 7 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், பிள்ளைகளால் நன்மை. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பணவரவு. | பி.ப. | 2 மணி |
| திங்கள்-மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை. | காலை | 7 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், உறவினர் உதவி. | காலை | 6 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், பணச் செலவு. | பி.ப. | 3 மணி |
| வியாழன்- மனக் கலக்கம், புதிய முயற்சி. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், கௌரவம். | காலை | 7 மணி |
| சனி- பிரயாண மிகுதி, பணச் செலவு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| செவ்வாய்- எதிர்பார்த்த நன்மை, மனக்கலக்கம். | பி.ப. | 2 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், துயர் அதிகம். | காலை | 6 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, பதவி மாற்றம். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- பணக் கஷ்டம், கடன் படல். | காலை | 6 மணி |
| சனி- உறவினர் உதவி, காரியசித்தி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| செவ்வாய்- எதிர்பார்த்த நன்மை, கௌரவம். | பி.ப. | 3 மணி |
| புதன்- துயர் நீங்கும், கௌரவம். | காலை | 7 மணி |
| வியாழன்- மறைமுக எதிர்ப்பு, அந்நியரால் பயம். | மு.ப. | 9 மணி |
| வெள்ளி-பயனுள்ள செயல், புதிய முயற்சி. | பி.ப. | 2 மணி |
| சனி- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 3 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. | 3 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், கௌரவம். | காலை | 7 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 1 மணி |
| புதன்- காரிய சித்தி, முயற்சி பலிதம். | காலை | 7 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், பணவரவு. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | காலை | 6 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், புதிய பதவி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8


படிப்பகம்

www.padippakam.com





## பாப்பாவின் பாவை

சின்னப் பாப்பா கைகளில்
சிரித்து தோன்றும் பாவை!
கண்ணைச் சிமிட்டி கதைகளும்
கூறும் வண்ணப் பாவை!

அப்பா பெரிய கடையிலே
வாங்கி வந்த பாவை!
தப்பாமலே ஆட்டமும்
போடும் இனிய பாவை!

எல்லோரையும் கவரவே
இயக்கம் காட்டும் பாவை!
கள்ளமில்லா நெஞ்சினாள்
கண்மணியின் பாவை!

வேற்று நாட்டில் பிறந்தவள்
பாப்பாவின் இப்பாவை!
தோற்றத்தாலே அனைவரையும்
சொக்க வைக்கும் பாவை!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

பாலைப் பொழிந்து தரும், பாப்பா
-அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்து வரும் நாய்தான்
-அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா!
-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

# அகந்தையே காரணம்



ஓர் ஊரில் வாசு, ராசு என்ற இரு இளைஞர்கள் இருந்தார்கள். இவர்களில் வாசு நன்கு படித்தவன். சிறந்த அறிவாளி. ஆனால் சரியான வேலையில்லாமல் மிகவும் வறுமையில் வாடினான்.

ராசு என்பவன் கல்வி அறிவு சிறிது கூட இல்லாதவன். ஆனால் மிகவும் நல்லவன். இவனும் வேலையின்றி வறுமையில் வாடினான்.

ஒரு நாள் வாசுவும், ராசுவும் சந்தித்துக் கொண்டனர். பேச்சின் இடையே, தங்கள் வறுமை நிலை தீர அந்நாட்டு மன்னனிடம் சென்று உதவி கோரினால் என்ன என்ற பேச்சும் எழுந்தது.

அது சிறந்த யோசனை என்று முடிவு செய்த இருவரும் அன்றே அரண்மனைக்குச் சென்று, மன்னனைச் சந்தித்து, தங்கள் வறுமை நிலை தீர உதவ வேண்டும், என்று கேட்டுக் கொண்டார்கள்.

அவர்களது நிலை கண்டு மனமிரங்கிய மன்னன், அவர்கள் இருவரும் சுயமாகத் தொழில் ஒன்றைத் தொடங்க இருவருக்கும் தலா நூறு பொற்காசுகளைத் தருவதாக வாக்களித்தான். இரு நாட்கள் கழிந்தபின் வந்து பெற்றுச் செல்லுமாறு கூறி அவர்களை அனுப்பி வைத்தான்.

சிறிது நேரத்தில் வெளியே சென்ற வாசு, ராசுவை வீட்டிற்கு அனுப்பி விட்டு மீண்டும் மன்னனைக் காண அரண்மனைக்குள் வந்தான்.

வாசுவைக் கண்ட மன்னன் அவனை அழைத்து "என்ன விஷயமாக மறுபடியும் வந்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

"மன்னவா! நான் எவ்வளவோ செலவு செய்து படித்தவன். என் படிப்பிற்குப் பெரிய அரசாங்க உத்தியோகம் கிடைத்திருக்க வேண்டும். என் தலையெழுத்து எனக்கு வேலை ஒன்றும் கிடைக்காமல் வறுமையில் வாடுகிறேன். அப்படி வாழ்ந்தாலும் நான் ஒழுக்கமானவன். என்னிடம் எவ்வித கெட்ட பழக்கமும் இல்லை."

"ஆனால் இந்த ராசு இருக்கிறானே... இவனுக்கு ஒன்றும் தெரியாது. சரியாகப் படிக்கவில்லை. ஒழுக்கமில்லாதவன். ஒரு ஊதாரி. எல்லாவற்றிலும் உயர்ந்த நிலையில் இருக்கும் எனக்கும், தாழ்ந்த நிலையில் இருக்கும் அவனுக்கும் சமஅளவு பொற்காசுகள் தருகிறேன் என்கிறீர்கள். இது சரியா?" என்று கேட்டான் வாசு.

"நாளை மறுநாள் வா பார்க்கலாம்," என்று சொல்லி அனுப்பினான் மன்னன்.

இரண்டு நாட்களின் பின்னர் இருவரும் அரண்மனைக்குச் சென்றனர். தனக்குத்தான் அதிக பொற்காசுகள் மன்னன் தருவார் என்று பல கற்பனைகளோடு வந்தான் வாசு.

ராசுவுக்கோ நடந்த விஷயங்கள் எதுவும் தெரியாததால் சாதாரணமாக வந்தான்.

மன்னன் அவர்களைக் கூப்பிட்டு, ராசுவுக்கு மட்டும் நூறு பொற்காசுகள் கொடுத்து, "சென்று வாருங்கள்", என்றான்.

மன்னனின் இந்தச் செயல் வாசுவுக்கு அதிர்ச்சியளித்தது. அவன் மன்னனைப் பார்த்து,

"மன்னவா! ஏன் எனக்கு தராமல் அவனுக்கு மட்டும் கொடுத்தீர்கள்? அவன் படிக்காதவன். ஒழுங்கீனன் என்று தெரிந்தும் அவனுக்கு மட்டும் கொடுத்திருக்கிறீர்களே என்ன காரணம்?" என்று கேட்டான்.

"உனக்கு உதவிசெய்யாததற்குக் காரணம் நீதான். நீ, நான் என்ற அகந்தையுடையவன். கிடைப்பது போதும் என்று தன்னிறைவு அடையாமல் பேராசை கொள்பவன். பிறர் கஷ்டப்பட்டாலும் நாம் நன்றாக இருக்கவேண்டும் என்று நினைக்கும் சுயநலக்காரன். உனக்கு உதவுவது அதர்மமாகும்.

ராசு அறிவீனனாய் இருக்கலாம். ஒழுங்கீனனாய் இருக்கலாம். ஆனால் அத்தனை கஷ்டப்பட்ட நிலையில், அவன் பேராசைப் படவில்லை. உன்னைப் பற்றி அவதூறு எதுவும் அவன் சொல்லவில்லை. ஆக படித்த அறிவாளியான உன்னைவிடப் படிக்காத அறிவீனனான ராசுவே உயர்ந்தவன். அதனால்தான் அவனுக்கு மட்டும் கொடுத்தேன். உனக்குக் கிடையாது. நீ போகலாம்," என்று சொன்னான் மன்னன்.

தனது தான் என்ற அகந்தையினால் உள்ளதும் போய் வெறுங்கையுடன் திரும்பிய வாசு, தன்னால் தான் மன்னனால் கிடைக்கவிருந்த உதவி கிடைக்காமல் போய் விட்டது என்று நினைத்து நினைத்து அழுதான்.

## வாரம் ஒரு நாடு



நோ ர் வே

**அமைவிடம்:-**
நோர்வே ஸ்கன்டிநேவியன் தீபகற்பத்தின் மேற்குப்பகுதியில் ஸ்கொஜெர்ரொக்கில் இருந்து தொடங்குகிறது. நோர்வே வடக்கில் ஃபின்லாந்தையும், ரஷ்யாவையும் மிக அருகே கொண்டுள்ளது.

**வரலாறு:-**
நள்ளிரவுச் சூரியோதய நாடு என்று அழைக்கப்படும் நோர்வேயின் 70 சதவீதமான பகுதிகளில் மனிதர்கள் வசிக்க முடியாதவாறு மலைகளும், பனி ஆறுகளும் நிறைந்துள்ளது. டென்மார்க் மன்னன் 1814 இல் நோர்வேயை சுவீடனுடன் சேர்த்த போதிலும், மக்கள் இதற்குச் சம்மதிக்கவில்லை. 1940 இல் ஜெர்மனி இதை ஆக்கிரமித்தது. 1945 இல் சுதந்திரம் பெற்றது. பாராளுமன்றமே அதிகாரபீடம். மன்னருக்கு வீட்டோ அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தலைநகர்-ஒஸ்லோ
பரப்பு- 3,23,895 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை- 43,00,000
மொழி- நோர்வீஜியன்
எழுத்தறிவு-99%
சமயம்- கிறிஸ்தவம்
நாணயம்- குரோணர்
தனிநபர் வருமானம்- 23,120 டொலர்கள்.

**பொருளாதாரம்-**
கோதுமை, பார்லி, ஓட்ஸ் போன்றவை முக்கிய விளைபொருட்கள். மீன் பிடித்தல் முக்கிய வருமானத்தொழில். கைத்தொழில் வளர்ச்சியடைந்துள்ள நாடு.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 29.06.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 146
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 144

பரிசுக்குரியவர்:
செல்வன். எஸ். நிரோஷன்
பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு-4.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| மின்ஹாஜ் மன்சூர். தெஹிகஸ்தலாவ, பலாங்கொட. | எஸ். ஹரிபிரசாத். கோணேஸ்வரா கல்லூரி, திருகோணமலை. |
| செல்வி. கே. காஞ்சனா. அப்பர் டவுன், கலஹா. | பாத்திமா முவஹ்ஹிதா வடக்கு வீதி, புத்தளம். |
| செல்வி. ஜே. மாதவி. தெஹிவளை தமிழ் வித்தியாலயம், தெஹிவளை. | கே. சதீஸ்குமார் தமிழ் மத்திய வித்தியாலயம், வவுனியா. |
| எஸ். சத்தியேந்திரன். புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | முகமட் லாபிர். காலி வீதி, களுத்துறை. |
| கமறூான் ஹுசைன். தவளமண்டியா, பசறை. | எவ். பரூஸா. ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயம், படகொள்ளாதெனிய. |

## வெனிலா

**★ வெனிலா எசென்ஸ் என்றால் என்ன?**
உலக அளவில் மிகவும் புகழ் பெற்ற உணவு வாசனைப் பொருளாகும். உயர்ந்த மலைகளில் வளரும் வெனிலா எனப்படும் தாவரம் ஒன்றின் விதைகளில் இருந்து இந்த வாசனைப் பொருள் தயாரிக்கப் படுகிறது.

**★ இது எப்படிக் கிடைக்கிறது?**
இந்தத் தாவரத்தின் கொடிக்கு சிறு சிறு



வேர்கள் உண்டு. இதன் மூலம் இவை பெரிய மரங்களில் பற்றிப் படரும். இந்தத் தாவரத்தில் அவரை போன்ற . காய்கள் காய்க்கும். இவற்றைப் பறித்துக் காயவைத்து, அவற்றைத் துண்டுகளாக்கி பதப்படுத்தி இன்னும் சில பொருட்களைப் போட்டுக் கொதிக்க வைத்து வடிகட்டுவார்கள். அது தான் வெனிலா எசென்ஸ்.

**★ இது எதற்குப் பயன்படுகிறது?**
கேக், ஐஸ்கிறீம், புடிங், சொக்கலேட் போன்ற இனிப்புக்கள் செய்யப்பயன்படுகிறது.

**★ செயற்கை முறையில் வெனிலா எசென்ஸ் தயாரிக்க முடியுமா?**
தயாரிக்க முடியும். வெனிலா காய்களில் இருந்து எசென்ஸ் எடுப்பது வியாபார ரீதியில் லாபம் தரக்கூடியது அல்ல. அதனால் இப்போது நிறைய எசென்ஸ் செயற்கை முறையிலேயே தயாரிக்கப்படுகிறது.

**★ வெனிலா செடிகளை வளர்க்கும் நாடுகள் எவை?**
மெக்ஸிகோ, மடக்காஸ்கர், இந்தோனேசியா, காமரோஸ் ஆகிய நாடுகளில் இவை அதிகம் வளர்கின்றன.

## நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி



இரண்டு ஆண்டுகள் கஷ்டப்பட்டு உழைத்து யுரேனியத் தாதுவிலிருந்து கண்ணுக்குத் தெரியாத கதிரியக்க அணுவைப் பிரித்தார் மேரிகியூரி என்ற விஞ்ஞானி.

ஒரு நாள் இரவு வீட்டிற்குள் நுழைந்த மேரி கியூரி ஆச்சரியப்பட்டு நின்றார்.

கண்ணாடிக் குடுவையில் யுரேனியத்தில் இருந்து பிரிக்கப்பட்ட பொருள் வைக்கப் பட்டிருந்தது. மின்மினிப் பூச்சிகள் ஆடுவதைப் போல அந்தப் பொருள் பளபளத்தது. அன்றுதான் மேரி கியூரி இருட்டில் ஒளிரும் 'ரேடியத்தை' கண்டுபிடித்தார். அதற்காக அந்த ஆண்டான 1903ம் ஆண்டு பௌதீகத்திற்கான நோபல் பரிசை அவர் பெற்றார். இவர்தான் நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி. மேலும் இவர் இரண்டு விஞ்ஞானிகளுடன் இந்தப் பரிசைப் பகிர்ந்து கொண்டார். ஒருவர் இவரது கணவர் பியரி, இன்னொருவர் ஹென்றி பெக்யூரல்.

## எது தெரியுமா?

1. உலகின் 'சர்க்கரைக் கிண்ணம்' என அழைக்கப்படும் நாடு எது?
2. 'வங்காளத்தின் துயரம்' என அழைக்கப்படும் நதி எது?
3. 'அதிகாலையில் அமைதியாக இருக்கும் நாடு' எது?
4. 'மத்திய தரைக் கடலின் நுழைவாயில்' என அழைக்கப்படுவது எது?
5. 'தீவுக் கண்டம்' என அழைக்கப்படுவது எது?
6. 'முடிவில்லா நகரம்' என அழைக்கப்படுவது எது?
7. 'மஞ்சள் நதி' என அழைக்கப்படுவது எது?
8. 'வெள்ளை யானை நாடு' என அழைக்கப்படுவது எது?

### விடைகள்

1. கியூபா
2. தாமோதர் நதி
3. கொரியா
4. ஜிப்ரால்டர் நீரிணை
5. அவுஸ்திரேலியா
6. ரோம்
7. ஹுவாங்கோ நதி
8. தாய்லாந்து

தொகுப்பு-வி. நாதன்.

## போட்டியில் பிறந்த மாதம்



ஜூலையும், ஒகஸ்ட்டும் அடுத்தடுத்து வரும் மாதங்கள். கி.மு.8ம் ஆண்டில் தான் ஒகஸ்ட் மாதத்திற்கு ஒகஸ்ட் என்று பெயரிடப் பட்டது. முதல் ரோமானியச் சக்கரவர்த்தியான ஒகஸ்டஸ் பெயரால் அமைந்தது. அதற்கு முன்னர் இதன் பெயர் சிக்ஸ்டிலிஸ். ஜூலியஸ் சீஸர் பெயரால் அமைந்த ஜூலை மாதத்தை விட ஒரு நாள் குறைவாக 30 நாட்கள்தான் அப்போது இருந்தன. ஜூலியஸ் சீஸரை விடத் தான் தாழ்ந்தவன் இல்லை என்பதைக் காட்டிக் கொள்ள விரும்பிய ஒகஸ்டஸ், தன் பெயரால் அமைந்த மாதத்தின் நாட்களையும் 31 ஆக்கினார். அதை ஈடு செய்ய பெப்ரவரி மாதத்தின் நாட்களை 28 ஆகக் குறைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

# திகில் 18

**மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமார்**

"சிங்கப்பூரா?" ஜென்னி வியந்தாள். "அதெப்படி சாத்தியம்?"

"ஏன்?"

"இந்த நேரத்தில சிங்கப்பூர்க்கு ஏது ப்ளைட்?"

"அது தவிர....பாஸ்! இருங்க வரேன்" என்றவள் உள்ளே ஓடிப்போய் அம்மாள் அனுமதியுடன்.....போனை எடுத்து முயன்றாள்.

"இந்தியன்- ஏர் லைன்ஸ்? ஏர்-போர்ட்."

"எஸ்."

"அங்கே அம்புஜா இருந்தா கொஞ்சம் கூப்பிடறீங்களா?"

"அம்புஜா ஹியர்" என்றதும் தவிப்பைத் தவிர்த்தாள்.

"ஹாய் ஜென்னி பேசறேன்."

"சொல்லு என்ன உன்னை ஆளையே காணோம்?"

"கொஞ்சம் பிஸி. அபிராமியைத் தெரியுமில்லையா உனக்கு?"

"தெரியுமே! அவளையும் தெரியும். அவள் திமிரைப் பற்றியும் தெரியும். பார்ட்டியில சந்திச்சதோட சரி. எதுக்கு அவளைக் கேட்கிறே?"

"சும்மா ஒரு வழக்கு விஷயமா கேட்கத்தான். நிச்சயம்தானே? அவள் போகல்லையே."

"சர்வ நிச்சயம். அவ்வளவுதானே?"

"ஆமா வைச்சிடு." என்றவள் அம்மாவிடம் கேட்டாள்."நீங்க எப்படி சொல்றீங்க அவ சிங்கப்பூர் போனதாக?"

"என்னைக்குமில்லாத திருநாளா கொஞ்சம் முன்னால் அவளே இறங்கி வந்து- நான் சிங்கப்பூர் போறேன்- வியாபார விஷயமாக, உடம்பைப் பத்திரமா பார்த்துக்கம்மான்னு சொல்லிட்டு இந்த வழியாகத்தான் போனா."

"கவலையே படாதீங்க. திரும்பி வருவாள். அதாவது மாட்டிக்காம இருந்தால் மட்டும்."

"என்ன ஆச்சு? ஏன் என் மகளைத் தேடறீங்க?"

"ஐயாம் ஸாரி. சொல்றதுல எனக்கு ரொம்பவும் வருத்தம் தான். உங்கள் மகள் ஊரில இரண்டு பேரைக் கொலை செய்து இருக்கிறாள்."

"என் மகளா? இருக்காது இருக்கவே இருக்காது?"

"எந்த அம்மாவும் தன் பிள்ளையைப் பற்றிச் சொல்லுகிற வழக்கமான வசனம் தான். உண்மை. போலீஸ் அவங்களை தீவிரமா தேடிட்டிருக்கு."

"என்னென்னமோ சொல்கிறாயே பெண்ணே! என் மகளா? அதுவும் கொலையா? இருக்காது. நான் நம்ப மாட்டேன். நம்பவே மாட்டேன்."

"வேண்டாம் நம்பாதீங்க. நேரம் வருகிறப்பு சொல்றேன். அப்ப நம்பலாம்."

"ஈஸ்வரா. இது என்ன சோதனையடாப்பா?"

"அது சரி. இப்ப நீல அம்பாஸிடரில வந்துட்டுப்போகிறாரே யார் அவர்?"

"அவர் எங்க தூரத்து உறவுக்காரர் போன அசெம்பிளியில எம்.எல்.ஏ.ஆக இருந்து இப்ப இந்த எலக்‌ஷன்ல டெபாசிட் இழந்தவர். சோகத்தைப் புலம்பிட்டுப் போக வந்திருக்கிறார்?"

"அவருக்கும் உங்க அபிராமிக்கும் கொடுக்கல் வாங்கல் உண்டா?"

"புரியல எதைக் கொடுத்து எதை வாங்கறது?"

"காரை சொல்றேன். உங்க மகள் கேட்டால் இவர் தன் காரைத் தருவாரா?"

"சே. சே. அவளுக்கென்ன தலையெழுத்தா இவர் வண்டியில போக? அவளுக்கே சொந்தத்தில வண்டி இருக்கே. ஸாரி வண்டிங்க இருக்கே." என்றார் பன்மையில்.

"சரிம்மா வரேன்."

"இரும்மா. என்னென்னமோ சொல்லிட்டு நீ பாட்டுக்கு போறேன்னா என்ன அர்த்தம்?" கேட்டார். "என்ன தான் நடந்தது?"

"அதைத் தெரிஞ்சுக்கத்தான் அலையறோம். தெரியவரட்டும், முதல் ஆளா உங்களுக்குச் சொல்றேன். ஆனாலும் உங்க பொண்ணு நல்லவள் இல்லேங்கிற வரைக்கும் தெரியுது?"

"எப்படிச் சொல்றே?"

"அடுத்தவள் ஆண்பிள்ளைன்னு தெரிஞ்சும் கூட யதார்த்தமா பழகியே ஓரம் கட்ட பார்க்கிறாளாமே."

"அதெல்லாம் வெறும் பேச்சு. நம்ப மாட்டேன்."

"ஆமாம். அதென்ன அவளுக்கு மட்டும் கல்யாணமே பண்ணாமவிட்டு வைச்சிருக்கீங்க?"

"எப்ப அதைப்பற்றிக் கேட்டாலும், இப்ப பிஸி, அடுத்த வருஷம் பார்க்கலாம்னு சொல்கிறாளே? நான் என்ன பண்ணட்டும்?"

"அங்கேதான் ஏதோ தப்பு நடந்திருக்குன்னு நினைக்கிறேன். சரி உங்க மகள் தானே ராஜேஸ்வரி, அவளைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?"

"குடும்பமெனும் கூடத்தில ஏத்திவைச்ச விளக்காக ஆயிட்டா, அவளைப் பற்றி என்ன?"

"என்ன ஒண்ணுமில்லையே." கிளம்பினாள் ஜென்னி "வரேன்" என்றவள்-

அந்தம்மாள் "இருடி பெண்ணே. இரு." என்று கூப்பிடக் கூப்பிட வெளியே ஓடி வந்து விட்டாள்.

"எங்கே போயிட்டே ஜென்னி? எவ்வளவு நேரம்?"

"விசாரிச்சேன். இவள் சிங்கப்பூரும் போகல்ல. பெரம்பூரும் போகல்ல."

"இப்ப என்ன செய்யலாம்?"

"இவளைத்தான் பார்க்க முடியல. இவளோட உடன்பிறப்பையாவது பார்த்துட்டு வருவோம் வாங்க."

"யாரைச் சொல்றே?"

"அந்த ராஜேஸ்வரியைத்தான்."

"அவளை எதுக்கு இப்ப வெட்டியாகப் போய்ப் பாக்கணும்? வேற எவ்வளவோ வேலை இருக்கே?"

"என்னமோ எனக்குப் பார்க்கணும் போல ஆசை வருது. அதை ஏன் பாஸ் தடுக்குறீங்க?"

"நோ. அப்புறமாகப் போகலாம் இரு. நான் ஏற்கனவே என்ன செய்றதுன்னு புரியாம திணறிக்கிட்டிருக்கேன்."

"என்ன ஆச்சு?"

"இந்த வரதராஜனைக் கூட்டிட்டு வந்தது எதுக்கு? அன்னைக்கு அந்த பார்ட்டியில சிகரெட் லைட்டரை எடுத்தது இந்தப் பெண் தானான்னு கேட்கத்தானே?"

"ஆமாம்."

"அது முடியாம் இந்த இடத்தைவிட்டு அங்குலம்கூட நகரக்கூடாது."

"அவள் தான் இல்லையாமே."

"நீ தானே சொன்னாய் அவள் சிங்கப்பூர் போகல்லைன்னு."

"ஆமாம்."

"அப்ப எப்படியும் திரும்பி இங்கே வரத்தானே வேணும்? இருந்து பார்த்துட்டே போயிட்டால் போச்சு. என்ன இப்ப?"

"அது சரி."

"அது தான் சரி." என்றார்கள். திருக்குமரனும், வரதராஜனும் ஒரே குரலில்.

"போச்சுடா. நீங்களும் சேர்ந்துட்டீங்களா? அப்ப வேற வழி இல்லைதான்."

காத்திருந்தார்கள்.

**சோ**ர்வுடன் தனது பங்களாவுக்குள்ளே ஜோதி போனபோது-

அண்ணி ராஜேஸ்வரி போனில் உரக்கப் பேசுவது கேட்டது.

"டில்லிக்கா? நானா? உடனே வரச் சொன்னா எப்படிங்க?"

போன் வாயைப் பொத்திக் கொண்டு இவளிடம் சொன்னாள். "உங்கண்ணா."

ஜோதியின் சுவாரஸ்யம் வடிந்தது.

"துரோகம் பண்ணும் கணவனோட போனில் என்ன கொஞ்சல்?" என்று கேட்க நினைத்தாள் கேட்காமலே இருந்தாள்.

"பேசறியா?" என்று அண்ணி கேட்ட போது கூட-

"வேற வேலையில்லே. நீயே பேசு" என்று கூறி விட்டு உள்ளே போய்விட்டாள்.

"அம்மா கூட இல்லையே வெளியே போயிருக்கிறாங்க. ஏதோ அரிமா சங்கம் லஞ்சுன்னு சொன்னாங்க. அவங்களைக் கேட்காம அவங்ககிட்ட ஒரு வார்த்தை சொல்லிக்காம எப்படிங்க வர்றது? அப்புறம் இதுவரை இல்லாத மாமியார் மருமகள் சண்டை அதிகமாயிடும். சரி எந்த ஹோட்டல்ல லஞ்ச்ன்னு கேட்டு விசாரிச்சு போனிலேயே அனுமதி வாங்கி சாயங்கால ப்ளைட்டிலேயே கிளம்பி வரேன். ஏரோடிரோம் வந்துடுவீங்கதானே? ராத்திரி நேரத்தில என்னை அங்கே தவிக்க விட்டுடாதீங்க. ஜோதி இருக்கா பேசறீங்களா?"

சட்டென்று அறையிலிருந்து வெளிப்பட்ட ஜோதி கோபமாக "அவ இல்லே. வெளியே போயிட்டா" என்று சொல்ல-

"அவ இல்லே போலிருக்கு. நான் சொல்லிட்டே வரேன். வச்சிடவா?"

போனை வைத்துவிட்டு உற்சாகமாகச் சொன்னாள் "உங்க அண்ணா பேசினார்." என்றாள் பூரிப்பாக.

"உம்."

"என்னை டெல்லிக்கு வரச் சொல்கிறார் பாஸ் போர்ட்டோட."

"பாஸ்போர்ட்?"

"ஆமாம். அங்கேர்ந்து பாங்காக் போய் மலேஷியா வழியாக சிங்கப்பூர் போய் மெட்ராஸ் திரும்பப்போறோம். வெளிநாட்டுக்குப் போகணும் என்கிறது நீண்ட ஆசை. இப்பத்தான் பலிக்கிறது."

"சரி"

"உங்கம்மா எங்கே இருப்பாங்க தெரியுமா?"

"கன்னிமாராவில கமிட்டி மீட்டிங் வர நேரமாயிடும்."

"அவங்ககிட்ட சொல்லிக்காம எப்படி போறது?"

"அவ்வளவுதானே? நான் சொல்லிக்கிறேன். உன் பிள்ளைக்கு திடீர்னு தேன்நிலவு ஆசை வந்துடுச்சு. அவசரமா கூப்பிட்டுச் சொல்லி, உடனே அண்ணி புறப்பட்டு டெல்லி போயிட்டாங்கன்னு சொல்லிக்கிறேன். நீ கிளம்பு."

"அப்படிங்கிறியா? தப்பா நினைச்சுக்க மாட்டாங்களே?"

"எல்லாம் சொல்ற மாதிரி நான் சொல்லிக்கிறேன். நீ கிளம்பு."

"சரி உன்மேலே பொறுப்பை சுமத்திட்டு கிளம்பறேன்."

"கவலையே படாதே. திரும்பறச்ச..." கண் அடித்தாள். "வயத்தை நிரப்பிட்டு வா" என்றவள் கையால் வயிற்றை மேடாக்கிக் காட்டிய விதத்துக்கு-

"ச்சீய்" என்றாள் கூச்சமாக. "நீயும் ஆபீஸ் போகல்ல?"

"போயிட்டு வந்துட்டேன். நான் தூங்கப்போறேன். ஸோ, மதியம் ஆபிஸ் வரமாட்டேன்."

"சரி. நான் ஆபிஸுக்குப் போய் கொஞ்சம் கேஷ் வாங்கிட்டுப் போறேன். அக்கவுண்டண்டுக்குப் போன்ல சொல்லிடேன்."

"ஏன்? உனக்குத் தர மாட்டேன்னு சொல்லிடுவானா? போ. போய் வாங்கிக்க."

"சரி வரேன்." என்றவள் கிளம்பிப் போன பத்தாவது நிமிஷம் டெலிபோன் ஒலிக்கவே எடுத்தாள் ஜோதி.

போனில வந்த செய்திக்கு மிகவும் வியந்து போனாள்.

"**நே**ரம் வீண்" ஜென்னி சொன்னாள் "இந்த பங்களாவுக்கு காவலிருக்கிறதுதானா நம்ம வேலை?"

"இல்லே ஜென்னி என் மனசில பட்சி சொல்லுது அவள் இப்ப நிச்சயமாகத் திரும்பி வருவாள்தான்."

"நீங்களும் உங்க மனப் பட்சியும்." என்றவள் கையமர்த்திக் கேட்டாள். "இப்ப நாம எதுக்காக நிற்கிறோம்? காத்திருக்கோம்?"

"அந்த அபிராமி வரட்டும்னுதான்."

"எதுக்காக?"

"என்ன கேள்வி? இந்த வரதராஜன் பார்ட்டியில் பார்த்த பெண் இவள் தானான்னு கேட்டுத் தெரிஞ்சுக்கத்தான்."

"இதுக்கு அவள் வந்தால்தானா? அவள் போட்டோவைப் பார்த்தா அடையாளம் சொல்லமாட்டானா என்ன?"

"சொல்லுவேனே!" என்றான் வரதராஜன்.

"அப்புறமென்ன பாஸ்?" ஜென்னி சொன்னாள். "உள்ளே போய் அந்த அம்மாளைக் கேட்டு அந்த அபிராமியோட படத்தைக் காட்டச் சொல்லிடலாம். வாங்க."

உள்ளே கும்பலாகப் போனார்கள்.

"அவள் படம்தானே?" அம்மையார் சொன்னார். "மாடியில அவள் ரூமில பெரிய எட்டடிக்கு நாலடி ப்ளோ-அப் படமே இருக்கு."

மாடி ஏறி அறைக்கதவைத் திறந்து போய் படத்தைப் பார்த்தார்கள்.

"இவள் தானே?"

உற்று உற்றுப் பார்த்தவன் தயக்கமாக ஆனால் உறுதியாகச் சொன்னான். "இல்லே, பார்ட்டியில நான் பார்த்தது இந்தப் பெண் இல்லே."

(தொடர்ந்து வரும்).

**"....உன் பிள்ளைக்கு திடீர்னு தேன்நிலவு ஆசை வந்துடுச்சு......"**

**".........திரும்பறச்ச வயத்தை நிரப்பிட்டு வா"**

**என்றவள் கையால் வயிற்றை மேடாக்கிக் காட்டினாள்.**



**"உங்கள் மகள் ஊரில இரண்டு பேரைக் கொலை செய்து இருக்கிறாள்."**

அன்றைக்கு பார்ட்டியில-

"நீயும் வந்திருந்தாயா என்ன?"

"நீயும்னா? நீ கூட வந்தியா என்ன?"

"நான் வரல்ல. அவ இன்னைக்கு சிங்கப்பூர் போயிட்டதாக சொல்றாங்க."

"இன்னைக்கா? இருக்க முடியாதே."


"எப்படி அவ்வளவு நிச்சயமா சொல்றே?"

"ஏதோ நடிகை கலைவிழா நடத்தப் போகிறதாகச் சொல்லி போன வாரமே கிட்டத்தட்ட முழு ஃப்ளேனையே ரிசர்வ் செய்து இருந்தது. சில சீட்டுகள் தான் அவுட்ஸைடர்ஸுக்கு கொடுத்தோம்."


"ஒரு வேளை கான்ஸலான டிக்கெட் எதையாவது?"

"வாய்ப்பேயில்லை. நான் இங்கே தானே இருக்கேன், அவளை நான் பார்க்கவேயில்லையே. அன்னைக்கு

## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: எஸ். பாலகுமார்.
வயது: 20
முகவரி: பெர்ணாந்து மாவத்தை, இகல கொட்டாரமுல்லை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, சினிமா.



பெயர்: கே. சகுந்தலா.
முகவரி: இல.132, தங்க நகர், கிளிவெட்டி.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.




பெயர்: ரி. மனோகரன்.
வயது: 26
முகவரி: KASTANEIEN RAIN-1, 6440 BRUNNEN, SWITZERLAND.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சினிமா.



பெயர்: அனஸ்.
வயது: 20
முகவரி: 268/1, கேகாலை வீதி, பொல்கஹவலை.
பொழுது போக்கு: வெளிநாட்டு நாணயங்கள் சேகரித்தல்.



பெயர்: ஏ. ஜலீலா.
முகவரி: 542, அல்-சாஹிரா பாடசாலை வீதி, அக்கரைப்பற்று-1.
பொழுது போக்கு: வானொலி, தையல்.



பெயர்: எம். காலிம்.
வயது: 24
முகவரி: BLOCK NO- 4, STREET NO- 42, HOUSE NO-3, AL-ALFAIHA, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: எம். மபாஸ்.
வயது: 17
முகவரி: 2 பி, தலாபிட்டிய, அழுங்கை, காலி.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, நாவல்.

பெயர்: எம். தாலிப்.
வயது: 26
முகவரி: 89, குமாரி முல்லை, பூகொட.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: கே. மணி.
வயது: 19
முகவரி: 58 தேர்ஸ்டன் வீதி, கொழும்பு-7.
பொழுது போக்கு: வானொலி, கிரிக்கெட்.

பெயர்: எஸ். பாக்கியரட்ணம்.
வயது: 17
முகவரி: டிம்புள்ள மேற்பிரிவு, பத்தனை.
பொழுது போக்கு: கிரிக்கெட், கதைப்புத்தகம்.

பெயர்: எம். துஷாந்தன்.
வயது: 23
முகவரி: 32 WELBECK RD, WEST HARROW, MIDDX, HA2 ORW, LONDON.
பொழுது போக்கு: சினிமா, பத்திரிகை, புத்தகம்.

பெயர்: ஆர். இஸ்ஸதீன்.
வயது: 20
முகவரி: தக்குவா நகர், 1ம் வட்டாரம், புல்மோட்டை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

www.padippakam.com

அவன் அமைதியாகச் சிரித்துக் கொண்டே, முகத்தைக் கோட்டுத் துணியில் துடைத்துக் கொண்டான்.

"சரி. கடப்பாரையைக் கொண்டு தாக்கினாலும், மிகயீல் மாமாவை கொஞ்சம்கூட அசைக்க முடியாது. அவன் சொன்னான்: 'இக்நாத்! சீக்கிரமே நகருக்கு ஓடிப்போய்விடு, அந்தப் பெரிய மனுஷியை உனக்கு ஞாபகமிருக்கிறதா?' என்று சொல்லிக் கொண்டே, ஒரு சீட்டு எழுதினான். 'இதோ, இதை அவளிடம் கொண்டு போய்க் கொடு' என்றான். எனவே நான் புதர்களின் வழியாக ஊர்ந்து ஒளிந்து வந்தேன். அவர்கள் வரும் சத்தம்கூட எனக்குக் கேட்டது. அந்தப் பிசாசுகள் நாலா திசைகளிலிருந்தும் சுற்றி வளைத்துப் பதுங்கி வந்தார்கள். எங்கள் தார் எண்ணெய்த் தொழிற்சாலையையே சூழ்ந்து வளைத்துக் கொண்டார்கள். நான் புதர்களுக்குள்ளேயே பதுங்கிப் பம்மிக் கிடந்தேன். அவர்கள் என்னைக் கடந்து அப்பால் சென்றார்கள். உடனே நான் எழுந்து வெளியே வந்து என்னால் ஆனமட்டும் ஓட்டம் பிடித்தேன். இரண்டு நாள் இரவிலும், ஒரு நாள் பகலிலுமாக நான் நிற்காமல் நடந்து வந்திருக்கிறேன்."

## அடித்தார்கள்! உதைத்தார்கள்! உடம்பெல்லாம் இரத்தம் காணும் வரையிலும் உதைத்தார்கள். அவன் படுமோசமான நிலையில்தான் இருந்தான்.



# தாய் 81

## மக்சீம் கார்க்கி

தான் செய்த காரியத்தை எண்ணி அவனே திருப்திப் பட்டுக்கொள்வது தெளிவாகத் தெரிந்தது. அவனது கபில நிறக் கண்களில் களிப்புத்துள்ளாடியது; பெரிய சிவந்த உதடுகள் துடிதுடித்துக் கொண்டிருந்தன.

"சரி. நான் ஒரே நிமிஷத்தில் உனக்குத் தேநீர் தயார் செய்கிறேன்" என்று கூறிக் கொண்டே தேநீர் பத்திரத்தின் அருகே சென்றாள் தாய்.

"இதோ, அந்தச் சீட்டு."

அவன் மிகுந்த சிரமத்தோடு முணுமுணுத்துக் கொண்டும் வேதனையால் முகத்தை நெரித்துக் கொண்டும் தன்காலையெடுத்து பெஞ்சின் மீது போட்டான்.

நிகலாய் வாசல் நடையில் வந்து நின்றான்.

"வணக்கம், தோழா!" என்று கண்களைச் சுருக்கி விழித்தவாறே சொன்னான் அவன். "இருங்கள். நான் உங்களுக்கு உதவுகிறேன்."

அவன் இக்நாதின் காலருகே குனிந்து, காலுறைகளுக்குப் பதிலாக, காலில் சுற்றப்பட்டிருந்த அழுக்கடைந்த ஈரத் துணிகளை அவிழ்த்துவிட்டான்.

"வேண்டாம்" என்று வியப்போடு கூறியவாறே அந்த வாலிபன் தன் காலை இழுத்துக்கொண்டே, தாயை அதிசயத்தோடு பார்த்தான்.

"அவனது கால்களை, கொஞ்சம் ஓட்கா மது தடவித்தேய்த்து விட வேண்டும்" என்று அவன் தன்னைப் பார்த்ததைக் கவனிக்காமலே கூறினாள் தாய்.

"ஆமாம்!" என்றான் நிகலாய்.

கலக்கத்தால், கனைத்து இருமிக் கொண்டான் இக்நாத்.

நிகலாய் அந்தச் சீட்டை எடுத்தான்; கசங்கியிருந்த அந்தச் சீட்டை நீட்டி நிமிர்த்தி, தன் கண்களுக்கு அருகே கொண்டுபோய் அதை வாசித்தான்:

"அம்மா! எங்கள் இயக்கத்தை நீ கவனிக்காமல் விட்டு விடாதே. உன்னோடு வந்தாளே, அந்த நெட்டைப் பெண் அவளிடம் சொல்லி, எங்களது காரியங்களைப் பற்றி இன்னும் அதிகமாக எழுதச் சொல். போய் வருகிறேன். ரீபின்."

நிகலாய் சீட்டை வைத்துக் கொண்டிருந்த கையை மெதுவாகத் தளர விட்டான்.

"எவ்வளவு மகத்தானது!" என்று அவன் முணுமுணுத்தான்.

தனது காலின் அழுக்கடைந்த விரல்களை ஜாக்கிரதையோடு தடவிப் பிடித்துக் கொடுத்தவாறே அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான் இக்நாத். தாய் தன் கண்ணில் பொங்கும் கண்ணீரை மறைக்க முயன்று கொண்டே, ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவந்து, அவனது காலையெடுப்பதற்காகக் கீழே குனிந்தாள்.

"ஊஹூம், நீங்கள் செய்ய வேண்டாம்" என்று அவன் பயத்தோடு கத்திக் கொண்டு, காலை பெஞ்சுக்கடியில் இழுத்துக் கொண்டான்.

"நீ காலைக் கொடு, சீக்கிரம் வேலை முடியட்டும்."

"நான் கொஞ்சம் ஓட்கா கொண்டு வருகிறேன்" என்றான் நிகலாய்.

அந்தப் பையன் தன் காலை மேலும் உள்ளிழுத்துக்கொண்டான்.

"என்ன நினைத்துக் கொண்டீர்கள்? நான் என்ன ஆஸ்பத்திரியிலா இருக்கிறேன்?" என்று முணுமுணுத்தான்.

தாய் அவனது அடுத்த காலில் சுற்றப்பட்ட துணிகளை அவிழ்த்தெறிந்தாள்.

இக்நாத் பலமாகத் தும்மிக்கொண்டே, தன் கழுத்தை வளைத்து வேண்டா வெறுப்பாகத் தாயைக் குனிந்து பார்த்தான்.

"மிகயீல் இவானவிச்சை அவர்கள் அடித்தார்கள்" என்று நடுநடுங்கும் குரலில் சொன்னாள் தாய்.

"உண்மையாகவா?" என்று அமைதியோடு வியந்து கேட்டான் அந்த வாலிபன்.

"ஆமாம். நிகோல்ஸ்கிக்குக் கொண்டு வரும்போதே அவன் படுமோசமான நிலையில்தான் இருந்தான். அங்கே அந்தப் பொலிஸ் தலைவனும், பொலிஸ் ஸார்ஜெண்டும் அவனை அடித்தார்கள்! முகத்தில் அடித்தார்கள்! உதைத்தார்கள்! உடம்பெல்லாம் இரத்தம் காணும் வரையிலும் உதைத்தார்கள்."

"அடிப்பது எப்படி என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சரி, இருக்கட்டும்" என்று அந்த வாலிபன் முகத்தைச் சுழித்துக் கொண்டே கூறினான். அவனது தோள்கள் அசைந்து நடுங்கின. "அவர்களைக் கண்டால்–ஆயிரம் பேய்களைக் கண்ட மாதிரி நான் பயப்படுகிறேன். முஜீக்குகளும் அவனை அடித்தார்களா?"

"பொலிஸ் தலைவரின் உத்தரவின்பேரில் ஒருவன் மட்டுமே அடித்தான். ஆனால் மற்றவர்கள் ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் அவன் பக்கமாகக் கூடச் சேர்ந்தார்கள். அவனை அடிப்பதற்கு அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்று கூச்சலிட்டார்கள்."

"ம், அப்படியா? யார் யார் எந்தப் பக்கம் இருக்கிறார்கள், ஏன் இருக்கிறார்கள் என்பதை முஜீக்குகள் உணரத் தொடங்கி விட்டார்கள்."

"அவர்கள் மத்தியிலே சில புத்திசாலிகளும் இருக்கிறார்கள்."

"புத்திசாலிகள் எங்கும்தான் இருக்கிறார்கள். தேவை தான் அவர்களை உருவாக்குகிறது. அவர்கள் அவரவர் இடத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களைக் கண்டுபிடிப்பதுதான் சிரமமாயிருக்கிறது."

நிகலாய் ஒரு பாட்டில் ஓட்கா மதுவைக் கொண்டுவந்தான்; தேநீர் அடுப்பில் கொஞ்சம் கரி அள்ளிப்போட்டான். பிறகு ஒன்றுமே பேசாமல் வெளியே சென்றான். இக்நாத் வாய் பேசாது அவனையே கவனித்தான்.

"இந்த கனவான் யார்–டாக்டரா?" என்று நிகலாய் வெளியே போன பிறகு தாயைப் பார்த்துக் கேட்டான் அவன்.

"நமக்குள்ளே கனவான்களே கிடையாது; இங்கே நாம் எல்லோரும் தோழர்கள்தான்.

"எனக்கு விசித்திரமாயிருக்கிறது" என்று சொன்னான் இக்நாத்; அவனது புன்னகையில் அவனது சந்தேகமும் குழப்பமும் தெரிந்தன.

"எது விசித்திரம்?"

"பொதுவாக எல்லாம்தான். ஒரு புறத்தில் சிலர் மூக்கில் இரத்தக் கோறை காணும்படி உதைக்கிறார்கள்; இன்னொரு புறத்தில் சிலர் காலைக் கழுவிச் சுத்தம் செய்யவும் வருகிறார்கள். இந்த இரண்டுக்கும் மத்தியில் வேறு யாராவது இருக்கிறார்களா?"

கதவு திறந்தது; நிகலாய் பேசினான்:

"இரண்டுக்கும் மத்தியில் வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்கள் முகத்திலே குத்துபவர்களின் கரங்களை நக்கிக் கொடுக்கிறார்கள்; இரத்தம் பொங்கி வழியும் முகங்களைக் கொண்ட மனிதர்களின் உதிரத்தை உறிஞ்சுகிறார்கள். அவர்கள்தாள் மத்தியில் இருக்கிறார்கள்!"

இக்நாத் அவனை மரியாதையோடு பார்த்தான்.

"உண்மையைத் தொட்டுவிட்ட மாதிரி இருக்கிறது" என்று ஒரு கணம் கழித்து, சொன்னான் அவன்.

அந்த வாலிபன் எழுந்து, கொஞ்ச தூரம் நடந்தான்.

"புதுக்கால்கள் மாதிரியாகிவிட்டன. ரொம்ப நன்றி" என்றான் அவன்.

பிறகு அவர்கள் சாப்பாட்டு அறைக்குள் தேநீர் பருகச் சென்றார்கள். உள்ளத்தைத் தொடும் ஆழ்ந்த குரலில் இக்நாத் தன் வாழ்க்கையைப் பற்றி அவர்களுக்குச் சொல்லத் தொடங்கினான்.

"நான்தான் நமது பத்திரிகையை விநியோகம் செய்வது. நடந்து திரிவதில் நான்தான் சளைக்காதவன்."

"கிராமப்புறத்தில் நம் பத்திரிகையை நிறையப் பேர் வாசிக்கிறார்களா?" என்று கேட்டான் நிகலாய்.

"படித்தவர்கள் எல்லாம்; அவர்கள் பணக்காரராயிருந்தாலுங்கூட, வாசிக்கிறார்கள். ஆனால் பணக்காரர்கள் அதை நேராக நம்மிடமிருந்து வாங்குவதில்லை... விவசாயிகள் பணக்காரர்களின் நிலங்களை எடுத்துக் கொள்ளப் போகிறார்கள் என்பதும், அப்பொழுது அந்த நிலத்தை நிலச்சுவான்தாரர்களிடமிருந்து பெற இரத்தத்தைச் சிந்தவும் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரிந்த விஷயம்தானே. பண்ணையார்களின் நிலத்தைப் பிடுங்கி, அவற்றைப் பங்கிட்டு பண்ணையாளர்களும் பண்ணையடிமைகளும் இல்லாதவாறு செய்யப்போகிறார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியத்தான் செய்யும். பின் எதற்காக அவர்களோடு சண்டையிட்டுக் கொள்ள வேண்டும்?"

அவன் மனம் புண்பட்டுப்போனது மாதிரி தோன்றியது. அவன் நிகலாயை அவநம்பிக்கையோடும் எதையோ கேட்கும் பாவனையோடும் பார்த்தான். நிகலாய் புன்னகை புரிந்தான்; எதுவும் பேசவில்லை.

"இந்த உலகம் பூராவையுமே நாம் இன்று எதிர்த்துப் போராடி, எல்லாவற்றையும் அடக்கியாள முடிந்தாலும், நாளைக்கு மீண்டும் உலகமெங்கும் ஒரு புறத்தில் பணக்காரரும் இன்னொருபுறத்தில் ஏழைகளும் உற்பத்தியாகிவிடுவார்கள்–அப்புறம் இந்தப் போராட்டத்துக்கு என்ன அர்த்தம்? போதும். உங்களுக்கு ரொம்ப நன்றி. நீங்கள் எங்களை முட்டாளாக்க முடியாது–செல்வம் என்பது காய்ந்து போன மணலைப் போலத்தான். அது ஓரிடத்தில் கிடக்காது. எல்லாத் திசைகளிலும் வாரியடித்துச் சிதறும். வேண்டாம். எங்களுக்கு அது வேண்டவே வேண்டாம்!"

"அதை நினைத்து நீ ஒன்றும் கோபவெறி கொள்ளாதே" என்று கூறிச் சிரித்தாள் தாய்.

"எனக்கு இருக்கிற கவலையெல்லாம் ஒன்றே ஒன்றுதான்; ரீபின் கைதானதைப் பற்றிய துண்டுப் பிரசுரத்தை எப்படிச் சீக்கிரமே ஜனங்களிடம் பரப்புவது?" என்று யோசித்தவாறு கேட்டான் நிகலாய்.

இக்நாத் உஷாராகி நிமிர்ந்தான்.

"அப்படி ஒரு பிரசுரம் இருக்கிறதா?" என்று கேட்டான்.

"ஆமாம்."

"அதை என்னிடம் கொடுங்கள். நான் கொண்டு போகிறேன்" என்று தன் கைகளைப் பிசைந்துகொண்டே சொன்னான் அந்த வாலிபன்.

அவனைப் பார்க்காமலேயே தாய் அமைதியாகச் சிரித்துக் கொண்டாள்.

"ஆனால், நீ களைத்து இருக்கிறாய். மேலும் நீ பயந்து கொண்டிருப்பதாக வேறு சொன்னாய்" என்றாள் அவள்.

இக்நாத் தனது அகன்ற கையால் தனது சுருட்டைத் தலை முடியைத் தடவி விட்டுக்கொண்டு, நேரடியாகச் சொன்னான்:

"பயம் வேறு, சேவை வேறு. எதை எண்ணிச் சிரிக்கிறீர்கள்! நீங்கள் ஓர் அற்புத ஆசாமிதான்!"

"அட, என் செல்லக் குழந்தை!" என்று தன்னையுமறியாமல் கூறினாள் தாய். தன் மனத்தில் எழுந்த மகிழ்ச்சியை வெளிக் காட்டாதிருக்க முயன்றாள்.

"ஆமாம், குழந்தை!" அவன் வெட்கத்தோடு தனக்குள் முனகிக் கொண்டான்.

"நீங்கள் ஒன்றும் அங்கு திரும்பிப் போகவேண்டாம்" என்று கண்களை சுருக்கி அவனை அன்போடு பார்த்தவாறே கூறினான் நிகலாய்.

"ஏன் கூடாது? நான் எங்கே போகிறேன்?" என்று எரிச்சலோடு கேட்டான் இக்நாத்.

"பிரசுரங்களை வேறு யாராவது கொண்டுபோகட்டும். போகிற ஆளிடம் அவன் எப்படியெப்படிப் போக வேண்டும், வரவேண்டும் என்பனவற்றுக்கு மாத்திரம் விவரம் சொல்லிக் கொடுங்கள். அது போதும். சரிதானே?"

"சரி" என்று அதிருப்தியோடு சொல்லிக்கொண்டான் இக்நாத்.

"உங்களுக்கு ஒரு புது பாஸ்போர்ட் வாங்கி, காட்டுக் காவலன் வேலை வாங் கித் தருகிறோம்."

"சரி. அப்படி வேலைபார்க்கும் போது முஜீக்குகள் வந்து விறகையோ வேறு எதையுமோ திருடிக்கொண்டு போனால் நான் என்ன செய்வது? அவர்களைப் பிடித்துக் கட்டி வைத்து உதைப்பதா? அந்த வேலை எனக்கு ஒத்து வராது."

தாய் சிரித்தாள். நிகலாயும் சிரித்தான். அவர்களது சிரிப்பு அந்த இளைஞனின் மனத்தைக் குத்தியது; நிலை கொள்ளாமல் தவிக்கச் செய்தது.

"கவலைப்படாதே. எந்த முஜீக்கையும் கட்டிவைக்க வேண்டியிராது," என்று தேறுதல் கூறினான் நிகலாய். "என் வார்த்தையையும் நம்பு."

"ரொம்பச் சரி. அப்படியானால் சரிதான்" என்று மகிழ்ச்சி நிறைந்த புன்னகையோடு கூறினான் இக்நாத்.

"ஆனால், எனக்குத் தொழிற்சாலை ஒன்றில் வேலை கிடைத்தால் நல்லது. மற்றவர்களை விட, தொழிற்சாலை வேலைக்காரர்கள் புத்திசாலிகளாயிருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்."

தாய் மேஜையை விட்டு, ஜன்னலை நோக்கி நடந்தாள்.

"வாழ்க்கைதான் எத்தனை விசித்திரமாயிருக்கிறது!" என்று சிந்தித்தாள் அவள். "ஒரே நாளில் ஐந்து தடவை அழுகிறோம்; ஐந்து தடவை சிரிக்கிறோம். சரி. இக்நாத், நீ பேசி முடித்தாயிற்றா? தூங்குவதற்கு நேரமாகி விட்டது."

"எனக்குத் தூக்கம் வரவில்லை."

"போ போ. தூங்கு தூங்கு."

"நீங்கள் ரொம்பக் கண்டிப்பானவர், இல்லையா? சரி. நான் போகிறேன். நீங்கள் கொடுத்த தேநீருக்கு, ரொம்ப நன்றி....அன்புக்கும் தான்......"

(தொடர்ந்து வரும்)

---

# “அப்பா அப்படித்தான்”

## குமுதினி.அ.பதுளை

அவளுக்கு அவர் என்றும் புதிர்தான். எந்தக் கோணத்தில் அணுகுவது என்று புரியாத புதிர். ஒவ்வொரு கோணத்திலும் புதுப்புது அர்த்தங்களை வைத்திருக்கும் புதிர். அப்பாக்கள் இப்படி இருக்க முடியுமா? தன்னை ஒரு அப்பாவாக உருவகப்படுத்திப் பார்ப்பாள். நிச்சயம் அவள் அப்படி இருக்க மாட்டாள் என்ற ஒரு சிறு நிம்மதியோடு கற்பனையை நிறுத்துவாள்.

அவளுடைய அம்மா அப்பாவுக்கு நேர் எதிர். ஒரு உணர்ச்சிப் பிழம்பு. தன் மகளின் ஒவ்வொரு அசைவையும் கண்களில் நிரப்பிக் கொண்டால்தான் அவளுக்கு நிம்மதி. பாடசாலையில், பாதையில், கோயிலில் என்று நடந்த சம்பவங்களை சுவாரஸ்யமாக அம்மாவிடம் அளக்கலாம். ஒவ்வொரு சம்பவத்தை விபரிக்கும் போதும் மிக உன்னிப்பாக கவனிப்பாள். அந்தச் சம்பவங்களைப் பற்றிக் கேள்வி கேட்பாள். மகளுக்கு உற்சாகம் பீறிடும். அடுத்த சம்பவத்தையும் மிக உற்சாகத்தோடு விளக்க ஆரம்பிப்பாள். நகைச்சுவையான இடங்களில் ஒரு சினேகிதியின் நெருக்கத்தோடு சிரிப்பாள். கவலையான இடங்களில் தான் கவலைப்படுவதோடு உலக நடத்தையை மிக ஆழமாக மகளுக்கு விளக்குவாள். தன் மகளின் புத்திசாதுர்யத்தில் அம்மாவுக்கு மிகுந்த பெருமை. அவளுக்கும் தன் அம்மாவைப் பற்றி மிகுந்த பெருமைதான். தன் ஒவ்வொரு சிந்தனைப் போக்கையும், இதயத்தில் எழும் எண்ண அலைகளையும் புரிந்து கொள்ளும் அம்மாமார் வேறு எந்த சிநேகிதிக்கும் இருப்பதாக அவளுக்கு ஒப்புக்கொள்ள முடியாது.

ஆனால் அப்பா? தாயும் மகளும் சுவாரஸ்யமாக சம்பவங்களை அலசி அராயும் போது பக்கத்தில்தான் இருப்பார். ஆனால் அவரது சிந்தனையும், எண்ணங்களும் வேறெங்கோ இருக்கும். கையில் இருக்கும் பத்திரிகையில் ஆழ்ந்திருப்பார். அதே பத்திரிகையில் இருக்கும் கதையை தாயும், மகளும் விவாதிக்கும் போது கூட, அவரது கவனம் பத்திரிகையை விட்டு சற்றும் நகராது. "இவளுக்கு தலைமுடி நல்லா நீண்டிருக்கென்ன?" என்றோ அல்லது "இந்த சேலை கலர் இவளுக்கு நல்லாயிருக்கு" என்றோ தாய் தகப்பனைப் பார்த்துக் கேட்கும் போது மகள் தன் கீழ்க்கண்ணால் தந்தையை ஆராய்வாள். அவரோ "ஓம் ஓம்" என்றுவிட்டு எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் போய் விடுவார். ஆனால் அந்த மாற்றத்தையோ, பொருத்தத்தையோ அவர் கவனித்திருப்பாரா என்று அவளுக்கு சந்தேகம்தான். அவளின் முகத்தில் இருந்து சந்தோஷத்தையோ, துக்கத்தையோ கோபத்தையோ அவளுக்கு பிரித்தறிந்து கொள்ள முடியாது. அவளுக்கு அவர் புரியாத புதிர்தான்.



அன்று அப்பாவின் பக்கத்து உறவு முறைக்காரர்கள் வீட்டுக்கு வந்திருந்தார்கள். வீடு ஒரே கலகலப்பு. இரண்டு மூன்று நாட்களுக்கு தங்கிப் போவதற்கு ஏற்பாடு. கேட்கவா வேண்டும் கலகலப்பிற்கு?

வந்தவர்கள் சும்மாவா வந்திருந்தார்கள்? தங்களுக்குத் தெரிந்த உறவுமுறைப் பையன் வெளியூரில் நல்ல உழைப்பில் இருப்பதாகவும் அவனுக்கு அவளை மணமுடிக்கக் கேட்டும் வந்திருந்தார்கள். அவளுக்கு அதிர்ச்சி. அவளது திட்டங்கள் தான் எத்தனை? மேற்படிப்பு படிக்க வேண்டும், உறுதியாக தன் காலில் சமூகத்தில் அந்தஸ்தான ஒரு நிலையில் நிற்க வேண்டும், சமூகத்தில் மனிதர்களைப் புரிந்துகொள்ள வேண்டும். இன்னும் எத்தனை? எத்தனை? இருபது வயதில்– அதுவும் உறுதியாகி தன்காலில் நிற்க ஒரு தொழிலைத் தேடிக் கொள்ளாமல் ஒரு திருமணமா? அதனை அவள் முற்றிலும் எதிர்த்தாள்.

அம்மாவிடம் தன் திட்டங்களை எத்தனை எத்தனை விரிந்த கற்பனைகளோடு கதைத்திருப்பாள். அதனைக் கேட்டு அவளை அம்மா எவ்வளவு மெச்சியிருப்பாள். ஆனால் தற்போது வாய்மூடி மௌனியாக இருப்பது எதற்காக? அவளுக்கு வியப்பாக இருந்தது. தன் ஒவ்வொரு சொல்லுக்கும் மதிப்பளித்து அதனைப் புரிந்து கொண்டு நடந்த அம்மாவா இது? ஏன் ஒரு வார்த்தைக்கூட இதனை எதிர்த்துக் கதைக்கவில்லை? அப்பாவின் பக்க உறவினர்கள் என்பதால் அப்பாவின் பக்க முடிவுக்கே விட்டு விட்டாரோ?

அப்பா என்ன செய்வார்? தன்பக்க உறவினர்களை பகைத்துக் கொள்வாரா? மாட்டவே, மாட்டார். சேலை நிறப் பொருத்தத்தையே ஊன்றிப் பார்க்காதவர் என் மனதில் இருக்கும் ஆசைகளையா புரிந்து கொள்வார்? அவளுக்கு வீடே அந்நியமாகிப் போனது.

உறவினர்களுடன் ஓர் அந்நிய உணர்வுடன் மாலைச் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தாள். என்னதான் இருந்தாலும் வீட்டுக்கு வந்தவர்கள் விருந்தினர்கள் அல்லவா? அந்த நேரதில் அப்பா உள்ளே வந்தார். கதிரையில் அமர்ந்தார். உறுதியான குரலில் கூறினார்:

"அவளுக்கு இப்பதான் இருபது வயது. அவளுக்கு இன்னும் மேல படிக்க-முன்னுக்கு வர விருப்பம். மேல படிக்கட்டும், முன்னுக்கு வரட்டும். திருமணம் என்கிறது எப்ப தேவையென்று உணர்கிறாளோ அப்ப பார்ப்பம். அது வரையும் காத்திருப்பம்."

அவள் விசித்து விசித்து அழத் தொடங்கினாள். அந்தப் புரியாத புதிருக்கு இவ்வளவு காலம் கடந்து, உறுதியான விடை கண்டுபிடித்துவிட்ட திருப்தியில் விசித்து விசித்து அழுதாள். ●



படிப்பகம்

www.padippakam.com

# ......ஆனா அது எவ்வளவு தப்புன்னு ஒனக்குத் தெரியுமா?

# மணமகன் தேவை!

விளம்பரத்தைப் பார்த்து குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கும் மணியனைப் பார்க்க பாண்டியனுக்கு வியப்பாக இருந்தது.

"டேய்! அந்த விளம்பரத்தில அப்பிடி என்னதான் ஜோக்கிருக்கு?"

"ஜோக்கில்லடா.." வாசிக்கிறேன் கேளு,

மணமகன் தேவை... 35 வயதான, நல்லொழுக்கமும் பண்பும் நிறைந்த, படித்த, உயர் தொழில் புரியும், விவாக ரத்துப் பெற்ற மணமகளுக்கு மணமகன் தேவை.."

வாசித்துவிட்டு மீண்டும் சிரிக்க ஆரம்பித்தான் மணியன். பாண்டியனுக்கோ ஒரே எரிச்சலாய் இருந்தது.



"இதுல சிரிக்கிறதுக்கு என்ன இருக்கு?"

"விளம்பரத்தை நல்லாக் கவனிச்சுப் பாருடா, விவாகரத்துப் பெற்ற ஒருத்தி எப்பிடிடா நல்லொழுக்கமும், பண்பும் நிறைந்தவளா இருக்க முடியும்?" கேட்டு விட்டு மிண்டும் சிரிக்க ஆரம்பித்தான் மணியன்.

மணியத்தின் விமர்சனம் பாண்டிய னுக்கு விசனத்தை மூட்டியது.

"நம்ம சமூகத்தில நிறையப் பேரு.. ஒன்ன மாதிரி... விவாகரத்துப் பெற்ற பொண்ணுங்கள "ஒரு மாதிரியாத்தான்" நெனைச்சிக்கிட்டிருக்காங்க. ஆனா அது எவ்வளவு தப்புன்னு ஒனக்குத் தெரியுமா? எத்தனையோ ஒழுக்கமான, நேர்மையான பெண்கள் சிலர் தவிர்க்க முடியாத காரணங்களுக்காக விவாகரத்துப் பெற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி யிருப்பது ஒனக்குத் தெரியுமா?" கேட்டு விட்டு விரக்தியாய் முகத்தைத் திருப்பிக் கொண்ட பாண்டியனைப் பார்க்க மணியத் திற்கு ஆச்சரியமாக இருந்தது.

"டேய்! நான் இந்த விளம்பரத்தை சும்மா விமர்சிச்சா ஒனக்கு ஏன்டா இவ் வளவு கோபம் வருது?"

"இது கோபம் இல்லடா! விரக்தி! ஒனக்கு அந்த விளம்பரத்தைச் செய்த பொண்ணைப் பத்தி ஏதாவது தெரியுமா? அவ ஏன் விவாகரத்துச் செய்தான்னு ஏதா வது தெரியுமா?.. ஆனா எனக்குத் தெரியும்டா!" ரகுவரன் ஸ்டைலில் பாண்டியன் பேசியதைக் கேட்ட மணியத்தின் முகத்தில் ஆச்சரிய ரேகைகள்.

"அந்த பொண்ணு கல் யாணம் பண்ணி 7 வருஷமா கியும் அவளோட புருஷன் அவமேல எந்த அக்கறையோ, ஆர்வமோ இல்லாம இருந் திருக்காரு. என்ன ஏதுன்னு விசாரிச்சுப் பாத்தப்போ, அவ ருக்கு ஒரு காதலி இருக்கிறது தெரியவந்திருக்கு. உடனே அந்தப் பொண்ணு அவ

**எம். சுரேஷ்**

புருஷனைக் கூப்பிட்டு "ஒங்களுக்குப் புடிச்சவங்களோட வாழ ஒங்களுக்குப் பூரண உரிமை இருக்கு. அதுக்காக இன்னொருத்தி மனதைப் புண் படுத்துறதுக்கு ஒங்களுக்கு உரிமையும் இல்லை அது நியாயமும் இல்லை. அதனால இந்த விவாகரத்துப் பத்திரத்துல கையெழுத்துப் போட்டுட்டு ஒங்க காதலியையே கல்யாணம் பண்ணிக் கிங்க"ன்னு சொல்லிட்டா... இதில ஏதாவது தப்பிருக்கா? சும்மா விவாகரத்து வாங்கின பொண்ணுங்க தப்பானவங்க என்ற நெனைப்பை மொதல்ல மாத்துக்கடா!"

பாண்டியனின் வார்த்தைகள் மணியத் திற்கு சாட்டையடியாய் விழுந்தன.

"இ... இந்த விசயம் ஒனக்கெப்பிடித் தெரியும்?"

"அந்தப் பொண்ணு என் மனைவியோட நல்ல நண்பியாம். மனைவிதான் சொன் னாள்."

அதற்குமேல் மணியம் ஒன்றும் பேச வில்லை!

# அந்த புதுப்புடவை

**~மது~**

ஊரெங்கும் ஒரே கலவரமாக இருந்தது. சாதாரணமாகத் தொடங்கிய போராட்டம் தான்! வழக்கம் போலவே, முதலாளி தொழி லாளி தகராறு தான்! இப்போது வன் முறையின் கைகளில் சிக்கிக் கொண்டிருந்தது. போராட்டத்தின் விளைவால், பக்கத்து நகரமே தனது அன்றாட நடவடிக்கை களிலிருந்து விலகிச் செயலிழந்து கிடந்தது.

இன்று நான்காவது நாள்:

இந்த நான்கு நாட்களாக, அவன் வேலைக்குப் போகவில்லை... அவன் வேலைக்குச் செல்ல ஆயத்தமாகத் தான் இருந்தான். ஆனால் வேலைதான் இல்லை. லாரி ஒன்றில் கூலிக்காரனாக வேலை செய்து வந்தான் அவன். தினக்கூலிதான்..:! இப்படி ஏதாவது நிகழ்ந்து வேலையில்லா விட்டால், அவனது குடும்பத்திற்கு சிரம தசை தான். அவன் மனைவியும் வெளியில் எங்கும் செல்லவில்லை. அவளும் அவனைப் போலவே, சித்தாள்-கூலி வேலைதான் செய்து வந்தாள். இரண்டு நாட்களாக அவளுக்கும் வேலையில்லை.

'போராட்டம் எப்போது ஓயும்?'- இரு வரின் எண்ணமும் இப்படித்தான் இருந்தது.

அவன்-அந்தக் குடிசைக்குள்ளாகவே முடங்கிக் கிடந்தான். தூக்கமும் வரவில்லை- கவலையும் மறையவில்லை. புரண்டு படுத் தான். 'ச்சே, என்ன பொழைப்புடா இது?' அவன் தனக்குள்ளாகவே கேட்டுக் கொண் டான்.

"இந்தா பிள்ளை, இதக் கொஞ்சம் பிடி..."

திரும்பிப் பார்த்தான்.

மனைவி கிழிந்து போன புடவை ஒன்றின் முனையைத் தன் மகளிடம் கொடுத்துப் பிடிக்கச் சொல்லி இருந்தாள். மறு முனையை அவள் பிடித்துக் கொண்டு ஊசி நூலால் தைக்கத் தொடங்கினாள். அவன் அந்தக் காட்சியையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். இப்போது அவள் உடுத்தியிருக்கும் புடைவைகூடக் கிழிந்துதான் போயிருந்தது. அந்தக் கிழிந்த புடைவையினால், மறைக்க வேண்டியவற்றை மறைக்க, அவள் ரொம்பவும் சிரமப் பட்டுத்தான் போனாள்.

அவளின் இளமையும்-வறுமையும் ஒன்று சேர்ந்து அவளுக்கு எதிரியாகவே இருந்தன. கிழிந்த பகுதியைச் சரிசெய்ய முயன்று, சில நேரங்களில் அதுவும் முடியாமல், தன்னைத் தானே நொந்து கொண்ட சம்பவங்கள் ஏராளம்.

முதல் நாள் தைத்து, 'இனி பயமில்லை' என தைரியமாகச் சென்றால் மறுநாளே மற்றோர் இடத்தில் டர்ரெனக்கிழிந்து அவள் மானத்தை வாங்கும். அந்தத் துணி தான் என்ன செய்யும்-பாவம்?.

அவளிடம் வரும்போதே அவை, ஏறக் குறைய நைந்துபோன நிலையில் தான் வருகின்றன. அதாவது, எந்த வீட்டிலாவது வேலை செய்து முடித்து வீட்டுக்குத் திரும் பும் போது, வெட்கத்தை விட்டு, தயக்கத் துடன் தலையைச் சொறிந்தபடி அந்த வீட்டுப் பெண்மணிகளிடம் பல்லைக்காட்டிக் கெஞ்சிக் கேட்டால், எப்போதாவது ஒரு பழைய சேலையை அரைகுறை மனத்தோடு- ஏதேனும் முணுமுணுத்தபடியே தருவார்கள். அப்படித்தானே அவள் இதுவரை தன் சேலைகளை வாங்கியிருக்கிறாள்?

அவளுக்கும் நீண்டகாலமாகவே ஓர் ஆசை. சொந்தமாக ஒரு புதுப்புடைவை வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டும் என்று!

இரண்டு ஆண்டுகளாகின்றன-அவள் சொந்தமாக ஒரு புதுப்புடைவை வாங்கி! அதுவும் கடையில் போய் வாங்கியதில்லை! தெருவில் சைக்கிளில் வைத்து வியாபாரம் செய்யும் மூட்டைக்காரனிடம் வாங்கியது.

அறுபது ரூபாய் என பேரம் பேசி, இரண்டு மாதங்களுக்குள் தந்துவிடுவதாகப் பேச்சு! அந்த இரண்டு மாதங்களுக்குள் அறுபது ரூபாயை அடைக்க, அவள் ரொம்ப வும் சிரமப்பட வேண்டியதாயிற்று! அந்த அறுபது ரூபாய்க் கடனை அடைத்து முடித்து அவள் பெருமூச்சு விட்ட சில நாட்களில், அந்தப் புடைவையும் கொஞ்சம் பெருமூச்சு விட்டுவிட்டது. ஒரு நாள் தண்ணீரில் முக்கி எடுத்து, கல்லில் அடித்துப் பிழிகையில், அது கன்னாபின்னாவென்று பல இடங்களில் கிழிந்து போயிற்று.

'உழைத்துச் சம்பாதிக்காத காசு உடலில் ஒட்டாது' என்பார்கள். ஆனால், அவள் வாழ்வில் உழைத்துச் சம்பாதித்த காசே உடலில் ஒட்டாமல் போய்விட்டது. கடைசியில் "அந்தத்துணி மூட்டைக்காரன் ராசியில்லாத வன். அவனிடம் துணி வாங்கினால் இப் படித்தான் ஆகும்..." என்று பக்கத்து வீட்டுக் காரி சொன்னதை உண்மையென நம்பி, தன்னைத்தானே தேற்றிக் கொண்டாள்.

> "அவளின் இளமையும் வறுமையும் அவளுக்கு எதிரியாகவே இருந்தன."



அதற்குப் பின்னால்-இரண்டு ஆண்டுகளா கின்றன!-இன்னும் ஒரு புதுப்புடைவைக்கு வக்கில்லை!..

ஒருமுறை-

பக்கத்து ஊர்ச் சந்தையில் புதிதாக ஒரு புடைவை வாங்கலாம் என முப்பது ரூபாய் வரை உண்டியலில் போட்டுச் சேர்த்து வந்தாள். அப்போதுதானா அவள் கணவனுக்கு உடல்நிலை சரியில்லாமல் போக வேண்டும்? நான்குநாள் காய்ச்சலில் தர்ம ஆஸ்பத்திரி மருந்துகள் பலனளிக்காமல், டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்துகளுக்கே அவள் அந்த உண்டியல் பணத்தைச் செலவு செய்து, மேலும் கடன் வாங்கவும் நேரிட்டுவிட்டது.

அவளது சிரமங்கள், அவனுக்குத் தெரி யாமல் இல்லை. ஆனால்-கிடைக்கின்ற வரு மானம், அந்தச் சிறுகுடும்பத்தின் வயிற்றுப் பாட்டிற்கே சரியாகி விடுகிறதே- அவன்தான் என்ன செய்வான்? மாதத்தில் முப்பது நாளும் வேலை செய்தால், இந்தத் துன்பத் திற்கு ஒரு வடிகால் கிடைக்கலாம். ஆனால் ஒரு நாள் வேலை கிடைத்தால் மறு நாள் கிடைப்பதில்லை. அந்த ஒரு நாள் கூலியிலும், அவனின் மாலை நேர மயக்கத்திற்கு வேறு பணம் வேண்டும். 'குடிக்கக் கூடாது' என்றுதான் நினைத்துக் கொண்டிருப்பான். ஆனால், அதை ஒரேயடியாகத் தொலைத்துத் தலைமுழுகத் தெரியாமல் தவித்தான்.

எல்லா நாட்களிலும் ஏதாவது ஒரு வேளையாவது அந்த வீட்டின் அடுப்பு புகைகிறதே-அதுவே தாங்கள் செய்த பெரும் பாக்கியம் என்று எண்ணிக் கொள்வார்கள் இருவரும்!

இப்போது-,

அவள் தன்னுடைய கிழிந்து போன சேலையைத் தைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், அவனுக்கு என்னவோ போலிருந் தது. இத்தனைக்கும்- அவள் வாய் திறந்து ஒரு நாள் கூட அவனிடம் எதுவும் கேட்ட தில்லை. இருந்தும், அவனின் மனச்சாட்சி அவனை உறுத்தாமல் இல்லை, நீண்ட நேரம் படுத்துக் கிடந்தவன், என்ன நினைத் தானோ-என்னவோ? திடுமென எழுந்தான்! சாறத்தை ஒழுங்காகக் கட்டிக் கொண்டான். கொடியில் தொங்கிக் கொண்டிருந்த சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டான். ஓர் அழுக்குத் துண்டை எடுத்துத் தலையில் கட்டிக் கொண்டான்.

"ஊரெல்லாம் ஒரே கலாட்டாவாக இருக்கு! இந்த நேரத்திலே நீ எங்கே போறே? பேசாம படு..." என்றாள் அவள்- மனைவி!

"இல்லேடி... லாரி முதலாளி வீட்டுக்குப் போயிட்டு வந்திடறேன்.. என்னைத் தடுக் காதே புள்ளே...!"

"ஊர்க் கலாட்டா விலே, நீ மாட்டிக்கா தேய்யா.. சொன்னாக் கேளு.."

"பயப்படாம இருடி...! நான் பத்திரமாத் திரும்பி வந்திருவேன்....!"

அவள் எவ்வளவு சொல்லியும், அவன் கேட்கவில்லை. வெளியில் சென்று விட்டான். நகரத்தில் அவனுக்குத் தெரிந்த ஒரு துணி மூட்டைக்காரன் இருந்தான். எப்படியாவது அவனிடம் கேட்டு ஒரு புதுப்புடைவை வாங்கிக் கொண்டு வரவேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டுதான், வெளி யில் போயிருந்தான் அவன்.

நகரில் கலவரம் ஓயவில்லை. நகரம் முழுவதிலுமே பொலிஸ்காரர்கள் ரோந்து சுற்றிக் கொண்டு இருந்தார்கள். அவனின் நோக்கத்தை அவர்கள் அறிவார்களா என்ன? சந்தேகக் கேசில், அவனைப் பிடித்துக் கொண்டார்கள்!.. கலவரக்காரர்கள் பட்டிய லில் அவனும் ஒருவனானான்! அவன் எவ்வளவோ சொல்லியும், பொலிஸ்காரர்கள் ஏற்கவில்லை.

கலவரம் எப்போது ஓய்வது? அவனுக்கு விடுதலை எப்போது கிடைப்பது? அவன் அமைதியாக அழுதான்- சிறைக் கம்பிகளுக் குப் பின்னால்!...

இரண்டு நாள்கள் ஓடியிருக்கும்!

அந்தக் குடிசைப்பகுதிக்கு அமைச் சர்கள்- அதிகாரிகள் எல்லாம் படை யெடுத்தார்கள்! கலவரத்தின் பொழுது தீ விபத்தில் கருகிப்போன குடிசைப் பகுதி அது.

ஒவ்வொரு வீட்டிற்கும் ஐந்து கிலோ அரிசி, ஒரு வேட்டி- ஒரு புடைவை எனக் கொடுத் தார்கள்.

அவளுக்கும் அவை கிடைத்தன.

ஆமாம்!- அவளுக்கும் ஒரு புதுப் புடைவை கிடைத்தது. ஆனால் அவள் அதற்காகக் கொஞ்சம்கூட மகிழ்ச்சி அடைய வில்லை- அழுதாள்!

கணவன் சிறையில் இருக்கிறானே என்கிறகவலை மட்டுமல்ல....!

ஊரில் நடந்த கலவரத்தில் எரிந்து போன அவள் குடிசையையும் எண்ணித்தான் அழுதாள்.

இப்போது அந்தப் புதுப்புடைவை ஒன்று மட்டுமே அவளுக்குச் சொந்தமாக இருந்தது!- வேறு துணிகளே இல்லை! எல்லாமே அவளின் குடிசையோடு சேர்ந்து எரிந்து போயிருந்தன!

"ஐயோ, தெய்வமே!" -அவள் அழுது கொண்டே இருந்தாள்!

# கராத்தே மாஸ்டர்!

**-பிரபு சங்கர்-**

> தயங்கி நின்றாலும் பாஸ்கருக்கு சந்தேகம். வத்சலா தன்னை மிரட்டுவதற்காக அப்படி சொல்லியிருப்பாளோ...!

"இதோ பார், மிஸ்டர்! என் பின்னால வருகிற வேலையெல்லாம் வச்சுக்காதே.. என் அப்பாகிட்டச் சொல்லி உன்னைப் பீஸ்பீஸா ஆக்கிடுவேன், ஜாக்கிரதை!"- தன்னையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டி ருந்த பாஸ்கரைப் பார்த்து, ஒரு நாள் மிரட்டினாள் வத்சலா.

"ஏன், ஒங்க அப்பா என்ன பெரிய கராத்தே வீரரோ?"- பாஸ்கர் இளக்காரமாகக் கேட்டான்.

"வீரரா? மாஸ்டர், தெரிஞ்சுக்க!" என்ற வத்சலா தன் வீட்டை நோக்கி நடந்தாள், வேகமாக.

அவனுடைய பின் தொடர்தலில் தயக்கம் தெரிந்தது.



'நல்ல வேளை; வெறும் மாஸ்டர்னு சொல்லி வெச்சேன். கராத்தே மாஸ்டர்னு அவன் நினைச்சுகிட்டான்! அவர் தமிழ் மாஸ்டர்னு தெரியாத வரைக்கும் நல்லதுதான்' என்று நினைத்து ஆறுதல் பட்டுக் கொண்டாள் வத்சலா.

தயங்கி நின்று விட்டாலும் பாஸ்கருக்குச் சந்தேகம்: 'வத்சலா சும்மா தன்னை மிரட்டு வதற்காகச் சொல்லியிருப்பாளோ? அது உண்மை இல்லை என்றால்?'

மறுநாள் காலை அவள் கல்லூரிக்குப் புறப்படும் சமயம், அவளுடைய வீட்டி லிருந்தே அவளைப் பின் தொடரத் திட்ட மிட்டான். அதற்காக, பத்துநிமிடம் முன்னதா கவே போய், அவளுடைய தந்தை உண்மையா கவே கராத்தே மாஸ்டர்தானா என்று தெரிந்து கொள்ளவும் முடிவு செய்தான்.

தெருவை ஒட்டியே வீட்டுச் சுவரும் அமைந்திருந்தது. சுவரில் ஒரு ஜன்னல். அதன் அருகே போய் நின்று கொண்டான் பாஸ்கர். கீழ்ப்பகுதி கதவால் மூடப் பட்டிருந்தது. மேற்பகுதியில் கதவு திறந்திருந்தாலும் ஸ்க் ரீன் துணி மறைத்திருந்தது. இவன் தலை மட்டத்திற்கு ஜன்னல் கீழ்க் கதவு இருந் தது. எட்டிப் பார்க்கவும் பயமாக இருந்தது. பக்க வாட்டில் போனால் வீட் டின் முன் கதவு. அதுவும் சாத்தப் பட்டிருந்தது. 'ஜன்னலுக்குக் கீழேயே நின்று காத்திருப்பது; வத் சலா வெளியே வந்ததும் பின் தொடர்ந்து போவது; அவளுடைய தந்தையைப் பற்றிய விவரங்களைப் பின் னால் தெரிந்து கொள்வது என்று முடிவு செய்தான்.

அப்போது-

'ஊ...ஆ...' என்ற சப்தம் மெலிதாக அவன் காதில் விழுந்தது.

திடுக்கிட்டான் பாஸ்கர். கராத்தே மாஸ்டர் பயிற்சி மேற்கொள்கிறாரோ? அதோடு 'டக், டக்' என்ற சப்தம் வேறு கேட்டது. எதையோ கைகளால் உடைக்கிறார். இதுவும் கராத்தே பயிற்சி தானோ?

உள்ளே வத்சலாவின் அப்பா ஒரு ஸ்டூலின் மேல் நின்றிருந்தார். சுவரில் ஆணி அடித்துக் கொண்டிருந்தார். அவ்வப் போது, சுத்தியால் ஆணியை அடிப்பதற்குப் பதிலாக, ஆணியைப் பிடித்துக் கொண்டி ருந்த விரல்களை அடித்துக் கொண்டார். வலி தாங்க முடியாமல், பெரிதாகக் கத்தி னால், 'இந்த ஆணி அடிக்கத் துப்பில்லே, உங்களுக்கு?' என்று மனைவி வேறு பழிப்பு காட்டுவாளோ என்று பயம். அதனால் வலியை மெல்லிய 'ஊ...ஆ...' ஒலிமூலமே வெளியிட்டுப் பொறுத்துக் கொண்டார்.

ஆணி அடித்து முடித்த பிறகு, 'வத்சலா' என்று மகளைக் கூப்பிட்டார். குரலில் கர்ண கடூரம் தெரிந்தது.

வெளியே நின்றிருந்த பாஸ்கர் பயத்தை உணர்ந்தான்.

'மாஸ்டர், கத்திக்கத்தி மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து, தொண்டை பயங்கரமாகக் கட்டிகிட்டது போலிருக்கு. இல்லேன்னா, ஆளே பயங்கரமானவர் தானோ?'

'என்னப்பா?' என்று கேட்டுக் கொண்டே வந்தாள் வத்சலா. 'ராத்திரில போய், ஓசில கிடைக்குதுன்னு நிறைய ஐஸ்க்கிரீம் சாப்பிட வேண்டியது; இப்போ தொண்டை கட்டிக் கிட்டு எல்லாரையும் பயமுறுத்த வேண்டி யது!' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டாள்.

'ஆணி. அடிச்சுப் படம் மாட்டிட்டேன். அம்மாகிட்ட சொல்லு. குளிக்கப்போறேன்' என்றார் அப்பா.

"சரிப்பா" என்றாள் வத்சலா.

வெளியே நின்றிருந்த பாஸ்கருக்கு அவர் சொன்னது சரியாகக் காதில் விழவில்லை. 'ஆளை அடிச்சுப் போட்டுட்டேன்; குளிக்கப் போறேன்' என்று ஏதோ சொன்னது போல... என்ன செய்வது என்று புரியாமல் நின்றிருந் தான்.

திடீரென்று வத்சலாவின் அப்பா உள்ளேயிருந்து கத்தினார்; 'வத்சலா! நேரமாயிட்டுது; என்னோட பிளாக் பெல்ட்டை எடுத்துவை.'

பிளாக் பெல்ட் என்று குரலைக் கேட்ட தும் 'இவர் கராத்தே பயிற்சியில் தான் பிளாக் பெல்ட் வாங்கியிருக்கிறார் போலிருக் கிறது. ஆள் பெரிய ஆளாத்தான் இருப்பார் போலிருக்கிறது. இவர் கையிலே நாம கிடைச்சா நம்ம கதி அதோ கதிதான்.' என்று பயந்து போனான்.

அவனுக்கு உடலே ஆடியது. 'என்னது, பிளாக் பெல்ட்டா? ஐயோ, நம்மளைக் கையாலேயே ஒரு வழியாக்கிடுவான் இந்த ஆளு, என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டே ஒலிம்பிக் வீரனாய் ஓட்டம் பிடித்தான். கூடவே இனிமேல் இன்னொரு பெண் யாரையாவது பின் தொடர்வ தென்றால் முதலில் அவளுடைய அப்பா, அண்ணா எல்லாம் யார் யார், என்பதைத் தெரிந்து கொள்வது முக்கியம் என்றும், முடிவு செய்து கொண்டான்.

"ஏதோ ஒரு பெல்ட் இருந்தா போதாதா? அது என்ன பிளாக் பெல்ட்ன்னு குறிப்பா...?" தேடுவதில் எரிச்சலுற்று, வத்சலா கேட்டாள்.

"அதாம்மா ஒயிட் சர்ட், ஒயிட் பேண்ட் டுக்கு மேட்சா இருக்கும். பிரவுனை விட அதுதான் எடுப்பா இருக்கும்" அப்பா பாத்ரூமிலிருந்தே பதில் சொன்னார்.

"சரி, சரி.. எடுத்து வைக்கறேன்" என்றாள் வத்சலா.

அன்றும் சரி, அதற்குப் பிறகும் சரி, பாஸ்கர் தன்னைத் தொடர்ந்து வராதது கண்டு ஆச்சரியமும் நிம்மதியும் அடைந்த வத்சலா, தன் சாமர்த்தியத்தைத் தானே மெச்சிக் கொண்டாள்.



படிப்பகம்

www.padippakam.com

# இரண்டாம் இடத்தில்

என்ன பெயர்? குறளரசு. இயற்பெயரா. இடையிலே வந்த பெயரா? இடையிலே வந்த பெயர்தான்! ஏன் வந்தது? திருக்குறளை எழுத்தெண்ணிப் படித்து, மனதிலே பசுமரத்தாணிபோல் பதித்து வைத்துக்கொண்டதால் வந்த பட்டப் பெயர்.

**"கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்**
**கற்ற செலச்சொல்லு வார்"**

"கற்றவரின் முன்பாக, தாம் கற்றவைகளை அவரவர் மனதில் பதியுமாறு சொல்ல வல்லவர், கற்றவர் யாவரிலும் கற்றவராக மதிக்கப்படுவார்" அந்தக் குறளின் அர்த்தம் அதுதான்.

குறளரசு மதிக்கப்பட்டான். குறளரசு குறள் வழி நடக்கக் கற்றுக்கொண்டான்.

நிறைகுடம் தழும்பாது. கற்றவன் தனக்கு எல்லாமே தெரியும் என்று கொட்டமடிப்பதில்லை. நுனிப்புல் மேய்ந்தவன்தான் வானம்வரை துள்ளிக்குதிப்பான். குறளரசு குதிக்கமாட்டான்.

"எத்தனை கற்றும் என்ன? நீ ஏழைதானே குறளரசு?" என்று கேட்டால் உடனே முறுவலிப்பான்.

"என்ன நீ, எங்காவது செல்வத்தை ஒளித்து வைத்திருக்கிறாயோ? சொல்லி விடு அப்பனே?"

"ஆம் வைத்திருக்கிறேன்?" அதே முறுவல்.

"என்னப்பா, எங்கே வைத்திருக் கிறாய்?"

தன் நெஞ்சைத் தொட்டுக் காட்டிச் சொல்வான்; "இங்கே!"

"என்ன அங்கே?"

"அழிவில்லாத செல்வம். தேடும் பொருளும், சேரும் செல்வமும் போகும், வரும், போகும்! இது ஒன்றுதான் வந்து விட்டால் போகாது. என்றும் நிரந்தரமாய் தங்கிவிடும். இதன் பெயர் கல்விச் செல்வம்!"

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை."**

குறளரசு சொன்னதின் பொருள் உள்ள குறள் அதுதான்.

கேள்வி கேட்டவன் காணாமல் போய் விட்டான். குறளரசு நகைத்தபடி நடையைக் கட்டினான்.

நீராடவேண்டும்போல இருந்தது. சலிப்பேயில்லாதது நீராட்டம் ஒன்றுதான். தேகம் முழுவதும் குளிர்ந்தநீர் தழுவி வருடிச் செல்லும்போது ஏற்படும் சுகமே தனிதான்.

குளக்கரை எதிரே தெரிந்தது. நடையை துரிதப்படுத்தினான். அப்போது தான் குறளரசுவின் செவியில் அந்த அபயக்குரல் விழுந்தது.

குளத்திலிருந்துதான் குரல் கேட்டது. ஓடினான். குளத்துக்குள் நீரில் மூழ்கி தத்தளித்துக் கொண்டிருந்தாள் அவள்.

ஆபத்துக்கு பாவமில்லை, நீரில் குதித்து அவளைத் தூக்கினான். இளம்பெண். தாமரை ஒன்று தண்ணீருக்குள் இருந்து தன் கரத்தில் வந்ததோ? என்று நினைத்தான்.

'மனமே அலையாதே!' கட்டளையை மனதுக்குள் சொன்னபடி கரைக்கு வந்தான்.

நல்லவேளை அவள் மூர்ச்சையாகவில்லை. கண்களை விரித்து அவனை நோக்கினாள்.

அப்போதுதான் அவள் மூர்சையாக வில்லை என்று புரிந்தது குறளரசுக்கு.

புரிந்தும்கூட அவளை தன் கரங்களில் இருந்து கீழே. இறக்கிவிட மறந்து போனான்.

அவள் விழிகள் வீசிய பார்வையில் உயிரே போனது போல் இருந்தது.

"கண்ணும் கண்ணும் சந்தித்தபோது, எமனைக் கண்டது போலிருந்ததே எனக்கு! 'என்று வியந்தான். திருவள்ளுவர் துணைக்கு வராமல் இருப்பாரா?

**"பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்**
**பெண்டகையால் பேரமர்க் கட்டு"**

எமன் என்று சொல்வார்கள். செவி வழியே கேள்விப்பட்டதுண்டு. நேரில் அறியேன். இனி அறிந்தேன். எமன் யார்? இதோ இவளுடைய விழிகள்" என்பதுதான் அந்தக் குறளின் பொருள். குறளின் பொருள் பொருந்தக் கண்டதும் பூரித்துப்போனான்.

அடுத்ததாக அவன் பார்வை போன இடம் பொல்லாத இடம். நீரில் மூழ்கியதாலும், அவன் கைகளில் ஏந்தப்பட்டு கிடந்ததாலும் மேலாடை சற்று விலகியிருந்தது. அழகுகள் தம் திரட்சியை பெருமையோடு நிமிர்ந்து பறைசாற்றிக்கொண்டிருந்தன.



இத்தனை நெருக்கத்தில் , அதுவும் கைக்கெட்டிய கனியாக தன் கரத்தில் ஒரு பெண். குறளரசுக்கு புது அனுபவம்.

குறளரசுக்கு குறவஞ்சி இலக்கியத்தில் ஒரு பாடல் நினைவுக்குள் முட்டியது.

"கச்சுக்குள் தித்திச்சுக் கிடக்குமிரு..' வேண்டாம்.. நினைவை நிறுத்தினான். விடுவாரா வள்ளுவர். அவன் நினைவுக்குள் இருந்து ஒரு குறளை எடுத்து நீட்டினார்.

**"கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்**
**படாஅ முலைமேல் துகில்"**

பொல்லாத குறும்பர்தான் திருவள்ளுவர். என்ன சொல்கிறார் என்று புரிந்ததும் குறளரசுக்கு வியப்பு மேல் வியப்பு.

மாதரின் காயாத மார்பழகுகள்மீது அணிந்த ஆடையானது, மதம்பிடித்த ஆண்யானையின் மேல் போடப்பட்ட முகபடாம் போன்றதாம்.

கைகளில் கட்டழகி. சிந்தனையில் திருக்குறள். பால் நிலவு போல அவள் முகம். திருக்குறளில் மூன்றாம்பால் அவன் மனதில்.

'முறையற்ற செயல்' என்றது மனதின் ஓரத்தில் ஒரு குரல். சட்டென்று சுயநினைவுக்கு வந்தவன் போல அவளை தரையில் இறக்கினான்.

புள்ளிமான் தரையில் குதித்தது. எள்ளிநகையாடுவதுபோல அவனைப் பார்த்தது. குறளரசு வெட்கப்பட்டான்.

அவள் இயல்பாகவே வாயாடி. ஆயினும் அனுபவம் புதிது. ஆண் கரம் பட்டதால் தேகமெங்கும் பரவிய அதிர்வுகள் புதிது. அதனால்தான் வாயடைத்துப்போயிருந்தாள்.

இப்போது கொஞ்சமாக துணிவு மீண்டது. குறளரசின் திடமான தோற்றமும், தன்னை ஒரு சின்னக் குழந்தைபோல அவன் கைகளில் ஏந்தி நடந்துவந்த பாங்கும் அவளுக்கு பிடித்துப்போனது.

தன் அழகு அவனை சிறிதுநேரம் மகுடிக்கு கட்டுப்படும் பாம்புபோலாக்கி விட்டதை நினைத்தபோது உள்ளூர மகிழ்ச்சியாகவும் இருந்தது.

## இலக்கிய நயம்

### தருவது-ரசிகன்

வாய்ப்புக் கிடைத்தும், தனிமை இருந்தும் அதனை பயன்படுத்த நினையாமல், தன்னை கீழே இறக்கிவிட்டதுமல்லாமல், வெட்கப் பட்டும் நிற்கும் அவன் செயல் அவளிடம் நல்லபிப் பிராயத்தை தோற்றுவித்தது.

"நன்றி!" என்றாள். அவன் பேசவில்லை.

"பேசவராது, பார்வையை மட்டும் வீச வருமோ?" அடிபட்டதுபோல அவளைப் பார்த்தான் குறளரசு.

"மீட்டதற்கு நன்றி. மீட்டும் வீணைபோல என்னை கைகளில் வைத்திருந்திருந்தீர்களே, அதற்கு என்ன சொல்லலாம்?"

"தவறுதான்!"

"என்ன தவறுதான்? தண்டனை தந்தால் வாங்கிக்கொள்வீர்களோ?"

'என்ன தண்டனை' என்பதுபோல அவளைப்பார்த்தான். அவனைப் பார்க்க அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

"என்ன பதிலே இல்லை!"

"எ.. என்ன தண்டனை?"

"கண்களை மூடிக்கொள்ள வேண்டும். என்ன நடந்தாலும் நான் சொல்லும்வரை திறக்கவே கூடாது. என்ன சரிதானா?"

பதில் சொல்லவில்லையே தவிர, கண்களை மூடிக்கொண்டான். அவனை நெருங்கினாள். கழுத்தை தன் கரங்களால் வளைத்து அவன் உதட்டை தன் இதழ்களால் ஈரப் படுத்தினாள். 'இச்' ஒலி செவியில் விழுந்தது. இன்பநாதம். சிந்தையில் எதிரொலித்தது. கண்களை மட்டும் திறக்கவேயில்லை.

தானே கிடைத்த தேன். தானேவந்து தழுவிய தென்றல். வானே உன்னைத் தொட்டதுபோல உயர்ந்தேன் இன்ப உணர்வாலே. இனிய சுவையாலே. மனதில் மகிழ்வு நிரம்பியது.

சட்டென்று அவன் தேகம் குளிர்ந்தது. விலகியது தென்றல். தழுவலை மெல்ல தளர்த்தியது தங்கச் சிலை.

அவன் காதுக்குள் அவள் சொன்னாள்:

"கண்களை திறக்க வேண்டாம். சொல்வதை மட்டும் கேளுங்கள்; என் பெயர் பூவழகி. நாளை வருவேன் இதே இடத்தில்! இந்த பூ இனி உங்கள் இதயப்பூ. இரவில் கனவில் சந்திப்போம். மாலைவரை நினைவில் தித்திப்போம். பின்னர் நேரில் சந்திப்போம்.."

சருகுகளின் ஓசையில் இருந்து அவள் துள்ளி ஓடுவது அகக்கண்ணுக்குப் புரிந்தது. கண்களைத் திறந்தான்.

குறளரசு தன்னைக் கிள்ளிப்பார்த்துக் கொண்டான். எல்லாம் நிஜம்தான்!

எதிரேயுள்ள மரத்தில் ஒரு அனிச்சப்பூ பூத்திருந்தது. நேரே அதனிடம் போனான்.

"பூவே, அனிச்சப் பூவே! நீயும் மென்மைதான். வாழ்க நீ, ஆனாலும் மென் பூவே ஒன்று சொல்லவா, உன்னிலும் மென்மை என் காதலியவளே! எனவே உனக்கு மென்மையில் இனிமேல் முதலிடமில்லை."

தான் சொன்னதில் தவறு இருக்குமோ? திருவள்ளுவரிடம் கேட்டான். தவறு இல்லை யென்றார். ஒரு குறள் நீட்டினார்.

**"நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்**
**மென்னீரள் யாம்வீழ் பவள்"**

1. குறள்-722-அதிகாரம்-73.
2. குறள்-400-அதிகாரம்-40.
3. குறள்-1083-அதிகாரம் 109.
4. குறள்-1087-அதிகாரம் 109.
5. குறள் 1111-அதிகாரம்-112.



சுகனோவ்-மனைவி-மகள்

# ரசியாவில் கம்யூனிசம் திரும்புமா?

ரசியாவில் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி யெல்ட்சினுக்கும், சுகனோவுக்கும் தான் கடும்போட்டி நிலவுகிறது.

சுகனோவ் கம்யுனிஸ்ட் கட்சி வேட்பாளர். ரசியாவில் கம்யுனிசத்தை ஒழித்துக்கட்டியதால் என்ன பலன் ஏற்பட்டது? பட்டினிதான் மிஞ்சியது என்று பிரசாரம் செய்தார் சுகனோவ். கம்யுனிச ஆட்சியைவிட யெல்ட்சின் தலைமையிலான ஆட்சி மோசம் என்று சுகனோவ் சொல்வதை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

அதனால்தான் யெல்ட்சினுக்கு எதிரான 10 வேட்பாளர்களில் சுகனோவ் மட்டுமே நேரடிப் போட்டியாளராக மாறியிருக்கிறார்.

சுகனோவ் ஜனாதிபதியானால் ரசியாவில் மீண்டும் கம்யுனிசம் வந்துவிடும். அவர் வெற்றிபெறுவதை எப்படியாவது தடுத்தாக வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கிறது அமெரிக்கா.



யெல்ட்சின்-எப்படியாவது வெல்வதே குறி

ஜனாதிபதித் தேர்தலில் முதல் சுற்றில் யெல்ட்சின்தான் முதலிடத்தில் இருக்கிறார். ஜூலை 7ம் திகதி இரண்டாவது சுற்று. அதற்கிடையே ஜனாதிபதித் தேர்தலில் முதல் சுற்றில் மூன்றாவது இடத்தில் வந்த வேட்பாளரை தனது பக்கம் எடுத்துக்கொள்ள யெல்ட்சின் வலை விரித்துள்ளார்.

மூன்றாவது இடத்தில் இருப்பவர் ஜெனரல் அலெக்சாண்டர் லெபேட். அவருக்கு தனது அரசில் முக்கிய பதவி கொடுக்க முன்வந்துள்ளார் யெல்ட்சின். பதவி மட்டுமல்ல, வேறு வகையிலும் ஜெனரல் அலெக்சாண்டர் கவனிக்கப்படுவார். அமெரிக்காவும் பின்னணியில் இருப்பதால் யெல்ட்சின் பணபலம், அதிகார பலம் இரண்டையும் வைத்து விளையாடுகிறார்.

ரசிய ஜனாதிபதித் ,தேர்தலில் யெல்ட்சின் மீண்டும் ஜனாதிபதியாகக்கூடும். அதற்கு வாய்ப்பு இல்லாமல் இல்லை.

ஆனால், ரசியாவில் கம்யுனிஸ்டுக்கள் மீண்டும் செல்வாக்குப் பெற்றுவருகிறார்கள் என்பதைமட்டும் மூடி மறைக்க முடியாது.

சுகனோவ் இம்முறை தோல்வி கண்டாலும் வெற்றியை நோக்கிய முதல்படியாகவே அது இருக்கும் என்று விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

ரசிய ஜனாதிபதித் தேர்தலின் ஆரம்பத்தில் இருந்தே அமெரிக்கா அங்கு ஒரு கண் வைத்திருந்தது.

பத்து வேட்பாளர்களை களத்தில் இறக்கி வாக்குளை பிரிப்பதிலும் யெல்டசினுக்கு ஆலோசனை சொன்னது அமெரிக்காதான்.

ரசியாவில் மீண்டும் கம்யுனிசம் வந்தால், மறுபடியும் தனக்கு போட்டியான வல்லரசாக மாறிவிடுமோ என்ற பயம்தான் அமெரிக்காவை ஆட்டிப்படைக்கிறது.

யெல்ட்சின் வெற்றிபெற்றால் அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் முதல் ஆள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன்தான்.

# சிந்தியா பதில்கள்

**★ டியர் சிந்தியா! அரசியல் மேடைக்கும் நாடக மேடைக்கும் உள்ள வேறுபாடு?**
கோ. ரகு, நெடுந்தீவு.
நடிப்பென்று சொல்லாமல் நடிப்பது; நடிப்பு என்று சொல்லி நடிப்பது.

**★ விலை இறங்கும் பொருள் இப்போது ஒன்றுமே இல்லையா?**
எம்.எஸ்.எம். முஹம்மது அலி, வெல்லம்பிட்டி.
இருக்கவே இருக்கிறது- மனித உயிர்.

**★ ஏமாற்றுதல், ஏமாறுதல் இதில் எது அதிகம் பாதிப்பு?**
பாதிமா நிஹானா பாருக், உலப்பனை எஸ்டேட்.
ஏமாற்றுதல்தான். ஏமாற்றப்பட்டவர்கள் விழித்துக் கொண்டால் எலும்பு எலும்பாக பாதிக்கப்படவேண்டியதுதான். பின்னி எடுத்துவிடுவார்கள் பின்னி.

**★ திரையுலகைப் பொறுத்தவரை தற்போது ரஜினியின் செல்வாக்கு எப்படி?**
எஸ்.எம்.நுவைஸ் சன்பர்,கிண்ணியா-06.
தயாரிப்பாளர்கள் கியூ வரிசையில் நிற்கிறார்கள், பை நிறையப் பணத்தோடு. இரசிகர்கள் காத்திருக்கிறார்கள், என்ன விலை கொடுத்தும் ரிக்கெற் வாங்க. இந்தி சூப்பர் ஸ்டார் அமிதாப்கூட தனது படத்தை ரஜினியை வைத்துத்தான் துவக்கிவைத்திருக்கிறார். அம்மாவின் உற்சாகத்தில் சும்மா ஒரு துள்ளுத்துள்ளிய ஆச்சியை ரஜினி சொல்லாமலேயே படங்களில் இருந்து தூக்கி ஒரே போடு. செல்வாக்கின் வீச்சு புரிகிறதல்லவா?

**★ டியர் சிந்தியா! பூலான்தேவி ஒரு கொள்ளைக்காரி என்று தெரிந்தும் அவரை ஏன் ஆதரித்தார்கள்?**
க. உதயகுமாரன், மகிழூர்.
அவரை எதிர்த்துப் போட்டியிட்டவர்கள் பயங்கரமான அரசியல் கொள்ளைக்காரர்கள் என்று மக்கள் நினைத்திருப்பார்கள். மற்றொரு தகவல்- "எழுதப் படிக்க தெரிந்திருந்தால் அமைச்சராகியிருப்பேன்," என்று வருத்தப்பட்டிருக்கிறார் பூலான்தேவி. நேரம்தான்.

**★ இந்தியப் பிரதமர் தேவகவுடா இலங்கைப் பிரச்சனையில் தலையிடுவாரா?**
பொ. ராஜசிங்கம்,சம்மாந்துறை-02.
தலையிட தலை தப்பவேண்டுமே! எப்போது உருட்டலாம் என்று காங்கிரஸ் நேரம் பார்த்துக்கொண்டிருக்கிறது. தலையை பாதுகாக்கவே அவருக்கு நேரம் சரியாகி விடும்.

**★ முன்னாள் தமிழக முதல்வர் செல்வி-ஜெயலலிதா இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?**
எஸ். பத்மப்பிரியா, ரக்ராவ எஸ்டேட்.
சசியைத்தான் கேட்கவேண்டும்.

**★ காதல் இனிமை எதிலிருக்கிறது?**
ஆர்.நிம்ஸாக், மன்னார்.
காதலை காதலோடு அனுபவிப்பதில்!.

**★ ஹலோ சிந்தியா! வாஜ்பாய்யின் ராஜினாமா பற்றி என்ன நினைக்கிறீர்?**
ஜனுல், மாத்தளை.
ராஜினாமா செய்வதற்கு நாள்குறித்துவிட்டுத்தான் அவர் பதவிப்பிரமாணமே செய்துகொண்டார். என்றாலும் ஒரு இலாபம்: வாஜ்பேய் என்ற பெயருக்கு முன்பாக, முன்னாள் பிரதமர் என்ற பட்டம் மட்டும் நிரந்தரம்.

**★ கார்லோஸ் நம்நாட்டுக்கும் வந்ததுண்டா?**
எம். ஆர்.எம். பைறூஸ், குருநாகல்.
வந்ததில்லை. தீவிரவாத தமிழ் அமைப்புக்களோடு தொடர்புடைய சிலரை சந்தித்தது உண்டு என்று தகவல்.

# மலையகமக்கள்

**★ எம்.ஜி.ஆரின் ஆட்சிக்காலத்தில் ஆஸ்தான கவிஞரை நியமித்தது மாதிரி தற்போதைய முதல்வர் நியமித்திருக்கிறாரா?**
ஏ.பி.சதாசிவம், தெகிவளை.
கலைஞரே ஒரு கவிஞர்தானே.

**★ மனதில் காதல் உருவாகக் காரணமாக இருப்பது எது?**
ப. வரதராஜன், தம்பிலுவில்-01.
தலைமைச் செயலகம்தான். (மூளை.)

**★ தாய்க்கு மகன் செய்யவேண்டிய உதவி என்ன?**
ஹியோன் றஸீஸ், ஹேனமுல்லை.
கேள்வி தப்பு; கடமை என்ன என்று கேளுங்கள். 'இவன்தான்டா மகன்' என்று பூரிக்கவைப்பதுதான்.



**★ சாதி நோய்க்கு மருந்து எது?**
இரா.சசிகுமார், அப்புகஸ்தன்னை-05.
வசதிப்பட்டால் நாலு சாத்துக் கொடுக்கலாம்.

**★ கமல் அரசியலில் ஈடுபடாமல் ஒதுங்கியிருப்பது ஏன்?**
ஜெ. ராணி, வத்தளை.
கடைசியாக 'இந்தியன்' வரை கமலின் பல படங்களில் அவர் விரும்பும் அரசியலை சொல்லியிருக்கிறாரே. அதுவே அரசியலில் ஈடுபட்டமாதிரித்தானே. அவர் ஏன் அரசியல் வாதியாகவில்லை என்று கேளுங்கள்? நாற்றம் ஒத்துவராதாம்.

**★ இதுவரை மனிதனைத் துரத்தும் ஆசை என்ன?**
எஸ். விஜயன், அக்கரைப்பற்று-07.
வேறென்ன, வாழும் ஆசைதான்!.

**★ வினோத் காம்ளி இந்திய அணியில் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்படு வாரா?**
ஏ.பிரசாத், கொழும்பு-06.
அந்தப் பேச்சுக்கே இடமில்லை. அணியிலிருந்து ஒரே தூக்காக தூக்கிவிட்டார்கள். ஒழுக்கமின்மையே நடவடிக்கைக்கு காரணம் என்றும் அறிவித்துவிட்டார்கள்.

**★ காதல் காட்சிகளில் நெருக்கமாக நடிக்கும் நடிகைகளுக்கு கூச்சம் வராதா?**
கே. பானுமதி, இரத்தினபுரி.
கூச்சமா? ஹி....ஹி.....ஹி.

**★ வளர்ந்துவரும் நடிகைகளில் தங்களைக் கவர்ந்தவர் யார்?**
சி. மகேந்திரா, பேராதனை.
பேபி ஷாலினி. அவர்தானே வளர்ந்து கொண்டிருக்கிறார். ஏனையநடிகைகள் ஏற்கெனவே எல்லாவகையிலும் வளர்த்திதானே!

# ஒன்றுபட்டால்?

**★ கிழக்கு மாகாணத்தில் தனிக்கட்சி தொடங்கும் செய்தி கேள்விப்பட்டீரா?**
ஆ. கார்த்திக், மட்டுநகர்.
ஜனநாயக நாட்டில் கட்சி தொடங்க என்ன தடை? ஜோராக ஆரம்பிக்கட்டுமேன். ஆனால், ஒரு விஷயம், இரவல் முதலீட்டில் கடைவிரிக்கும் முயற்சி என்றும் ஒரு தகவல் நம் காதில் விழுந்தது. தகவல் உண்மையானால் கடையை திறக்கும் வேகத்தில் சாத்திவிட்டு நடையைக் கட்டவேண்டியும் இருக்கும்.

**★ மலையக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட பலன் என்ன?**
வி. ராமையா. ஹட்டன்.
தொண்டாவைத்தான் கேட்க வேண்டும். பாவம் தொழிலாளர்கள்!, அவர்களுக்கு பலன் தெரியவாய்ப்பில்லை.

**★ டியர் சிந்தியா! மலையக மக்கள் ஒன்றுபட்டால்- தம்நிலை உணர்ந்து விழித்தெழுந்தால் என்னாகும்?**
சோ.வடிவுக்கரசன், அப்புத்தளை.
அவர்களின் முதுகில் அமர்ந்திருக்கும் அரசியல் வாதிகள் கீழே விழவேண்டியிருக்கும். விழுந்து கிடந்தபடி "ஐயோ வன்முறை, தீயசக்திகள் ஊடுருவல்" என்றெல்லாம் கூக்குரல் போடவேண்யடியிருக்கும்.

**★ சிந்தியா! மலையக மக்கள் முன்னணி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**
வே.சூரியப்பிரகாசம், தலவாக்கல.
இவர்களும் அவர்கள் மாதிரித்தானா என்று நினைக்கவைக்கிறார்களே தவிர, இன்னமும் 'அட வித்தியாசமாகப் போகிறார்களே' என்று வியக்கவைக்கவில்லை.

**★ ஜே.வி.பி. மீண்டும் வளர்ந்து வருகிறதாமே?**
ஜெ. ரத்னா, கொழும்பு-10.
வாய்ப்பு இல்லாமல் இல்லை. ஆனாலும் முன்புபோல வளர்த்துச் செல்ல ஏற்ற நபர் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால் சம்ப எதிர்காலத்தில் பெரிதாக வளர வாய்ப்பேயில்லை.


படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 36

## காமவெறியேறி கலங்கும் இலங்கை வேந்தன்

இராமரையும் இலக்குவனையும் தன்னெதிரிலேயே புகழ்ந்தமை இராவணனுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சிய தன்மையிலிருந்தது; அவனுடைய கண்கள் மேலும் சிவந்தன; மீசைகள் துடித்தன. தனது வலது காலைத் தூக்கி நிலத்திலே உதைத்தான். இதுவே அண்ட சராசரங்களையும் நடுநடுங்கவைத்தது. சூர்ப்பணகையும் ஒரு கணம் துணுக்குற்றாள். இருப்பினும் சூர்ப்பணகையால் புகழப்பட்டவர்கள் யாவர் என்ற அடையாளம் அப்போது இராவணனுக்குத் தெரிந்திருக்கவில்லை. வேறு இரு மனிதர்களைப் பற்றியே அவள் குறிப்பிடுவதாகக் கருதியிருந்தான்.

"கேவலம்! இரு நரர்களைப் பற்றி என்னிடமே புகழ்ந்துரைக்கிறாயா? அதுவும் உன் அங்கங்களை வெட்டி அலங்கோலமாக்கிய அந்தப் பேடிகளைப் பற்றி உன் வாயாலேயே புகழ்ந்து பேச உனக்கு வெட்கமாயில்லை? சூர்ப்பணகை! யார் அந்த மாநிடப் பதர்கள்? உன்னை ஏன் அலங்கோலப்படுத்தினார்கள்? எங்கே இருக்கிறார்கள் அவர்கள்?"

"அண்ணா! கொஞ்சம் பொறுமையாக இருந்து நான் கூறும் சமாச்சாரமனைத்தையும் கேள்! அதன்பின் நீ என்ன செய்ய வேண்டுமோ அதனைச் செய்! அண்ணா! தண்டகாரணியத்தில் அழகிய மான் ஒன்றைக் கண்டேன்; அந்தப் பொன் மான் அந்தக் காட்டுக்குரிய மானல்ல; அந்த மான் உன் சிங்காரத்தோட்டத்திலே துள்ளி விளையாடி, உன்னை என்றும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்த வேண்டிய அற்புதமான மான்....! அதிசயமான மான்....!"

"என்ன தங்கையே! என்ன புதிர் போடுகிறாய்? உன் அங்கங்களை அறுத்து அவலட்சணமாக்கியவர்களைப் பற்றிக் கேட்டால், நீ என்னவோ என்னை மானோடு விளையாடச் சொல்லுகிறாயே?"

### தண்டனைக்கான காரணம்

இவ்வாறு கூறிய இராவணன் சற்றுக் கோபம் தணிந்தவனாக- மீண்டும் சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டான். இதுதான் தருணம் என்று சூர்ப்பணகை தன் கதையைத் தொடங்கினாள்: "அண்ணா! நான் கூறுவது ஒரு பெண்ணரசியைப் பற்றி! அவளைப் போன்ற அழகுள்ள தேவதை இந்த அவனியில் மட்டுமல்ல, இந்த அண்ட சராசரம் எங்கணுமே காணமுடியாது. எந்த ஓவியனாலும் வரைய முடியாத சர்வலட்சணமும் பொருந்தியவள்; மின்னலிடமிருந்துதான் அவள் தன் இடையைப் பெற்றாள்; பொன்னிற மேனியைப் பெற்ற அவளுடைய தோள்கள் மூங்கிலால் செய்யப்பட்டன. அந்த இரு மாநிடருடன் தான் இந்தப் பேரழகி தண்டகாரணியம் வந்திருக்கிறாள். அவளை உனக்காகவே கவர எண்ணிச் சென்றேன். அப்போதுதான் இக்கொடிய தண்டனைக்குள்ளானேன்!" என்று விம்மி விம்மி அழுதவண்ணம் கூறலானாள்.

இராவணன் சகல வல்லமைகளையும் பெற்றவன். இலங்காபுரியில் மட்டுமல்ல, இந்திரலோகத்திலும் கந்தர்வலோகத்திலும் பாதாளலோகத்திலுமிருந்தெல்லாம் பேரழகுப் பாவையரைப் பொறுக்கி எடுத்து வந்து தன் அந்தப்புரத்தில் வைத்திருந்தான். இச்சையேற்படும் போதெல்லாம் மெச்சத் தகுந்த

### இராஜகுமாரி

அழகுப்பதுமைகளுடன் சுகித்திருந்து சல்லாபிப்பது அவனுடைய பொழுது போக்கு. அப்படியிருந்தும் தன் தங்கை தொடுத்த வர்ணனைச் சரங்களால் நிலை தடுமாறத் தொடங்கினான்.

அப்போதுதான், அகம்பன் வந்து கூறிவிட்டுப் போன தகவல்களை நினைத்துப் பார்த்தான். தண்டகாரணியத்துக்குப் பொறுப்பாகவிருந்த கரன், தூடணன் மற்றும் திரிசிரன் ஆகியோர் கொல்லப்பட்ட கதையினை அகம்பன் கூறினான். தங்கை சூர்ப்பணகையின் அவயவங்கள் அறுபட்ட கதையினை அவன் கூறவில்லை. இராமரைப் பற்றியும் அவன் மனைவி சீதையைப் பற்றியும் கூறிய அகம்பன் சீதையின் பேரழகை வர்ணித்தமையினால் தனக்கு ஏற்பட்ட மன மயக்கத்தையும் மீண்டுமொருமுறை எண்ணிப் பார்த்தான். அகம்பன் வர்ணித்த அழகியும் சூர்ப்பணகையால் வர்ணிக்கப்பட்ட பெண்ணும் ஒருத்தியாகத்தான் இருக்குமோ என்று ஒரு கணம் இலங்கேஸ்வரனின் எண்ணத்தில் உதித்தது.

'அப்படியானால் பல வருடங்களுக்கு முன்னர் தன் உள்ளத்தில் பெரும் கிளர்ச்சியை- மின்வெட்டுப் போல் ஏற்படுத்திவிட்டு மறைந்த அந்தச் சீதையாகத் தான் இருக்க வேண்டும். அவள் சீதையானால், தன் தங்கையை மானபங்கப்படுத்தியவர்கள், தம்பிமாரையும் அரக்கர் படையினையும் அழித்தவர்கள்- இராமரும் அவன் தம்பி இலக்குவனுமாகத் தானிருக்க வேண்டும்!'

இலங்கை நாட்டதிபனின் எண்ணங்கள் எங்கெங்கோ சுற்றிச் சுழன்றடித்து இறுதியில் சீதை என்னும் அழகியின் உருவத்தை மனக்கண்முன் நிறுத்தின.

"தங்கையே! நீ கண்ட அந்த அழகியைப் பற்றி மேலும் கூறுபார்க்கலாம்," என்றான்.

### பெண்ணே போற்றும் பெண்ணின் பேரழகு



"அண்ணா! சொர்ண சக்கரம் போன்ற அடிவயிற்றையுடைய அவளின் கொங்கைகள் சிறப்புப் பொருந்திய பொன்னாலான செம்மையுடன் கூடிய செப்புப்போன்றிருக்கின்றன; அவளுடைய பொற்பாதம் படுவதற்கு இந்தப்பூமி பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். அவளுடைய பெயர் சீதை."

'சீதை' என்ற வார்த்தையைக் கேட்டதும் இராவணனுடைய தேகம் புல்லரித்தது. 'ஒருவர்பின் ஒருவராக வந்து அவளுடைய பேரழகினை என்னிடம் வர்ணிக்கின்றனரே! அது மட்டுமல்லாமல் ஒரு பெண்ணே மற்றுமொரு பெண்ணை வர்ணிப்பதென்றால், அவள் இணையில்லாத அழகியாக இன்று வளர்ச்சியடைந்து விட்டிருப்பாள்.....' இவ்வாறு இராவணன் கருதிய போது அவனுடைய காதுகளில் சூர்ப்பணகையின் வர்ணனை மென்மேலும் மோகத்தீயை நெய்யூற்றிக் கிளர்ந்தெழவைத்தது. சூர்ப்பணகை தொடர்ந்தாள்:

**காமரம் முரலும் பாடல், கள், எனக்**
**கனிந்த இன் சொல்;**
**தே மலர் நிறைந்த கூந்தல்: தேவர்க்கும்**
**அணங்கு ஆம் என்னத்**
**தாமரை இருந்த தையல், சேடி**
**ஆம தரமும் அல்லள்;**
**யாம் உரை வழங்கும் என்பது**
**ஏழைமைபாலது அன்றோ**

(ஆரணிய காண்டம்-3135)

**பொருள்:**

**காமரம் என்ற இனிமையான பண்ணிசை போன்ற தேன் சுவை சொட்டும் இனிய சொற்களையுடைய சீதையானவள். தேன் சொரியும் மலர்களைத்தன் கூந்தலிலே சூடியிருக்கின்றாள். இவள் தேவருலகப் பெண்களாலும் போற்றத்தக்கவள்; செந்தாமரைப் பூவில் வாசம் செய்யும் திருமகள் கூட இவளுக்குத் தோழியாக இருப்பதற்கும் தகுதியற்றவள். அப்பேற்பட்ட பேரழகியின் சிறப்பினை வர்ணிக்க முயல்வது என் அறியாமையுடன் கூடிய செயலாகும்.**

❋ ❋ ❋

சீதையின் எழிலை தன் தமையனிடம் எடுத்துக்கூறும் சூர்ப்பணகையாக மாறிநின்று கவியரசர் அத்தெய்வீக அழகை வர்ணிக்கத் தொடங்குகிறார். மொத்தம் 13 பாடல்களில் சீதையின் அழகினை அங்கம் அங்கமாக கம்பநாட்டாழ்வார் விபரிக்கிறார். ஒவ்வொரு பாடலும் தீஞ்சுவைக் கனியாக- தேவாமிர்தமாகத் தித்திக்கின்றது.

### சூழலை மறந்த வேந்தன்

சீதையைப் பற்றிய எண்ணம் இலங்கையர்கோனின் இதயத்திலே காமத்தீயை வளர்த்துவிட்டது. தனது தம்பிமாரையும் அரக்கர் படையையும் அழித்தொழித்தமையினால் இராமர் மீது அவன் கொண்ட கோபம் எங்கோடி மறைந்ததென்று தெரியவில்லை. தன் அன்புத்தங்கை சூர்ப்பணகையின் அலங்கோலங்கண்டு ஆர்த்தெழுந்த அவனுடைய சினம் சொல்லிக் கொள்ளாமலே விலகிச் சென்றது. தன்னிலை மறந்தவனானான். தன் கடமைகளனைத்தையும் துறந்தவனானான். ஒரேயொரு தடவை-மின்வெட்டு நேரம் மட்டும் மிதிலை மாளிகையில் தன் கண்முன்னே தோன்றி மறைந்த அந்தக் காரிகையின் உருவினை உள்ளத்தில் உறைய வைத்துக் கொண்டான்.

காமன் பொல்லாதவன்; அவனுடைய- தாமரை, மா, அசோகு, நீலோற்பலம் மற்றும் முல்லை ஆகிய மலர்ப்பாணங்களுக்கு இலக்கானவர்கள் தங்களையும் தங்கள் சுற்றுச் சூழலையும் மறந்துவிடுகின்றனர். எத்தகைய வைராக்கிய உள்ளத்தவர்களும் மன்மதன் பாணங்களுக்கு எதிராகத் தாக்குப் பிடிக்க முடியாது. இதே நிலைதான் இலங்கைவேந்தன் இராவணனுக்கும் ஏற்பட்டது. அவனுடைய மனத்திலே சீதை மட்டுமே குடியேறிவிட்டாள்.

சூர்ப்பணகை இறுதியாக ஒரு வார்த்தை கூறினாள்: "அண்ணா! அந்தப் பேரழகுப் பெட்டகத்தை எப்படியாவது உன் அந்தப்புரத்தில் மட்டுமல்ல, உன் உள்ளமெனும் அரியாசனத்திலும் ஏற்றிவைத்து மகிழ்ச்சி அடைந்துவிடு. ஆனால் அந்த இராமனைப் பிடித்துக் கொண்டு வந்து என்னிடம் தந்துவிடு; அவனுடன் நான் விளையாட வேண்டும்."

❋ ❋ ❋

இடம், பொருள், ஏவல் ஆகிய முறைகளை தருணமறிந்து பிரயோகித்து, தன்னுடைய திட்டத்தைப் பக்குவமாகத் தன் தமயனிடம் சூர்ப்பணகை வெளியிட்டுவிட்டாள். சீதையின் பால் அவன் காமவெறி கொள்ள வைத்ததில் வெற்றியும் கண்டாள். இராவணனோ மிகவும் பரிதாபத்துக்குரிய நிலையினை அடைந்தான். ஊன் உறக்கமும் மறந்து தனது எண்ணத்திரையெல்லாவற்றிலும் சீதையின் எழிலுருவை கற்பனையில் வரைந்து ஆராதிக்கலானான்.

இராவணனுடைய நிலையினை கவிச்சக்கரவர்த்தி பல பாடல்களில் படம் பிடித்துக் காட்டுகிறார். சீதையின் மீது அவனுக்கு ஏற்பட்ட காதல் காமத்தீயாக மாறிக்கொழுந்து விட்டெரிகிறது அத்தீயின் வெப்பம் தாங்காமல் இராவணன் படும் பாட்டினை புலவர் பெருமான் விரிவாக விபரிக்கிறார்.

❋ ❋ ❋

சூர்ப்பணகை வரும்போது அரசவை கூடியிருந்தது. சீதையைப் பற்றிய வர்ணனை கேட்டு அவையிலிருந்த அனைவரையும் மறந்து தனியனாக வெளியேறிப் பூங்காவினுள் புகுந்தான் இராவணன். அங்கும் அவனால் வெப்பம் தாங்கமுடியவில்லை. பித்துப் பிடித்தவன்போல் பிதற்றவும் தொடங்கிவிட்டான். பகல் பொழுதில் பகலவன் தான் சூடாக இருந்தான் என்றால் இரவானதும் உதயமாகும் சந்திரனும் அவனுக்கு அனலாகக் கொதித்தது.

பனியும் கொதி நீர்த்துளிகளாக அவனை வேகவைத்தது. சேடிப் பெண்கள் கொண்டு வந்து தூவிய பலவர்ண மலர்களும் அவனுடைய தேகவெப்பத்தைத் தணிக்கவில்லை. அவனுடைய தேகத்தின் உஷ்ணத்தைத் தணிப்பதற்காக அவனுடைய தேகமெங்கும் பூசப்பட்ட சந்தனக் குழம்பும் செந்தணல் போல் அவனை வதை செய்தது.

இராவணன் சீதைபால் கொண்ட அசையின் தன்மையினை வெளிப்படுத்துவதற்காக புலவர் பெருமான் எண்பது பாடல்களுக்கு மேல் எழுதியுள்ளார். அத்தனையும் காமரசம் பொதிந்த செய்யுள்களாக அமைந் தமையினாலன்றோ, தமிழ்நாட்டில் ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற 'கம்பராமாயண சொற்போர்' மேடையில் "கம்பராமாயணம் பக்திக் காவியமல்ல, இன்பக்கிளர்ச்சியூட்டும் காமரசம் பொதிந்த காவியம்" என்று பேரறிஞர் அண்ணா வாதிட்டு வெற்றி வாகை சூடினார்.

(தொடர்ந்து வரும்)

---

**இராமாயணப் போட்டி : 34**

**சரியானவிடை:- மாரீசன்.**

1. ஆர். ரஜனி. பால்ம்கார்டன் எஸ்டேட், இரத்தினபுரி.
2. ஏனஸ்ற். ஜான்சி. இல. 52/3, கொரியா அவனியூ, சிலாபம்.
3. நா. சௌபாக்கியலட்சுமி. சிறினிவார புரம், பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர்.
4. எஸ். சிந்துஜா. 23.என். புளொக், நவ்கம்புர, கொழும்பு-14.
5. பிரகாஷ். 43/35, தேவாநம்பியதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு-10.

**போட்டி இல. 36** கேள்வி:- சீதையின் எழிலைக் கவியரசர் எத்தனை பாடல்களில் வர்ணிக்கிறார்?

ஜூன் 29 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.36, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

---



## பயோ டேட்டா

பெயர்:- நிலமானவர்.
தொழில்:- சட்டத்தரணி
உபதொழில்:- தீர்வு யோசனைகளை தவணை முறையில் எழுதிக்கொடுப்பது.
பிடிக்காதது:- தமிழ்.
பிடித்தமானது:- ஆங்கிலம்.
நண்பர்கள்:- ஆட்சியில் இருப்பவர்கள்.
எதிரிகள்:- சொந்தக் கட்சிகளுக்குள்ளும்இருக்கிறார்கள்.
அனுபவம்:- பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி விடுவது. (ஜே.ஆர்.காலத்தில் இருந்து இன்றுவரை)
அதிஷ்டம்:- தேசியப்பட்டியலில் பதவி.
பொழுதுபோக்கு:- மனித உரிமைக் கூட்டங்கள், வெளிநாட்டுப்பயணங்கள்.
தகுதி- அப்பாவின் அரசியல்.
விழுப்புண்:- கால் தடுக்கி கீழே விழுந்திருந்தால் மட்டும்.
சந்தோசம்:- கட்சிப் போராட்டங்களில் கலந்து கொள்ளாமல், கட்சிப் பிரமுகரானது.
சோகம்:- தலைவராக முடியாதது.
இலட்சியம்:- 'டமில்' மக்களுக்கு தலைவராவது.
சமீபத்திய சாதனை:- தனக்கு துளியும் தொடர்பற்ற சாத்வீகப் போராட்ட வரலாறு பற்றி ஆங்கிலத்தில் எழுதி தமிழில் வெளியாகச் செய்தது.

---

## காதில பூ கந்தசாமி

## நான் வீரப்பன் பேசுகிறேன்

**சந்தனக் கடத்தல் மன்னன் வீரப்பன் சரணடைய விருப்பம் தெரிவித்துள்ளான் என்பது செய்தி. தமிழக முதல்வர் கருணாநிதிக்கு ஒரு ஆடியோ கசட்டில் தனது குரலில் பேசி செய்தி அனுப்பியும் இருக்கிறான். கசட்டில் என்ன பேசியிருப்பான் வீரப்பன் என்று கற்பனை செய்கிறார் நமது காதிலை பூ கந்தசாமி.**

**"பூலான்தேவி திருந்தலையா என்று கேட்பீங்க. அதான் அரசியலுக்கு போயிட்டாங்களே. இனி எப்படிங்க திருந்துறது?"**

தலைவா! தமிழினத்தின் தலைவா! நான் வீரப்பன் பேசுகிறேங்க. வணக்கமுங்க.

அம்மா போயிட்டாங்க என்று செய்தி கேட்டதும் புல்லரிச்சுபோயிட்டேங்க.

நான் காட்டிலே இருந்து கொள்ளை அடிச்சேன் என்றாங்க. அந்த அம்மா மட்டும் நாட்டிலே இருந்து கொள்ளை யடிச்சாங்களே, அது நியாயமுங்களா?

நான் சந்தன மரத்தை வெட்டினேன், வெட்டியதையெல்லாம் வியாபாரம் பண்ணினேன் என்னாங்களே. அந்த அம்மா சுந்தரத் தமிழர்களை வைத்து வியாபாரம் பண்ணினாங்களே, யாரு கேட்டாங்க.

நான் சொத்து சேர்த்தேனா. வளர்ப்பு மகனுக்கு வரலாறு காணாத திருமணம் நடத்தி வைத்தேனா? ஏதோ எங்க பிழைப்புக்கு மட்டும் சந்தன மரம் வெட்டி காசாக்கினோம். அது தப்புங்களா?

எனக்கு உடன்பிறவா சகோதரன் யாரும் கிடையாதுங்க. அதனால யார் பேரிலும் எனக்கு சொத்தும் கிடையாதுங்க.

சின்னம்மாவுக்கு அந்தம்மா நகை செய்து போட்டு அழகு பார்த்தாங்க. சொத்து சேர்த்து கொடுத்து சின்னம்மாவின் புன்னகையை பார்த்து ரசிச்சாங்க. யார் வீட்டு பணம். எங்கொப்புறான, எல்லாம் நம்மவீட்டு பணம். என் பணமும் அதிலே உண்டுன்னு சொன்னா நம்புவீங்களா?

சந்தனமரம் கடத்துறதுக்கு அம்மா கட்சி ஆளுங்க எத்தனைபேருக்கு கமிஷன் வெட்டியிருப்பேன். அதிலே ஒரு பாதி அம்மாவுக்குத்தானுங்களே.

நம்மையெல்லாம் எத்தனையோ அரசியல்வாதிங்க பூப்போட்டு கும்பிடனுங்கோ. அவங்களை சுக போகமா வாழவைக்கும் தெய்வங்கள் நாங்க தானுங்களே.

யாருங்கோ அந்த சுகன்யா சிறுக்கி. ஒரு கோடி கேட்டு நோட்டிஸ் ரெடி பண்ணி னாளாமே! மானம் போச்சுதாம். ஒரு கோடி வேணுமாம். அடி சக்கை. அப்படிபோடு என் ராசாத்தி, உன் மானம் ஆக ஒரு கோடி ரூபாய்தானே? சம்பாதித்தது போதாதா? அரசியல்வாதிகளுக்கு உன் சேவையை வழங்கித்தானே சம்பாதித்தாய். இந்த வீரப்பனிடம் மட்டும் உன் திறமையைக் காட்டாம பணம் கேட்குறியே நியாயமா? என்று கேட்டு அந்த சிறுக்கிக்கும் ஒரு கசட் அனுப்பியிருக்கேன்.

அரசியல் வாதிகளுக்கு இந்த வீரப்பன் ஒண்ணும் குறைச்சல் இல்லே என்னு புரு பண்ணனுமா. நோட்டிஸ் அனுப்பாதே. நீயே வா என்னு ஒரு போடு போட்டிருக்கேன். தப்புங்களா?

ஐயா! எனக்கு இந்த காட்டு வாழ்க்கை பிடிக்கலேங்க. என்னைவிட பெரிய பெரிய பெருச்சாளிங்க நாட்டிலே இருக்காங்க. நான் மட்டும் ஏங்க காட்டிலே கிடக்கணும்?

பூலான்தேவியக்கா பாராளுமன்றத்துக்கு போயிட்டாங்களாமே. மவராசியா இருக்கணும்.

பூலான் நாடாளுமன்றத்தில், வீரப்பன் நடுக்காட்டில். என்னங்க நியாயம்?

காட்டிலே இருந்து நாங்க கஷ்டப்பட்டு மரம் வெட்டி நாட்டுக்கு கடத்துறோம். அவனவன் எங்ககிட்ட லஞ்சம் வாங்கி நல்லாயிருக்கான்.

ஆட்சியிலே இருந்து கொள்ளையடிச்சா கமிஷன் வைப்பீங்க. காட்டிலே இருந்து ஏதோ வயிற்றுப் பாட்டுக்காக நாலு மரம் கடத்தினா நம்மை பிடிச்சு உடனடியாக சிறையில போடுவீங்க. அதாங்க எந்த கொள்ளைக்காரனும் திருந்தறதே இல்லை.

பூலான்தேவி திருந்தலையா என்னு கேட்பீங்க. அதான் அரசியலுக்கு போய்ட்டாங்களே. இனி எப்படிங்க திருந்தறது?

பொய் சொல்லணும், புருடாவிடணும், முதுகுல குத்தணும், குடிகாரன் பேச்சுமாதிரி இராவுக்கு ஒண்ணு, விடிஞ்சா ஒண்ணு பேசணும். அதாங்களே அரசியல்.

வெளியே வந்து நிம்மதியா திருந்தி இருக்கணும் எண்ணுதான் பூலான் தேவியும் நினைச்சிருப்பாங்க. அரசியல்வாதிகள் பயங்கரமாக கொள்ளையடிச்சுகிட்டு பத்திரமாக இருப்பதை பார்த்திருப்பாங்க. மனம் மாறியிருக்கும். பழைய தொழிலை புதிய வழியிலை செய்யப் புறப்பட்டுட்டாங்க.

ஆனா, ஒரு வித்தியாசமுங்க, நாங்க கொள்ளையடிச்சா அதிலே ஒரு பாதியை ஏழைங்களுக்கு கொடுப்போமுங்க. அரசியல்வாதிகள் கொள்ளையடிக்கிறதிலை ஒரு வெள்ளிக்காசுகூட ஏழைங்க கையிலே சேராதுங்க. ஏன்னா, அவங்க கொள்ளையடிக்கிறதே ஏழைகளுங்கிட்டேதானே. அதுதாங்க டிபரண்டு.



வீரப்பன் கொள்ளைக்காரன், கொடுமைக்காரன் என்றாங்களே, ஒரு ஏழை, ஒரே ஒரு ஏழை வயிற்றிலேகூட நான் அடிச்சேன் எண்ணு சொல்ல முடியுமா, யாருக்கோ சேரவேண்டிய சொத்தை சுருட்டினேன் எண்ணு சொல்லமுடியுமா?

சத்துணவு போடுறோம் எண்ணு, முட்டை போடமாட்டான். முட்டை போட்டதா சொல்லி கணக்கு எழுதிப்புட்டு பணத்தை பையிலே போட்டுக்குவான். அவன்தாங்க அரசியல்வாதி.

மருந்து வாங்குவதில் ஊழல், சுடுகாடு அமைக்கிறதிலும் ஊழல் என்று கொடிகட்டி பறந்தாங்களே அம்மா. பிடிச்சு உள்ளே போட முடிஞ்சுதா உங்களாலே. மகாராணி மாதிரி இருக்கிறாங்க. உடன்பிறவா தோழியோடு இருக்கிறாங்க.

வேணாங்க, சொல்ல நினைச்சா சொல்லிக்கிட்டே போவலாமுங்க.

நான் பேச்சுவார்த்தைக்கு தயாரா இருக்கேன். பேச்சுவார்த்தை நன்றாக நடந்திச்சு எண்ணு வையுங்க, நான் ஆயுத ஒப்படைப்புக்கு தயாராக இருப்பேன்.

முதல்கட்டமாக ஒரு மூணு கோடி ரூபா தேவைப்படுதுங்க. புது நோட்டா வேணாம். பழைய நோட்டாவே இருக்கட்டும்.

நான் நாட்டுக்கு வந்தா என்னோட மூணு பாதுகாவர்கள் மட்டும் நவீனரக துப்பாக்கிவைத்திருக்க அனுமதி வேணுமுங்க.

அரசியல்வாதிகள் யாரும் என்கிட்ட நெருங்காம பார்த்துக்குங்க. ஏன்னா அவங்க வாடை பட்டு எனக்கும் அரசில்வாதியாகும் ஆசை வந்திடக்கூடாது பாருங்க.

தொடர்ந்து வற்புறுத்தினா என் லெவலுக்கு எம்.பி.தேர்தலில் மட்டும்தான் போட்டியிட சம்மதிப்பேன்.

வாழ்க வளர்க.

நன்றிங்க. கசட்டை ஆஃப் பண்ணுங்க.




படிப்பகம்



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11


# வானமே எல்லை



← தடி ஊன்றிப் பாய்தலில் பெண்களும் கலந்து கொள்ளலாம் என்பதற்கு 1994இல் தான் சர்வதேச தடகள விளையாட்டு சம்மேளனம் அங்கீகாரம் தந்தது.

பிரிட்டனில் நடந்த தடகளப் போட்டியில் தடி ஊன்றிப் பாய்தலில் 3.80 மீட்டர் உயரத்தை தாண்டி சாதனை படைத்தார் கதறின் கேற் ஸ்ரப்பிள்ஸ். 1995 ஜூன் 25ல் இச் சாதனை படைக்கப்பட்டது.

25 வயதான கதறின் பிரித்தானியாவின் தொலைக்காட்சி நடிகையுமாவார்.

தடியூன்றிப் பாய்தலில் ஆண்களில் உலக சாம்பியன் செர்ஜி புப்கா. 11 தடவை முதலிடத்தில் வந்து அதுவே ஒரு உலக சாதனையாகவும் வைத்திருக்கிறார். அவர் தாண்டிய அதிகபட்ச உயரம் 6.11 மீற்றர். அவர் ரசியர். ஒரு தற்போது 'உக்ரேன்'காரர்.




அம்மன் ஜுவல்
AMMAN JEWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11


↓ மனோஜ் பிரபாகரை இந்திய கிரிக்கெட் சபை ஒரம் கட்டியபிறகு சாதித்தது என்ன? என்று கேட்டால் பலன் பூச்சியம்தான். மனோஜ் பிரபாகருக்கு பதிலாக வேறொரு வேகப் பந்து வீச்சாளரை இந்திய அணி உருவாக்க முடியவில்லை. இந்திய அணியின் இன்றைய நிலையைப் பார்த்தால் பழியை ஒரு சிலர் மீது மட்டும் போடுவது சரியல்ல. பாவம், மனோஜ் பிரபாகர். அவரை ஒதுக்கி வைத்ததை நியாயப்படுத்துவது என்றால் வேறு சிறந்த வேகப்பந்து வீச்சாளரை இறக்கிக் காட்டியிருக்க வேண்டும். முடியவில்லை.

# வானில் புதிது



▲ படத்தில் இருப்பது சூரியக் கதிரில் இயங்கும் குட்டி விமானம். ரிமோட் கொன்ரோலில் இயக்கலாம். இது ஒரு மாதிரி வடிவம்தான். வருங்காலத்தில் ஆட்களோடு பறக்கக்கூடியதாக இதனை விரிவாக தயாரிக்கலாம். சூரியக்கதிர் மூலம் 10 மணி 43 நிமிடம் 51 செக்கன்கள் வானில் பறக்கவிட்டு பார்த்தார்கள்.

இவ்வளவுநீண்ட நேரம் சூரியக் கதிர் இயக்கத்தில் பறந்த முதல் விமானம் இதுதான். அதனால் உலக சாதனை. ஜெர்மனியில் 1991 ஜூலை 10ம் திகதி இச் சாதனை விமானம் பறக் கவிடப் பட்டது. இதனை தயாரித்தவர் ஜூன் பியறி ஷில்க்நெச்த்.

# இறங்கிவிட்டால் வேகம்



← தற்போது இந்திய அணியில் ஸ்ரீநாத் கோபக்கார புயல். அடுத்தவர் வெங்கட் பிரசாத். மூன்றாவதாக ஒருவர் வந்திருக்கிறார். அவர் பரஸ் மாம்ப்ரே. பரஸ் மாம்ப்ரே பரவாயில்லை என்னுமளவுக்கு இருக்கிறாரே தவிர பிரபாகரின் இடத்தை நிரப்புவாரா என்பது சந்தேகம்தான்.

இங்கிலாந்துக்கு எதிரான சமீபத்திய முதலாவது டெஸ்ட் போட்டியில் ஸ்ரீநாத்தும், பரஸ் மாம்ப்ரேயும் முதலாவது இன்னிங்ஸில் துடுப்பாட்டத்திலும் தாக்குப்பிடித்தனர். ஸ்ரீநாத் 52 ரன்களை அடித்தார். மாம்ப்ரே 26 ரன்களை தன்பங்குக்கு சேர்த்துக் கொடுத்தார்.

ஸ்ரீநாத் தன் உடலை மேலும் கெட்டிப் படுத்திக் கொண்டால் அவரது வேகப்பந்து வீச்சு மெருகூட்டப்படும் என்பது பயிற்சியாளர்களது கருத்து. ஸ்ரீநாத் சுத்த சைவம். மாமிச வாடையே பிடிக்காது. பலரும் வற்புறுத்தியதால் இப்போதுதான் மீன், கோழி என்று மெல்ல மெல்ல ருசி பார்க்கத் தொடங்கியிருக்கிறார்.

பந்துவீச்சாளர்கள் பற்றாக்குறைதான் இந்திய அணியில் மிகப் பெரிய பலவீனம். ஸ்ரீநாத், பிரசாத் இருவரையும் விட்டால் வேகம் காட்டி மிரட்ட அணியில் வேறு ஆள் கிடையாது.

ஸ்ரீநாத், பிரசாத் இருவரும் தமது ஏனைய சக வீரர்கள் போல நட்சத்திர மதிப்பு பெற்றவர்களல்ல. விளம்பரங்கள் மூலம் சம்பாதிப்பதும் மிகக் குறைவு தான். பிரசாத் சமீபத்தில்தான் திருமணம் செய்திருக்கிறார். புது மாப்பிள்ளையாக இங்கிலாந்துக்கு சென்றவரை குளிர் பயமுறுத்தியது. என்றாலும் உற்சாக 'மூட்'டில் பந்தைக் கையாண்டார்.

ஸ்ரீநாத், பிரசாத் இருவருக்கும் உதவிகரமான ஒரு துணையாக இன்னொரு வேகப் பந்துவீச்சாளர் தேவை. அது ஒருவேளை மாம்ப்ரேயாகவும் இருக்கலாம்.

# ஓய்வதற்கு விருப்பமில்லை



← இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் அலன் லாம்புக்கு இப்போது வயது 42.

சர்வதேச போட்டிகளில் இருந்து ஒதுங்கினாலும், முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் தூள்கிளப்பிக் கொண்டிருக்கிறார்.

அலன்லாம்பின் சாதனைப் பட்டியல் வலுவானது. 79 டெஸ்ட் போட்டிகளில் 139 இன்னிங்ஸ் விளையாடி இருக்கிறார். 14 தடவைகள் சதம்போட்டிருக்கிறார். அதிக பட்ச ரன் குவிப்பு 142. மொத்தமாக சேர்த்துவைத்துள்ள ரன்கள் 4356. சராசரி 36.09.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் மொத்தம் 122 போட்டிகளில் கலந்து 118 இன்னிங்ஸ் விளையாடியிருக்கிறார். நான்கு தடவை சதம் போட்டிருக்கிறார். அதிக ரன் 118. மொத்தமாகச் சேர்த்தது 4010. சராசரி 39.31. 16 தடவை அவுட்டாகவில்லை. அற்புதமான துடுப்பாட்ட வீரர்.

அலன்லாம்ப் அணியில் இருந்தபோது ஏனைய வீரர்களுக்கு அவர்மீது சின்னப் பொறாமை. ரசிகைகள் பட்டாளம் அவரைத்தான் மொய்க்குமாம். 'கவர்ச்சிகரமான பையன்' என்றும் அழைக்கப்பட்டார். இப்போது சிங்கத்திற்கு வயதாகி விட்டது. அதனால் என்ன, மனதளவில் இன்னும் அவர் இளைஞர்தான்.

# மூக்கின் மேல் கோபம்



→ உலக கிரிக்கெட் வீரர்களில் தற்போதும் லாராதான் முதலிடத்தில் இருக்கிறார். 27 வயதான லாரா பந்தை அடிப்பதில் மட்டுமல்ல, மனதில் பட்டதை சட்டென்று வெளியில் கொட்டுவதிலும் வேகம் காட்டுகிறார்.

கடந்த ஆண்டு மேற்கிந்திய அணி இங்கிலாந்து சென்றபோது லாரா தகராறு செய்தார். அவரது சம்பளத்தில் 10 சதவீதத்தை தண்டமாக அறவிட்டது மேற்கிந்திய கிரிக்கெட் சபை. லாராவுக்கு மேலும் கோபம் வந்தது. அணியில் இருந்து ஒதுங்கி இருந்தார்.

கடந்த உலகக் கோப்பை போட்டியில் மீண்டும் அணியில் சேர்ந்து விளையாடினார். முன்னாள் கப்டன் ரிச்சி ரிச்சாட்சனோடு லாராவுக்கு எட்டாப் பொருத்தம். இருவரும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். அது போதாது என்று உலகக் கோப்பை போட்டி முடிந்து திரும்பிச் செல்லும்போது தமது அணியின் பயிற்சியாளரை திட்டித் தீர்த்துவிட்டார் லாரா.

பொறுமை இழந்த மேற்கிந்திய கிரிக்கெட் சபை லாராவை கடுமையாக எச்சரித்து கடிவாளம் போட்டிருக்கிறது. "இனிமேலும் லாரா தவறு செய்தால் கடும் தண்டனையை சந்திக்க நேரும்" என்று எச்சரித்துள்ளது.

லாரா முரண்டு பிடிக்காமல் வளைந்து கொடுத்திருக்கிறார். தனது தவறுக்காக லாரா மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

கோபத்தை கைவிட்டு பந்துகளில் மட்டும் தன் திறமையை காட்டு வாரேயானால் நம்பர் வன் இடத்தை லாரா தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வார்.

அணியில் அவர் பிரச்சனைப்படுவதால் ஆட்டத்தின் போதும் மூட் அவுட்டாகிவிடுகிறார்.

லாராவின் ஆட்டம் தொடர்பாக முன்னாள் வீரர் பிரட்மன் சொல்வது இது; அவுட்டானாலும் பரவாயில்லை என்ற ரீதியில் லாராவின் ஆட்டத்தில் ஒரு ஆவேசம் தெரியும்." தனது ஆவேசத்தை சக வீரர்கள்மீது காட்டாவிட்டால் சரிதான்.



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை களத்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்வார, தாவலையில் உள்ள சமனல அச்சகத்தில் ஜூன் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

www.padippakam.com
படிப்பகம்